# ஸ்ரீஅரவிந்த அன்னைக்கு ஆயிரம்

1. ஸ்ரீஅரவிந்த அன்னையே தரணிவாழ் மக்களின் உண்மை ஞானத் தெளிவினை அளித்து அவர்கள் உம்மை உணர்ந்திட அருளிட வேண்டுகிறோம்.

2. எமது தாயே பழுதிலா பார்வையில் உமது உணர்வினால் உயர உத்வேகம் உண்டாகி உலகே உம்மை நோக்கிட உணர்வித்தருள இறைஞ்சுகிறோம்.

3. தங்கத்தாயே எம்முள் இருக்கும் இருளை அகற்றி அருளினையும் பொய்மை நீக்கி மெய்மையும் பலவீனத்தை மாற்றி பலத்தையும், அச்சத்தை அகற்றி தைரியத்தையும் தந்தருள பிரார்த்திக்கிறோம்.

4. இனிய அன்னையே! பழுதான பழையன நீங்கி வலுவான புதியனவும், பழுதிலா பழைமை உமதாகி, வலுவற்ற புதியவை நீங்கி நிறைவான வாழ்வமைந்திட வேண்டுகிறோம்.

5. அச்சமே அகன்றிடுக நோயே நொடித்திடுக சோம்பலே சோர்ந்திடுக அறியாமையே ஸ்ரீஅன்னையை அறிந்திடுக

6. தயக்கமே தகர்த்திடுக மயக்கமே மடிந்திடுக. செயலே செழித்திடுக. துணிவே! ஸ்ரீஅன்னையை துணையென கண்டிடுக. பணிவே பாதையாகிடுக.

7. அன்பே! ஸ்ரீஅன்னையுள் லயித்திடுக ஆனந்தமே அவளின் தொண்டாகிடுக. ஆர்வமே அவளின் ஒளியாகிடுக. யோகமே அன்னையின் மூச்சாகிடுக. முக்தியே ஸ்ரீஅன்னையின் சக்தியாகிடுக.

8. நாற்திசையே நலன் பெறுக. தெற்கே மகேஸ்வரி அன்னையால் ஞானம் பெறுக. வடக்கே மகாகாளி அன்னையால் சக்திபெறுக. கிழக்கே மஹாலக்ஷ்மி அன்னையால் இசைவு பெறுக. மேற்கே மகா சரஸ்வதி அன்னையால் ஒழுங்கினை பெறுக. உலகே ஸ்ரீஅன்னையால் உய்வுறுக.

9. தூய்மையான புவியே தெய்வீக உணர்வு வெளிப்பட்டு மேன்மேலும் வளர ஸ்ரீஅன்னையின் சைத்திய தூய்மையுறுக.

10. ஏ ஆசையே, பேராசையே, நிராசையே! நிலை குலையாதே, அலையாதே, அல்லலுறாதே, ஆர்பறிக்காதே, அமைதியுறுக. ஸ்ரீஅன்னையுள் வாழ்க. நிறைவுறுக. குறுகி குறைவுறாதே. குதிக்காதே, கூர்ந்து, ஊர்ந்து, உள்ளார்ந்து உணர்வாகி உயர்ந்திடுக.

11. பதட்டமே பரிதவிக்காதே கலக்கமே கானல் நீராகிடாதே, நடுக்கமே நசுங்கிடாதே. ஸ்ரீஅன்னையை நோக்குக. ஊக்கம், உற்சாகம், நித்திய வாழ்வமைவதைக்காண்க.

12. நமது சைத்திய இருக்கையில் நிலைபெற்ற ஸ்ரீஅன்னையைக் கண்ட நமக்கு ஏது சந்தேகம்? நம்பிக்கைக்கே நம்பிக்கையூட்டும் அருள் ஊற்றின் மூலமே நமது உண்மை இருக்கையை கண்டிடுவோம், வென்றிடுவோம். சைத்திய உலகில் லயித்திடுவோம்.

13. காலமே கனவாகிடாதே. நேர்மையே நித்திய நேரமாகிடுக. நொடியே பலயுகவாழ்வினை வாழ்ந்திடுக. அழியா அமர இளநேரமே என்றும் எக்காலத்தும் குறைவிலா சைத்திய ஆனந்தமயமாகிடுக.

14. ஓ மனித இனமே இனிய அன்னையிடம் உம்மை அர்ப்பணிக்க ஆர்வமுறுக. அவளிடமிருந்து அபகரிக்க ஆசைப்படாதீர்கள்! அறியா, அசுர சக்தியல்ல நாம். அழியா அமர அவளின் குழந்தைகள். ஸ்ரீஅன்னையுள் ஆழ்ந்திவோம். நாம் கேட்பவை அற்பமாகிடும். அவளுள் ஒரு துளியானவருக்கு ஈடாக புற உலகில் எதுவும் ஈடில்லை எனலாம். ஆசையாவதா? அவளின் ஒரு துளியாவதா? தெளிந்து, தேர்ந்திடுவோம்.

15. ஸ்ரீஅன்னையிடம் லயிப்பதே உயர்ந்தது. பேசுவது கூட கீழானது. எழுவதுவது அதனினும் கீழானது என்பர். இருப்பினும் எழுத தூண்டுவது ஈடேற்ற அல்ல. நிலையானதை நிலையிலாததுள் நிலைப்பெற தொண்டாற்றிட விழையும் வீழா நெஞ்சை என் செய்வது? மாசாயின் மன்னித்தருள்தாயே!

16. ஈரேழு பதினான்கு லோகத்திற்கு ஒளியாகிடும் நாராயண கிருஷ்ணன் ஸ்ரீஅரவிந்தருள் இறங்கி பரிணமிக்க அதிமன இறக்கத்தை இப்புவி உணர்வில் வெளிப்பட அருளிடும் ஸ்ரீஅன்னையே என்னே உமது கருணை!

17. அடிமுடி அறியமுடியா ஈஸ்வரனே ஸ்ரீ அன்னையின் லட்சியத்தை ஈடேற்ற வினவும் போது அவளுக்கான மானிடத் தொண்டு எம்மாத்திரம். எம்மையே ஈந்தாலும் ஈடாமோ?

18. கோழி, ஆடு பலியை விரும்பிடும் காளி தெய்வம் ஸ்ரீஅன்னையை கூட்டணி அமைக்க பலி பெருகிடும் என விரும்பும் தெய்வத்தையும் வேண்டாம் என மறுத்து தெளிவுறுத்திடும் எம் தெய்வ அன்னையே உமது சக்தியை அளவிட இயலுமோ?

19. ஆன்மீகத்திற்கு செல்வம் சேர்த்து உதவிடும் செல்வகணபதியே ஸ்ரீஅன்னையின் குழந்தையாகி மகிழ்ந்திடும் போது மானிடக் குழந்தைகளையும் ஏற்றருள இறைஞ்சுகிறோம் இனிய அன்னையே!

20. ஆரோவில் ஆலமரம் கத்தி பட்டதை அது ஸ்ரீஅன்னைக்கு அறிவிப்பதை அறிந்தவளே! எமது நினைவு, நிவேதனம், சரணம், அர்ப்பணம் ..... இவற்றை அறியாமலா இருப்பீர்கள்? எம்மை நாம் அறிந்ததை விட அதிகமாக அல்லவோ அன்பால், அருளால், ஆசீர்வதிக்கிறீர்கள்.

21. பிறந்தநாளில் மக்களின் இருக்கையை உயர்த்திடும் உன்னதமே! ஸ்ரீஅன்னையே நாங்கள் என்றும் உமது கைக்குழந்தைகளே! காத்தருள்வது உமது கடமை. ஒன்றுவது எமது முயற்சி.

22. ஸ்ரீஅரவிந்த அன்னையே! ஆசிரமத்தில், ஆரோவில்லின் மாத்திருமந்திரில் நிரந்தரமானவளே! மக்களுள்ளும் உலகெங்கும் விலகாது நிலை பெற எங்களை உலகை ஊக்குவித்து அருள இறைஞ்சுகிறோம்.

23. இதுவரை வெளிப்படாத, புலப்படாத புத்துணர்வை புவிக்கு அருளிய சைத்திய அன்னையை நினைப்பது பாக்கியமே.

24. ஸ்ரீஅன்னையே! ஒன்றாய்,இரண்டாய், மூன்றாய், நான்காய், ஐந்தாய்,ஏழாய், ஒன்பதாய்,பனிரெண்டாய், பதினெட்டாய், இருபத்தேழாய், நாற்பத்தெட்டாய், நூற்றிஎட்டாய், ஆயிரத்தெட்டாய் யோகநெறி, ஞான நெறி சகலமும்

கண்டவரும் உம்மிடம் நெருங்கும் காலத்தில் எளியபக்தர்களையும் சந்தோசமாக அமைதியுற செய்யும் தங்களை எவ்வாறு துதிப்பதோ? வேதிப்பதோ? தியானிப்பதோ? தியாகிப்பதோ? இவ்வனைத்துமே உம்து அருளுக்கு ஈடாகுமோ?

25. ஸ்ரீஅன்னையே! எப்படி உம்மிடம் வந்தோம் என யாம் அறியோம்! எம்மை ஒரு பொருட்டாய் ஏற்ற தங்கள் இதயத்துள் யாம் எம்மாத்திரம்?

26. உருவாய், உணர்வாய், ஒளியாய், அருளாய், அன்பாய்,அருவாய், சக்தியாய், ஆனந்தமாய்.... இன்னும் எண்ணற்ற வடிவாய் எமக்குள்ளாகி பரிணமிக்கச் செய்பவளே. இனியஅன்னையே எண்ணே உமது மகிமை!

27. விதியை, ஜாதக, கிரக, நட்சத்திர சாஸ்திரத்தை எமக்கு தவிர்த்தவளே! காக்கிறவளே, கருணைக்கடவுளே சகல அண்ட சராசர நிலைகளையும் தனது பார்வையால் செம்மைபடுத்துபவளே! என்றும் நீரே கதி ஸ்ரீஅன்னையே எமக்கு விதி.

28. உரிய தருணத்தில் உரியதை உருவாக்கி உயர்விப்பவளே ஒவ்வொரு அசைவிலும் பிரபஞ்சத்தையே இசைவித்து திருஉருமாற்றப்பணிக்கு உய்விக்கிறாய் அன்றோ! உன்னத அன்னையே!

29. எல்லா யோகமும் எங்கு முடிவடைகிறதோ, அங்கிருந்து ஸ்ரீஅரவிந்தயோகம் ஸ்ரீஅன்னை மூலம் ஆரம்பிக்கிறது. பேருண்மை நிலை எய்துவது.அதை புவியில் வெளிப்பட செய்து பழையதை உருமாற்றி அதிமன நிலைக்கு உயர்வது. இது ஸ்ரீஅன்னைக்கு முழு சரணடைந்து அவளுக்கு நன்றியுடன் தொண்டாற்றிவதனாலே இயலும். இது வரை வெளிப்படாததை புவிக்கு அருளிய ஸ்ரீஅன்னையே மக்களனைவரையும் உமது குழந்தைகளாக அருளிட பிரார்த்திக்கிறோம்..

30. ஸ்ரீஅன்னையே தாங்கள் எண்ணற்ற மலர்களின் தன்மைகளை கூறி அதை உமக்கு அர்பணிக்கும் அன்பர்களின் அகதளங்களை திறந்தவளே! உம்மை போற்றுகிறோம்.

31. ஸ்ரீஅன்னையே நீவிர் எமது மனம், உடல் , பிராணன் ,அடிமனம், அவசேதனம் உள்ளியல்புகளில் நிலை கொண்டு சாதகர்களின்

உண்மையினை அடையச்செய்து அந்தராத்ம ஆன்மீக, அதிமன கல்விதனை தானே குருவாய், தாயாய், இறைமையாய் இருந்து வழிநடத்தியவளே போற்றி உமது உடமையாகிறோம்.

32. இதுவரை வந்த அவதாரங்கலெல்லாம் ஸ்ரீஅரவிந்தரே என உணர்வித்த உலக அன்னையயே நின்னை நித்தமும் பூஜிக்கிறோம்.

33. புற உலகு செயல்களையும் செய்து அக உலக ஆதிக்கத்தை அவனிக்கு அருளி எல்லாரும் கடைபிடிக்கும் எளிய யோக வாழ்வினை அமைத்து தந்த ஸ்ரீஅன்னையே உமக்கே யாம் சரணம்.

34. வாழ்வனைத்தும் யோகமாக்கி எல்லா யோகங்களையும் தனதுள்ளாக்கித் தன்னை தஞ்சமாகியோருக்கு எது, எது எப்போது தேவையென உணர்த்தி உயர்த்திய ஸ்ரீஅன்னையே உம்முள் தஞ்சம்..

35. புதுவையில் வாழும் அனைத்து ஜீவர்களும் ஸ்ரீஅன்னையின் உணர்வின்றி சுவாசிக்க முடியாத அளவிற்கு ஆளுகைக் கொண்டவளே ஆதிசக்தியே நமஹ.

36. அகிலமே ஸ்ரீஅரவிந்தரின் உணர்வினை சுவாசிக்க அருளிய இனிய அன்னையே உங்களை நித்தமும் நினைவு கூறுகிறோம்.

37. எண்ணிலடங்கா எல்லா அன்னைகளின், பராசக்தியின் ஒட்டு மொத்த கூட்டு உருவே ஸ்ரீஅன்னை மிர்ராவே உம்மிடம் சகலத்தையும் நிவேதிக்கிறோம்.

38. இறைமையை உற்பத்தி செய்பவரும் அதை வளர்ப்பவருமான இறைவன் ஸ்ரீஅரவிந்தரை எமக்கு காண்பித்த சைத்திய அன்னையே எமது சைத்திய இருக்கையில் நிலைபெற தியானிக்கிறோம்.

39. ஆசிரம ஆரோவிலின் மாத்திரு மந்திரில் நாட்களில் என்றும் கிட்டாத, அரிய, உயரிய பல சைத்திய ஆன்மீக ஆதிமன சூழலில் பக்தர்களை, சாதகர்களை உணர்வாக ஏற்புத்திறனுடன் கிரகிக்க உதவுகிறவளே உமக்கு பணிகிறோம்.

40. ஸ்ரீஅன்னையின் பார்வையில் தீயவை நீங்கி, நல்லவை பெருகி அகபுறத்தில் புத்துணர்வு, புதுத்தெம்பு, தைரியம், மகிழ்வு, எழில், அழகு, ஆனந்தம்..... அருளி எம்மை தொய்வின்றி உம்மை நினைக்கச் செய்பவளே! சரணடைகிறோம்.

41. ஓஅன்னையே! தொண்டின்பம் காணும் ஆசிரம ஆரோவில் மற்றும் புற உலக சாதகர்களை சைத்திய, ஆன்மீக, அதிமன கருவிகளாக உருவாக்கும் மகா சக்தியே உலக மக்களனைவரையும் உமது உடமையாக ஏற்றருள வேண்டுகிறோம்.

42. இந்திய பிரஜையானவளே! மணக்குள வினாயகருக்கு ஆசிரம அருகில் இடம் அளித்தவளே! ஒவ்வொருவருக்கும் இந்த இடம் தான் உகந்தது என காண்பித்து அருளுவீரோ ஸ்ரீஅன்னையே.

43. புதுவையில் கடல் கொந்தளித்து கரையைக்கடக்காதிருக்க கடலரசனுக்கு ஆணையிட்டவளே! எமது அகங்கார கடல் அசுரனை ஆணையிட்டுத் தடுத்து ஆன்மீகத்தில் ஆர்வமுற அருள வேண்டுகிறோம் ஸ்ரீஅன்னையே.

44. புறச்சூரியனே அமாவாசை இருட்டாக தென்படும் அளவிற்கு பிரகாசமான அதிமனச் சூரியனை கண்ட ஸ்ரீஅரவிந்தரின் யோக முறையை நிலவு போன்ற சைத்திய சூரியனுள் கிரகிக்கும் படி அருளும் ஸ்ரீஅன்னையே உமக்கீடுண்டோ? சைத்திய அதிமன அன்பினை பொழியும் ஸ்ரீஅரவிந்தமிர்ராவே உம் புகழ் பாட விழைகிறோம்.

45. பூஞ்செடிகளை, பூனைகளை, நாய்களை, பசுக்களை, நாற்காலி, மேஜைகளை எல்லாம் அரவணைத்தவளே! மானிடர்களை உமது அன்பால் நிரப்புவதை அளவிடலாகுமோ? அன்புக்குழந்தைகளாக உமது மலரடி களைத் தொழுகிறோம். ஸ்ரீஅன்னையே.

46. இரண்டாம் உலகப்போரில் சூட்சுமத்தில் ஹிட்லரின் தீய சக்தியை அழித்து அவனியை அழிவின்றி காத்தவளே! பொய்மையின் கடவுளான தியோனை விலக்கியவளே அறியாமை, பலவீன, குரோத, அழிவு, அசுர சக்திகளுக்கு இனிவலுவுண்டோ? எல்லாம் மாற்றும் மகாசக்தியே உம்மால் இப்புவியே மகிழ்கிறது, மிளிர்கிறது. ஓம் மிர்ராவென எங்கும் ஒலிக்கிறது.

47. அணுவிற்குள்ளும் அருளாட்சி செய்பவளே! இருளுக்குள்ளும் பொன்னொளிப்பாய்ச்சுபவளே! தீய சக்திகளையும் நல்ல சக்தியாக உருவாக்குபவளே! எப்பொழுதும் புத்துணர்வு, புதுசக்தி, புதுபடைப்புகள் படைப்பவளே! ஒளிர் வெள்ளைநிற ஸ்ரீஅன்னையே எம்முள் வெளிப்பட இறைஞ்சுகிறோம்.

48. ஓ அதி அன்னையே! நட்சத்திரங்கள் கூட்டத்திற்கும் அதிகமான வழி முறைகளில் மக்களை, இயற்கையை, பிரபஞ்சங்களை, அதிபிரபஞ்சங்களை உருவ, அருவ, அருவஉருவ இரண்டுமில்லா பரவெளி, அபரவெளி, தூயவெளி, ஞானவெளி, ஆனந்தவெளி, சத்திவெளி அருள்வெளி, உணர்வுவெளி, சைத்தியவெளி, அதிமன வெளி.... போன்ற அனைத்துள்ளும் உணர்வாய் இருப்பவளே! உம்மிடம் முழுசரணடைவதைவிட வேறு முன்னேற்றம் எதற்கேனும் உண்டோ?

49. உமது கண்களோ? சந்திரனும் சூரியனோ? சைத்திய அதிமன சூரியன்களோ? தேவர்களின் ரிசிகளின் குழந்தைகளின் கண்களோ? வைரமோ? மாணிக்கமோ? பொன்னொளி வீச்சினை கொண்டவளே! இனியும் எமக்கு, இருளுண்டோ? இன்னலுண்டோ எல்லாம் கரைந்ததே! கனலே,கனிவே, பொழிவே, அருளே, ஒளிரும் வெண்மையே என்னென்பதோ யாம் அறியோம். அக அன்னையே.

50. மக்களின் அறியாமை திரைகளை அகற்றுபவளே! சைத்திய உடலை வளர்ப்பவளே! உலகிலுள்ள ஒவ்வொருவருடன் தொடர்புறும் அனைத்திலும் உமது உணர்வால் உயர்த்தி மக்களுக்கு ஆன்மீக சக்தியை ஊட்டியவளே! யோக முறைகளை அவரவருக்கு தனித்தனி நம்பிக்கைக்கேற்ப தொண்டிற்கு ஏற்ப, சைத்திய மாற்றம் அருளுபவளே ஸ்ரீஅன்னையே உம்தாழ் பணிகிறோம்.

51. காலத்தை உறியும்(விழுங்கும்) கனவு வாழ்வா? கடவுள் தன்மையாக நினைவு வாழ்வா? பாகுபாடு கண்டும் பொன்னானதை புண்ணாக செய்திடும் கலியை நீக்கி அர்பணிக்கிறோம். எம்மிடம் எத்திறனின்றி தோல்வி தழுவி, தெம்பிழந்த நிலையையும் அர்ப்பணிக்கிறோம் தாயே. எம்மை எதாக மாற்றும் சித்தமோ ஈடேற்றுக. உற்சாக மூட்டுக, வெற்றியை அருளுக. தீர்க்க முடியாத, சொல்லமுடியாத இன்பதுன்பங்களிடையே துவழும்

நல்லுள்ளங்களை முரண்பாடின்றி இசைவித்து உமது சித்தம் எம்முள் ஈடேற ஒப்புவிக்கிறோம். ஈடேறா வேதனைகள் செம்மையாகிட ஸ்ரீ அன்னையே நித்தமும் துதிக்கிறோம்.

52. ஒ மனித இனமே ஏன்? இறைத்தன்மையாகிடும் நிலையறிந்தும் செயல் படுத்தாதிருக்கிறோம். நம்முள் எழுவதை மட்டும் ஈடேற்ற புழுவாய் துடிக்கிறோம். அதற்கு தரும் அதே முக்கியத்துவம் ஏன் இறைவனுக்கு தர இயலாது தத்தளிக்கிறோம்? இனிய அன்னையே! இந்த அவல நிலையை அகற்றிடுக, ஆற்றலை அளித்திடுக மானிடர் இடறுபவரே, பலவந்தத்திற்கு பணிபவரே! உண்மைக்கு உழைப்பது எப்போதோ ஸ்ரீஅன்னையே நீரே அறிவீர்.

53. ஸ்ரீஅரவிந்தமிராவின் தொகுப்புகள் (நூல்கள்) அனைத்தும் அறிவால் பயின்று அனுபவத்தால் உணர்ந்து ஆர்வத்தால் அகஉடல் பெற்று ஆன்மீகத்தில் முன்னேறி அதிமனமாகிட ஸ்ரீஅன்னையின் சைத்திய வைர ஒளியை தமதுள் காண்போமாக.

54. ஒரு சின்ன பிழை எத்தனை பிறவிகளை வீணாக்குகிறது. தூ! என உதற துணிபவர் எத்தனை பேர்? பிழைக்கு பிள்ளையா? அல்லது கடவுளுக்கு பிள்ளையா? தீர்மானி திரண்படு தீவிர ஆர்வத்தால் அல்லலை அகற்று. ஆற்றலால் ஸ்ரீஅன்னையின் கருவியாகிவிடு, நமக்காக காத்துள்ளாள். நம்மை காக்க உள்ளாள்.

55. பிறருக்கும் அறிவூட்டும் நீ ஏன் தன்னுள் தனக்குறியதை ஊட்ட மறுக்கிறாய், மறக்கிறாய், மறைக்கிறாய்? உன்னை இறைவனின் உணர்வு தராசில் எடைபோடு பூஜ்யத்திற்கும் தகுதியிழப்பாய் அன்னையின் பாதமே நம் இதயத்தின் தகுதிக்குகந்ததாக்கி சரணடைந்து ஏற்புத்திறனாகிடுவோம்.

56. தூயகாற்றை உள்ளிழுத்து அசுத்தக்காற்றாக மாற்றி வெளியனுப்பும் இக்கொடியவனால் உலகிற்கு, உண்மைக்கு என்ன நன்மையளிக்க முடியும்? ஸ்ரீஅன்னையே உள்ளே தூய்மையாகி அதிதூய்மையையே வெளிப்படுத்துவது எந்நாளோ? ஒ சைத்திய ஊற்றே அருளாக அவனிக்கு ஆற்றிட வெளியே வாராயோ?. ஓ அதிமனக்காற்றே வெளியிலிருக்கும் தூய காற்றை, தூய அமரகாற்றாக்கிட அகத்தில் அதிமன உடலெடுப்பாயோ?. உலகை அதிமன

உலகாக்கிட அதோ ஸ்ரீஅரவிந்தர் வெளிப்படுத்துகிறார். ஸ்ரீஅன்னையின் குழந்தையாகிடுவோம். நம்மை சேர வேண்டிய தருணத்தில் சிதறாமல் பிசகாமல் எடுத்துச்சொல்வாள். ஓம் தத்சத்ஸ்ரீஅரவிந்தாய.

57. ஓ உலகே உன்னை ஸ்ரீஅரவிந்தமிர்ராக்கள் சூட்சுமத்தில் சைத்ய மாற்றம், ஆன்மீக மாற்றம், அதிமன மாற்றம் செய்துள்ளார்கள். இனி புற திரு உருமாற்றத்தை தள்ளவோ, தாமதிக்கவோ முனைபவை வீணே. விரைந்திடுவோம், விழைந்திடுவோம், விடாமுயற்சியாகிடுவோம். பழையன கழிய, புதியன புக ஆரம்பித்து விட்டது.அவனியே ஸ்ரீஅன்னையை காணும் நேரம் நெருங்கியது. எங்கும் பிரார்த்தனை தியானம், புத்துணர்வு, புதிய படைப்பு, இறை வெளிப்பாடு கண்கொள்ளாக் காட்சியாகிறது.சைத்திய அன்னையை கண்டிடுவோம், கனலாகிடுவோம்.

58. தடுமாறும் தரணி தாளா தரமான தங்கமாக ஜொலிக்க வைத்த ஸ்ரீஅரவிந்தமிராக்களே! இப்புவியுள்ளளவும் உம்மை புகழ்ந்தாலும் தகுமோ? நாடு நகருள்ளளவும் நன்றியுடன் இருப்பினும் ஈடாமோ? அனைத்தும் உம்மில் ஐக்கியமாகி, அமைதியில் அருளைப்பெறுவதே பணியாம்.

59. பதிநான்கு லோகமோ எண்ணற்ற பிரபஞ்சமோ, காணும் விண்மீன்களோ, ஸ்ரீஅரவிந்தஅன்னை அவதரித்த அவனிக்கு ஈடாமோ? அதிலும் மனிதஇனம் எத்துனை பாக்கியம் பெற்றுள்ளது. பெருமிதமின்றி அவளின் அளவிலா அன்பின் கனிவை ஆனந்த கண்ணீராய் அர்ப்பணிக்க விழைகிறது. ஸ்ரீஅன்னையின் மலர்பாதங்களில் முத்தமிட்டுக்களிப்பால் கண்களில் வரும் பொன்னீரால் கழுவுவதில் பெருமிதம் கொள்கிறது.

60. எவ்வித உணர்வாகினும் ஸ்ரீஅன்யையின் உணர்வாக திருஉருமாறியே ஆகும் . காலங்கடந்த உணர்வுகளாயினும் பூரணமாக பரிணமிக்கும் வழி இதுவே. எல்லையற்றதாகினும் ஸ்ரீஅன்னை என்ற எல்லைக் குட்பட்டது. ஏனெனில் எல்லையில்லா எல்லையவள். காலங்கடந்த காலம் அவள்.

61. குயிலின் குரலை கூர்ந்தால் ஸ்ரீஅனனையின் ஆர்கண் மியுசிக்கில் வரும் அமைதி பிறக்கிறது. நதிகளில் ஸ்ரீஅன்னை அழைக்கும் நாதம் ஒலிக்கிறது.வீசும் தென்றலில் மகாசமாதியில் வீசும் நறுமணம் கமழ்கிறது. சூரியகதிரில். ஸ்ரீஅரவிந்தரின் சிந்தனைப்பொறிகள் பொழிகிறது. குளுமை

நிலவு தூய மல்லிகை சைத்திய அன்னையின் அருளாகிறது. வானில் மிளிரும் நட்சத்திரங்கள் எல்லாம் ஸ்ரீஅன்னையை அகத்தில் காணும் பக்தர்களின் உண்மை இருக்கை வைரவொளியாக இன்னும் உயர விடாமுயற்சி கொள்கிறது. இனிய அன்னையே அணுவிலும். அண்டத்தில் எங்கு சென்றாலும் உமது முழுமையை காணும் பூரணஞானம் அதிமனித சமுதாயத்திற்கு மட்டுமே கிட்டுமோ?

62. ஒருதுளி தயிர் பாலை தயிறாக்குகிறது. சிறுவிதை பெரிய ஆலமரமாகிறது. அருளன்னையே உமது ஒருதுளி சக்தி மனித இனத்தையே மகத்தான ஒன்றாக்குகிறதே! ஆசிரமம், ஆரோவில் உலகின் வெளிப்பார்வைக்கு சிறு இடமாகலாம். ஆயின் அதனுள் இப்புவி, பிரபஞ்சம், தேவலோகம், உருவ,அருவ உலகு,மனித, தேவருக்கும் எட்டாத எண்ணற்ற நிலைகளை கொண்ட ஆசிரம, ஆரோவில் எமது இருகண்களே.

63. ஒலிக்கும் ஓங்காரமே ஸ்ரீஅன்னையே! ஜொலிக்கும் ஒளிகளெல்லாம் ஸ்ரீஅன்னையின் பிரதிபலிப்பே! விளையும் தாவரங்கள் ஸ்ரீஅன்னையின் அருள் உடலே! ஊர்வன, விலங்குகள் அனைத்தும் ஸ்ரீஅன்னையின் சக்திகளே! பறவைகளெல்லாம் நித்தமும் ஸ்ரீஅன்னையின் துதிபாடி ஞான காணம் ரீங்காரிக்கும் இனிமையே! எல்லாவற்றிலும் உயர்ந்த மனிதஇனம் சகலத்தையும் இசைவித்து இறைவனாகும் சைத்ய ஆத்மனே!

64. உயர்ந்த வேலை, தாழ்ந்த வேலை, உயர்ந்தவர், தாழ்ந்தவர் எனும் பாகுபாடு நம் இனிய அன்னையிடம் இல்லை. அவளின் உணர்வினை ஏற்கும் திறனிற்கேற்பவே மதிப்பு அதிகரிக்கும், உலகில் ஏழை பணக்காரன் பாகுபாடுண்டு. உணர்வில் வறியவனே உண்மை ஏழை. இறைதன்மையானவரே உண்மையான நித்திய செல்வந்தராம். ஸ்ரீஅன்னையின் உணர்வே நமது மூச்சு, கேட்பது, பார்வை, பேசுவது, செயல்படுவது, நினைப்பது, எல்லாம் ஆக ஆர்வமுறுவோமாக.

65. நம்பிக்கையோடு ஸ்ரீஅன்னைக்கு அர்ப்பணிக்க முன்வந்தபின் பிறர் ஏதோ பொய்மையை புகட்டுவதால் அந்த அர்ப்பணம் தடைபட்டால் நிறுத்தியவர், புகட்டியவர் சைத்திய தொடர்புற வாய்ப்பின்றி இருள் ஞானத்தால் அருள்ஞானத்தை வீணடிப்பது அறிவீனம். பணம், பதவி, ஆசை, புகழுக்காக

ஸ்ரீஅன்னையை நாடுபவர் நெடுந்தூரப் பயணக்களைப்படைவர். சைத்திய தூய்மை, ஆன்மாவில் எதாலும் அசையாது நம்பிக்கையுடையோர் தெய்வக் களிப்படைவர். அர்ப்பணிக்க தன்னால் முடியும் என்பதை வேண்டுமென்றே செருக்கால் சோம்பலால் நிறுத்துபவரே வீணாகாது, விவேக யோகி ஆவீராக.

66. ஒரு தொண்டினை கபடுசூதின்றி அப்பழுக்கின்றி அன்பாக, ஆர்வமாக மகிழ்வாக அர்ப்பணிக்கும் அன்பருக்கு ஸ்ரீஅன்னையின் உண்மையான ஆன்மீகப்பாதை திறக்கும். திறமான வளர்ச்சிக்கு வாய்ப்பினை ஸ்ரீஅன்னையவள் உருவாக்குகிறார். நித்தமும் ஆன்மீக வளர்ச்சியே.

67. அவரவர் சொந்த இல்லில் தியான அறை அமைத்து தியானிக்க தியானிக்க ஸ்ரீஅன்னையின் சாந்நித்யம் மதர் ஹவுஸ் ஆக ஆகிவிடும். நாம் அமைதியாக இசைவாக ஆனந்தமாக ... இருப்பது மட்டுமே நிகழும். இன்னலகலும் இடைஞ்சல் இராது. இனிய இல்லமாகும்.

68. ஸ்ரீஅன்னையின் அருள் எப்படி வேலை செய்கிறது என்பதை கூர்ந்தால், அருள் பெருக்கம் நம்முள் நம்மைச் சார்ந்த அகபுற உலகனைத்தும் நேர்மைக்கேற்ப பாய்ந்து பலனளிக்கும். சொல்லால், எழுத்தால், செயலால் பார்வையால், கேட்பதால், நுண்ணறிவாலும் கூட முழுமையாக அனுபவமாக்குவது எளிதே. ஆயினும் தெளிவு, ஆர்வம், பக்தி, விழிப்பு, விரைவு, உற்சாகம் செயலாற்றல் மிக்க தியானம் இவற்றாலும் ஓரளவே உணர பரிணமித்துள்ளோம். வரும் அருளினை முழுமையாக கிரகிக்க ஸ்ரீஅன்னையே அருள வேண்டும்.

69. ஆன்மீக மாற்றம் நிகழ்ந்தாலே அகபுற இசைவு, முன்னேற்றம் உருமாற்றம் நிகழ்கிறது. அதிமன சித்திக்கு செல்லமுடியும். ஆயினும் முதலில் சைத்திய மாற்றம் நிகழ ஸ்ரீஅன்னையின் கைக்குழந்தையாகி அவளையே மறவாது நினைக்க, நினைக்க ஆன்மீக, அதிமன வாய்புகள் ஏற்படும். ஸ்ரீஅன்னையே கதி, விதி, மதி, ஆதி,அனாதி.... எல்லாம். நித்தமும் வேதி, பதி, துதி.

70. மலரை ஸ்ரீஅரவிந்த அன்னைக்கு அர்ப்பணிக்கிறோம். மலரோ! தனது மணத்தை அர்ப்பணிக்கிறது. அதுபோல் நம்முள் உள்ள அகத்தாமரைகளைக் கண்டு அர்ப்பணிக்க அந்த அகஉணர்வு மலர்கள் ஸ்ரீஅன்னைக்கு தெய்வீக

மணங்களை அர்ப்பணிக்கும் அனுபவம் கண்டவருக்கு அமரவாழ்வே. அழிவு அகன்றிடுமன்றோ!

71. வாக்கு தவறுவது ஸ்ரீஅன்னையின் உண்மையை இழப்பதாயின் இடர், பொய்மையை துறப்பதாயின் தொடர்.

72. உண்மை வெளிப்பட பேரிடறாகிறது. கூட்டு பொய்மையை பொசுக்கும் சாதகருக்கு இறை சித்தி நிச்சயம். ஸ்ரீஅன்னையின் அருளும் பாதுகாப்பும் துணையாம்.

நேரம் வீணாகவில்லை. நாம் விழியுணர்வானால் நல்ல நேரமாவதைக் காணலாம். ஸ்ரீஅன்னையில் நிலைத்த நேரமே பொன்னானது. புண்ணான போதும் அவளுள் நிலைபெறு. வினையறு. விதியின் சதி சரியட்டும்.

முடியாது என்பது கிடையாது என்பவரே சைத்திய உண்மையை உணர உணர்வாகிடுவீர்களாக. ஸ்ரீஅன்னையின் அகவாழ்வாவதே சாதனை, பிற வேதனை, சோதனை.

அகங்காரமே ஸ்ரீஅன்னையை நாடிடு. ஆன்மீகமாகிடு அதிஒளியாகிட முனைந்திடு, தெளிந்திடு, தெய்வீகமாகிடு, அகந்தையென்பது வீணாவதே. தானே அழியும் வித்தே செய்யும் சேவையால் தெய்வீகமாகிறதாம். தன்னலமற்ற தியாகியே தாயின் தொண்டிற்கு உகந்தவராம்.

76. சிந்திக்க, ரசிக்க, கடைபிடிக்க கற்பதைவிட உணர உயர ஒளியூட்ட உருமாற்ற உரைக்கல்லாக உமது எழுத்தாகட்டும். ஸ்ரீஅன்னையை அலங்கரித்த அழகால் சைத்திய தூய்மையுறட்டும்.

77. என்றோ! என ஏங்காதே. இன்றே இப்பொழுதே விழித்தெழு. சைத்தியஅன்னையை அக ஆழத்தில் அடைந்திடுக. அவளுள் வாழ்ந்திடுக. வளம் பெற்றிடுக. வழியறிந்தும் வறியவனாய் வாழ்ந்திடாதே. விழித்தெழுக. உற்சாகங்கொள்க. வாழும் வகையுணர்ந்து முடிவின்றி முன்னேறுக. ஸ்ரீஅன்னையே கதியாகிடுக.

78. பறிப்பவன் பரதேசிபோலும், பரதேசி பறிப்பவன் போலும் பாவனை செய்யினும் சைத்திய உணர்வானது இனங்கண்டிடும். உண்மையை உணர்த்திடும். உளமாற ஸ்ரீஅன்னையின் குழந்தையாகிடுவோம். குவலயம்

மாயையோ, ஏமாற்றுவதோ அல்ல. உண்மை தெய்வீகமாக்கும் களமாக காட்சியளிப்பதைக் காண்போம்.

79. நவயோக சித்தியால் செருக்குண்டு, அதனால் சறுக்குண்ட யோகிகளே! ரிஷிகளே! தபசிகளே! உமது உண்மை சித்திக்கு அநுபூதியாகா நிலையில் ஸ்ரீஅன்னையே கதி. சரணடைபவர்கள். மரணமிலா பெறுவாழ்விலும் உயர்வான அதிமன அனுபூதி நிலையடைகிறார்கள். 'ஓம். ஸ்ரீமீர்ராய நமஹ"

80. எங்கு என்று எப்படி? ... என்பதும் நான் யார்? என்பதும் கானலாக காலங்கள் கரைவதைக் கண்டு கலங்காத கனலே! அருளே! ஒரு துளி ஸ்ரீஅன்னையின் உணர்வால் அனைத்து பதிலும் அடங்கிய நிலைக்குயர்வதை உணர்ந்த தூயஉண்மையே இனி உமக்கேது பொய்மை? எல்லாமே புதுமை!

81. மலர்களை, மணத்தை மாற்றும் மாந்தன் தன்னை, தனது உணர்வை மாற்ற மயங்குகிறான், தயங்குகிறான். தரணியையே மாற்றினாலும் தான் மாறாவிடில் உண்மை தனக்கு புலப்படாது குழம்பி குவலயத்தை குழப்பச் செய்வான். கற்றது கைமண் அளவு கல்லாதது உலகளவு என்பதுபோல் தனது கைமண் அளவான மூளையில் காண்பதை கருவியாக்கி இதய ஆழத்துள் சென்று கட்டை விரல் அளவேனும் ஒளியைக் காண்பது சாலச்சிறந்தது. உண்பது, உறங்குவது, உழைப்பது போல, உணர்வது உள்உண்மையைக் காண்பது உகந்தது. ஸ்ரீஅன்னைக்கு சரணடைந்து சகலத்தையும் அர்பணிப்பதே பூரணயோகமாகும்.

82. தவளையை பாம்பு விழுங்குகிறது. பாம்பை பருந்து பார்க்கிறது. உயிரினத் தத்துவம் ஒன்றையொன்று தியாகிப்பது, விழுங்குவதாகிறது. உணர்வுகளும் அவ்வாறே. பலம்வாய்ந்த சக்திக்கு சரணடைகிறது. ஆனால் சைத்திய சக்தியோ! உடலோ, மனமோ, பிராணனோ உணர்வோ தனது உண்மையை உணர்ந்து சைத்திய அன்னைக்கு அர்பணித்தாலே ஏற்படுகிறது. வலிய இழுப்பதல்ல, தானே தனது இச்சா சக்தியால் ஸ்ரீஅன்னையை நாடுவது. ஆனால் தனது சைத்திய ஆன்மாவை ஸ்ரீஅன்னையே முதலில் தெரிந்து எடுத்துக் கொள்கிறாள். விழுங்க அல்ல. அது உயர்வுற.

83. ஸ்ரீராமகிருஷ்ணர் தம்முள் வெளிப்படும் இறைவனை சிறுகதை மூலம் காண்பிக்கிறார். வெறும் கற்பனையல்ல அனுபவ இறை சக்தி. இதயங்களில்

ஊடுருவுவதை உணரலாம். உண்மையான ஸ்ரீஅன்னையின் குழந்தைகள் புற அந்தஸ்து எதுமில்லாவிடிலும் அவர்களுள்ளும் ஆன்ம சக்தி நிரம்பியிருப்பதை கற்றாரே கற்றவரை அறிவதைவிட, பாம்பின்காலை பாம்பு அறிவதைவிட, சைத்திய ஒளி உடையோர் ஒன்றுவர், உயர்வர். சந்தர்ப்பவாதிகளல்ல சாமான்யமானவர்கள். தேவைக்காக மட்டும் நாடுபவர்களல்ல. நன்கு தெளிந்து தேறியவர்கள் தேவநிலையாகிடுபவர்கள்.

84. பால் தயிறாகி, வெண்ணையாகி, நெய்யாகி, ஒளியாகிறது. பஞ்ச மாற்றமும், நம்முள் உள்ள சகல உணர்வுகளும் திருஉருமாறி ஒளியாகிட சைத்திய அன்னைக்கு தொண்டாற்றி அமரதீபமாகிடுவோமாக!

85. யாருக்கு எக்காலத்தும், எதாலும் எச்சூழ்நிலையிலும் ஸ்ரீஅன்னைமீது எவ்வித சந்தேகமும், கலங்காத, மாறாத அசையாத நம்பிக்கையுள்ளதோ அவர்களே ஸ்ரீஅன்னையின் உண்மைக் குழந்தைகளாவார். தேவைக்குமட்டுமல்ல, தெய்வத்துவம் நிலைபெறவும், நிறைவுறவும் விரும்பிடுக. அதற்காக எல்லாவற்றையும் இழக்கவும், எதையும் ஏற்கவும் திடங்கொள்க. தீரராகுக, தீயவையகன்ற தெய்வமாகுக.

86. சும்மா இருத்தலில் சுகம் காண்பது அமைதி, சாந்தி, மோனத்தில் ஆழ்வதாகும். சோம்பலில் அல்ல, அக உணர்வில் ஆழ்வது. புறத்தொண்டில் தப்பிப்பதல்ல. தன்னிலையிலேயே நேரே உண்மையில் நிலைப்பது. வெறும் பாவனையல்ல. புற உழைப்பால் வரும் ஊதியத்தைவிட அகத்தால் அகப்புற ஆன்மீக முன்னேற்றம் வெளிப்படச் செய்வது. உன்னுள் உள்ள ஸ்ரீஅன்னைக்கு நேர்மையாக இருப்பது, நிலைப்பது, நிரந்தரமாவது, நித்தியமானது, நிகரற்றது.

87. புறவாழ்வில் குறையிருப்பினும் நிறைவாக வாழ கற்பது, அக வளர்ச்சிக்கு அடையாளம். முன்னேறாமல் தாமஸீகமாக இருந்து அகத்தை மட்டும் நாடுவது இன்னலே. இயங்கு, இயக்கு, இடறா இடத்தில் நிலைபெறு, ஒளி பெறு, தெளிவுறு, திடனுறு, நிறைவுறு, நிஜமாகிடு. மாய மயக்குறாதே, மயக்காதே, மாறா மாந்தா இறைவனாகிடு. இனிய அன்னை வழி காட்டுகிறாள்.

88. ஸ்ரீஅன்னையே நமக்கு நித்திய பாதுகாப்பு. அவளை நம்முள் கொள்வதே நமது பொறுப்பு. வெறுப்போறும் படும் தோல்வியால் 'அவளை'

சரணடைவர்.அகத்தில் அமிழ்ந்திருக்கும் ஸ்ரீஅன்னையை மீட்க ஸ்ரீஅன்னையே நம்முள் உதவுகிறாள். சைத்தியபுருஷனாகிடுவோம்.

89. பஞ்சத்தால் பரிதவிக்காதே. அச்சத்தால் அல்லலுறாதே. வஞ்சத்தால் வாழ்விழக்காதே. நெஞ்சத்தால் நெகிழ்ந்திடுக. ஸ்ரீஅன்னையை அங்கே நினைத்திடுக. நீங்கா துணையாக்கிடுக. நீடூழி வாழ்ந்திடுக. நினைத்தவர் கேடு தனக்கே ஆகி தகர்ந்திட உணர்வாகி ஒளிபிழம்பாகிடுக. தீயவை தீயாகிடும். அகத்தீயே நமக்கு உயர்வை ஊட்டிடும். உணர்வால் அன்னையாகிடுக. அவனிவாழ்வே நமதாகிடும்.

90. மனித வாழ்வே தெய்வீகமாகிட உழை. நுண்ணியவை அனைத்துள்ளும் ஸ்ரீஅன்னையின் உணர்வு, ஒளி, அன்பு, சக்தி காண். ஏன் தெய்வீகமாகாது? வீணாவதை வித்தாக்கிடும் வீரர்களே! தீரர்களே! தெய்வக் குழந்தைகளே! உங்களை நீங்களே கண்டபின் உறக்கம் ஏது? உணர்வே, உண்மையே, ஒளியே, தெளிவே, தெம்பே. திகட்டாததேனே, இனிய வாழ்வே. இனி வீழ்வது விடியலாயிற்று. அதிஒளி ஆதவன் ஆண்டவன் ஸ்ரீஅரவிந்தர் அவதரித்த அவனியுள் வாழக் கற்றவரே அதிமனித சமுதாயமாக விழித்திடுக, பணிந்திடுக, தெய்வீக வாழ்வாம்.

91. ஸ்ரீஅன்னையின் யோகம் தானே முக்தியடைவது மட்டுமல்ல. இறைவனுக்காகவும், மற்றவர்களுக்காகவும் இப்புவி பரிணாமத்திற்காகவும் இன்னும் அதிமன மாற்றத்திற்காகவும் உருவ, அருவ பரிணாமத்தினையும் தன்னுள் கொண்டது. தனிமனித யோகமாயினும் ஸ்ரீஅன்னைக்கே தானாகிவிட்டால் எண்ணற்ற தொண்டாற்றியவராவோம். பசு பிறருக்கு பால் தருகிறோம் என எண்ணுவதில்லை. காற்று பிறருக்கு உயிர்வாழ உதவுகிறோம் என உற்று நோக்குவதில்லை. அது அது அதனதன் தொண்டினை அகந்தையின்றி ஸ்ரீஅன்னைக்கு ஆற்றிட இறை சித்தம் இனிதே ஈடேறுகிறது.

92. சைத்திய மாற்றம் அடைய நாம் ஆர்வமுற வேண்டும். ஆன்மீக மாற்றம் எளிதாகிவிடும். மேல் மனத்தின் மூலம் அதிமன உலகினுள் சென்றிட ஏதுவாகும். திரிந்த, திரியும் யோகமல்ல. திருவுருமாறும் யோகம். பூரணயோகம். சகலயோகமும் ஸ்ரீஅன்னையுள் அடங்கிய பூரணயோகம்.

93. நம்மனத்திற்கெட்டா விஷயங்களை நமது சைத்திய புருஷன் நன்கறியும். ஆனால் நாம்தான் (ஜீவன்) அதன்படி வாழ முனைவதில்லை. ஸ்ரீஅன்னையை முன் வைத்து செயல்பட அனைத்தும் அவளின் ஆதிக்கமாவதை அறியலாம். அயறாது ஆர்வமுறுவோமாக.

94. அர்ச்சுனா! என்றால் இடிக்கும் இடியும், மின்னலும் ஆபத்தை விளைவிக்காது என்பர். ஸ்ரீகிருஷ்ணா என்றால் இறக்கும் மனிதனுக்கும் மோட்சம் உண்டாகும் என்பர். ஸ்ரீஅரவிந்தர் என்றாலோ பொன்னொளி பொழிவதை சாதகர் அக்காட்சியில் காண்பர். கன்ம உடலில் கனலேறிய அதிமன அமைதி கன்ம உலகில் நிலவிடும். அதிமன சக்தி ஊடுறுவும். நமது சைத்திய ஆன்மீக இருக்கையில் அதிமன அருள் ஆதிக்கம் கொள்ளும். அர்த்தமுள்ள அவனி வாழ்வாகிடும்.

95. ஸ்ரீஅன்னையின் அருளால் சைத்திய இருக்கையாவது நமது சத்தாகும். மேல்மன கடவுளின் சக்தியால் கீழ் இயற்கையை உருமாற்றி பின் மேல்மன ஒளியே சைத்திய ஒளியாகிட உழைப்பது ஆன்மீக மாற்றமான சித்தாகும். சித்திற்குள்ளும், சத்திற்குள்ளும் அதிமன இறக்கம் பெறச் செய்வதே நிலையான அதிமன ஆனந்தமாகும். அங்கும் அதிமன அன்னையே நம்மை வழிநடத்துவாள்.

96. அதிமன ஆனந்தத்தை ஸ்ரீஅன்னையின் மூலம் நமக்கு அருளுவதை ஏற்க நாமும் ஆனந்தமயமாகலாம். ஆனந்த மயத்தையே சைத்திய இருக்கையிலிருந்து புவியுணர்வனைத்தையும் சைத்தியமாக தெய்வ அன்னை உருமாற்ற நம்மை அர்ப்பணிப்போமாக. சகலமும் சைத்திய உலகானபின் உண்மை உலகான அதிமன உலகாகிட ஆயத்தம் செய்யும் ஸ்ரீ அன்னையின் ஸ்ரீஅரவிந்த ஆசிரமும், ஆரோவில்லும் சத்தியதளமாகிடத் திகழ்கிறது. அவளுக்காக அவளை மட்டும் நாடிடுவோமாக. சத்தியமயமாகிட அவன் அருளால் அவனிக்கு எளிதில் வெளிபட ஒரு முனைப்பாய் அவளின் தொண்டாற்றிடுவோமாக!

97. அகங்காரம் எவ்வடிவில் வந்தாலும் ஸ்ரீஅன்னையின் ஆளுமையால் உருமாற்றி உயர்வுற உழைக்கும் சாதகர்கள் உலகெங்கும் நித்தமும் ஒவ்வொரு செயலிலும் அது நுழையாது காக்கும் காப்பாளர்களாகத் திகழ்ந்து

திருஉருமாற்றத்தைத் துரிதப்படுத்தி தூய்மை யடைவோமாக! சைத்தியத் தூய்மையால் மல்லிகை மணம் புவியெங்கும் வீச வீறுகொண்டு வீழா வாழ்வமைப்போம்.

98. உடல், மனம், பிராணன், அடிமனம், உள் இயல்பு, அவசேதனமாகிய அனைத்துள்ளும் சைத்திய ஆளுமை நிலவிட வழியறிந்தவரே ஸ்ரீஅன்னையின் கருவியாக செயல்புரிவர். வாழ்வனைத்தும் யோகமாக்கிட முனைந்தவராலே ஸ்ரீஅன்னையின் சித்தம் ஈடேறும் இனி ஏது அகங்கார வாழ்வு. ஆன்மீக வாழ்வே ஸ்ரீஅன்னையின் பிரசன்னம் நிரந்தரமானதே!

99. அகச்சரணத்தால் திருவுருபெறும் இருக்கைகளே! உமது நம்பிக்கையை குலைக்கும் சக்தியுண்டோ? இனி ஸ்ரீஅன்னையின் அருளினைத் தவிர வேறு என்ன உள்ளது? எல்லாம் அவள் அருளின் ஆடலே ஈடேறுகிறது. அவளே கதியாகக் கிடப்பதே நமது பணியன்றோ?

100. உண்மையை நோக்கிய நமது ஒவ்வொரு இயக்கமும் உண்மை உணர்வாலும், ஒளியாலும், சக்தியாலும், ஞானத்தாலும் நிரம்பப் பெற்றவையே. ஸ்ரீ அன்னையின் புதிய ஒளியால் புதிய படைப்புகளாய் திகழ்வோமாக!

101. ஸ்ரீஅன்னையுடன் சைத்திய இசைவு இதயத்துள் ஏற்பட்டபின் உலகில் தெய்வீக இசைவிற்கு இடரேது?

102. நமது இருக்கையையும் இயற்கையையும் இணைக்கும் ஸ்ரீஅன்னை நமது சைத்திய இருக்கையை காண்பிக்கிறாா். நம்மால் எவ்வளவு முடியுமோ அதிகபட்சமாக அவளுள்ளாகி அனைத்தின் உண்மை நிலைகளை கண்டிட நல்ல அஸ்திவாரம் ஆன்மீகப்பாதையில் அமைத்தவராவோம்.

103. அறியாமையால் அல்லலுறுபவர்கள் தமது உள் இயல்பில் ஒளியுறுத்தி ஸ்ரீஅன்னையை ஸ்தாபித்து மாற்றம் கண்டபின் ஆனந்தம் நிலவும். சக்தியும், வலிமையும் உணர்வான ஜீவனையும் கண்டு ஸ்ரீஅன்னையின் பாதுகாப்பில் செயல்பட்டு செழுமையுறுவர், செம்பொன்னுணர்வடைவர்.

104. நமது சூட்சும சரீரத்தை ஸ்ரீஅன்னைக்கு மட்டும் உரியதாக்குவதால், புற உருமாற்றத்தை மிக எளிதில் அழகாக, ஒழுங்காக, வெற்றிகரமாக,

நம்பிக்கைக்குரியதாக, தனக்காக, பிறருக்காக பிரபஞ்சத்திற்காக, அகபுறத்திற்காக சூட்சும சக்தி அமைகிறது.

105. உயிறாய் உள்ள நாம் காலக்கட்டத்திற்குட்பட்டிருப்பினும், உயிர், பிராண சக்தி ஆற்றும் ஆற்றல்மிகு, இசைவான, நிறைவான, தொடர்ந்து எதையும் வெற்றி கொண்டு ஈடேற்றிய குறுகிய கால ஸ்ரீஅன்னையின்தூல தொண்டு முக்காலத்தாலும் பேசப்படுகிறது. பகவத் கீதை, இராமாயணம், திருவிளையாடல் புராணம் போன்றவை புராண இதகாசங்களும் இன்றும் பேசப்படுகிறதல்லவா? அதைவிடவும் சைத்திய, அதிமன நிலை சக்திகளை நித்தியமானவை என நித்திய காலத்தவர் போற்றுவர், புகழ்வர், பூஜிப்பர்.

106. மனத்தை நம்மை உண்மையை உணரமுடியாது. அது அடி மனத்தால், அவசேதனத்தால், பிராண மனத்தால் ஏமாற்றப்படலாம். மனத்திற்கு தனது இருக்கையை ஜீவனை சைத்திய மூல உணர்வை ஆள, வழி நடத்த, இயலாது. ஆகவே மனம் சைத்திய புருஷனின் கருவியாக உருமாற்ற நமது ஜீவனால் வழிநடத்தி விழிப்புறச் செய்வது மைய இசைவினை ஏற்படுத்துவதாகும். வீணாகாது, விரயவினையாற்றாது தெய்வீக செயல் புரிபவரே ஸ்ரீஅன்னையின் அசைக்கமுடியா சாதகராகிறார்.

107. ஸ்ரீஅன்னையின் வழி வந்தவர்கள் பிறயோகங்கடந்தும் அறிந்தும் பிரபஞ்ச ஞானம், சூட்சும சக்தி போன்ற ஒவ்வொரு அசைவும் ஸ்ரீஅன்னையின் சைத்திய ஒளிக்கு அர்ப்பணித்து தனது உண்மை உணர்வினை உணர்ந்து அதன்படியே வாழ்வது மிக மிக உயரிய சாதனையாகும். அகஅன்னையின் வழிகாட்டுதலே நிரந்தரம். இது தனிமனித வளர்ச்சி. தரணி வளர்ச்சிக்கு தான் விரும்பி விட்டுக் கொடுத்து உதவுவது வேறு. பயம், அறியாமை, பலவீனத்தாலன்று. பக்தியால், அன்பால் ஆற்றுவது.

108. முழுவதும் சைத்திய மாற்றமடைந்த இருக்கை தனது உண்மையால் அதிமனத்தை அழைத்து பூரணத்துவம் பெற ஆர்வமுறுகிறது. பரிணமிக்கும் இயற்கை ஸ்ரீஅன்னையின் மூலம் அதிமன சக்தி இறங்கி விடுதலையடைந்த சைத்திய உண்மையுள் அதிமனம் தளம் அமைத்து ஆன்மீக இருக்கையாக உருவெடுத்து கரை, குறை, திரையிலா பிரபஞ்சமாக தனது உண்மை

ஞானம் பெறுகிறது. ஸ்ரீஅன்னைக்கு சரணாகதி செய்ததின் பலனை கண்டோர் நன்றியுடன் ஸ்ரீஅன்னையே கதியாகி ஆன்ம நிலைகளில் லயிப்பர்.

109. தனது சைத்திய புருஷன் வெளிப்பட தவம் செய்த சாதகரின் உடல், மனம், பிராணன் உருமாறுதலடைவதைப் போல மனித இயற்கையே திருவுருமாற தனது சைத்திய அன்னை மனித உணர்வுள் ஒளியுறுத்தி சைத்திய நிபந்தனைப்படி வாழ வகை செய்யும் இனிய அன்னையே! உம்மிடம் உலகே தஞ்சம்.

110. உண்மையே உண்மையை உண்மையாக வளர்க்க, நிலைகொள்ள, ஸ்தாபிக்க முடியும். மூன்று வித அமைதி பெருகும். மன, உடல், பிராண கோசங்கள் நீங்க மூவித ஒளியாகத் திகழும். ஆன்மாவில் வாழும் பக்தருக்கு நான்கு வித அழகு மிளிரும். சொல்லில், செயலில், ஞானத்தில், சைத்திய புருஷனில், இனிய அன்னையே தாங்கள் இவ்வித சித்திகள் பெற உதவுகிறீர்கள், பாதுக்காக்கிறீர்கள், வழி நடத்துகிறீர்கள், ஆசீர்வதிக்கிறீர்கள். என்னே! உமது கருணை.

111. ஓ தெய்வ சூரியனே! சைத்திய சூரியனே! அதிமன சூரியனே! தேவர்களுக்கும் இறைவனே! பரமனே! ஸ்ரீஅரவிந்தரே! ஒளிக்கெல்லாம் ஒளியானவரே! உம்மை நோக்கி வழிநடத்தும் ஸ்ரீஅன்னையின் பாதத்தில் முத்தமிட்டு நித்தமும் மகிழ்கிறோம்.

112. உண்மையான பார்வையளிப்பவரே அதிமன ஆசானே! ஸ்ரீஅன்னைக்கு மட்டும் சரணடைபவைகளை அமரத்துவம் ஆக்குபவரே! புற, அக உலகங்களாலும் முழுக்க அறியமுடியா அளவு உயர்ந்த இறைவனே. விடுபட்ட ஸ்ரீஅன்னையின் தொண்டனான ஆன்மாக்களுக்கு மட்டும் அதிமன மகத்துவங்களை வெளிப்படுத்தும் பரமனே. ஸ்ரீஅன்னை மூலம் உமக்கு பணிகிறோம்.

113. பிறப்பறுத்தாலும் சாகாநிலை அடைந்தாலும் மீண்டும் சைத்திய, அதிமனமாக பரிணமித்தாக வேண்டும் என சத்பொருளை காட்டிய ஸ்ரீஅன்னையே அதற்கு வழிகாட்டி. வேறு எவ்வித, இந்திரமந்திர, தந்திர ஜாலங்கலாலும் எவ்வித உயர் நிலையினாலும் அவளை விடுத்து அடையவே முடியாது. ஆகவே மானிடரே மேல்மனகடவுளர்களையும், அசுரர்களையும் அன்பாய், பக்தியாய்

அரவணைத்து அவளுள்ளாக்கி ஸ்ரீஅன்னையின் அருளாசி பெற உதவிடும் தொண்டர்களாகிடுவோம்.

114. நமது சைத்திய வளர்ச்சியைப்போல் உடல், மன, பிராண வளர்ச்சியும் தனது இருக்கையில் ஆழ்ந்து, உணர்வு பெற்று, சைத்திய மாற்றமடைந்து, அதிமன இறக்கத்திற்கு தகுதி உடையதாக உயர்ந்தவாறு பரிணமிக்க, ஸ்ரீஅன்னையை பிரார்த்திப்போமாக!

115. சூட்சும (பரிபாசையில்) மொழியிலும், சூட்சும உருவத்திலும், உண்மையை அனுபவமாகப் பெற முடிகிறது. இது இயற்கையில் மேல்மனம் மூலம் அதிமன இறக்கம் பெற, நமது உள்ளியல்பில் ஸ்ரீஅன்னையே தளமமைத்து தருகிறாள். தாயிடம் தஞ்சமானவருக்கு எளிதாய் கைக்கூடும்.

116. இப்புவி இயற்கையுள் சூட்சுமமாக உள்ள அதிமன, மேல் மனத்தை, நம்முள்ளும் இப்புவியிலுமுள்ள அடிமன, அவசேதனத்தின் உயர்வால், அதிசேதன இருக்கையும், சக்தியும் வெளிப்படுவதை ஸ்ரீஅன்னைக்கு சரணடையச் செய்வோமாக.

117. விழிப்பான தெளிவாலும், வலுவான இச்சா சக்தியாலும், தளரா ஆர்வத்தாலும், அடிமைதளைகளை விலக்கி, இசைவுற்ற சைத்திய அன்னை, அகத்தில், உயர்பிரபஞ்ச உணர்வாகிட சக்தியை அருள்கிறார்.

118. இந்த இருக்கை எந்த மூலத்திலிருந்து வந்ததோ அதன் மைய உண்மை பரிணாமத்திற்கேற்ப நமது தூல உடல் செயல்பட, மனம் சிந்திக்க வேண்டும். எப்படி நோக்கினும் அம்மூலமும் ஸ்ரீஅன்னையின் பாதையும் ஒன்றென, நன்றென நன்கு புலப்படும். ஸ்ரீஅன்னையவர் ஒரு நுண்ணிய அணுவையும் பிசகுறச் செய்வதேயில்லை.

119. உண்மை துறவு பூண்ட சாது, ரிசி, யோகி, ஞானி, தபசி, பிரம்மச்சாரி போன்றோர் சதாசர்வகாலமும் இறைவன் சிந்தனையிலேயே இருப்பதால் வரும் அருளினை மக்களின் தெய்வ வளர்ச்சிக்கு அருள வேண்டும். மக்கள் அத்தகையவர்களை இனங்கண்டு தாமே முன்வந்து பொருந்தும் பொருளுதவி செய்து புண்ணியம் தேடுதல் வேண்டும். இருபாலரையும் கேலி கூத்தாக்காது வாழ்வது நலம். அகங்கார தேவை கருதி வியாபார

பொருளாக பாவிக்காதிருக்க ஸ்ரீஅன்னையை நாடுவோம். போலி, நிஜம் கண்டறிய அருளாளர், பொருளாளருக்கும் ஸ்ரீஅன்னையே இனங்காட்டி, இருளகற்றுகிறார்.

120. பிரபஞ்சங்களுக்கெல்லாம் மூலமான அதிபிரபஞ்ச சக்தியாக தனது இருக்கை உணர்வுபெற்று, உயர்ந்து வாழ்வில் பிரபஞ்ச இசைவு உண்டாக்கி, தனது சுய சக்தியான அதி இயற்கையால் ஆள, அக சைத்திய, சூச்சும மனம் முன்னுக்குவந்து இயந்திர இயற்கையில் விடுபட்டு செயல்படவைக்கும் இனிய அன்னையே! உம்மை துதிக்கிறோம்.

121. எம்மை உணர்வான தெய்வீக வாழ்வில், ஆன்மீக உண்மையில் வளரச் செய்பவளே! ஸ்ரீஅன்னையே உமக்கு எமது அர்பணம், எம்மையே உமக்குத் தந்து புத்துணர்வு பெற்று நேரிடையாக வரும் அதிசக்தியின் சித்தப்படி வாழ திடனளியுங்கள்.

122. பழைய யோக முறையிலும் சச்சிதானந்தத்தில் லயித்தனர். ஆயினும் எல்லாம்வல்ல அதுவே ஸ்ரீஅரவிந்தரின் அதிமனம். ஸ்ரீஅன்னையின் சைத்தியம் மூலம் நம்மில் வெளிப்படுகையில், இதுவரை வெளிப்படா பேருணர்வு, பேரமைதி, பேரன்பு, பேரானந்தம் வேறு எந்த லோகத்திலுமின்றி இப்புவியில் ஸ்தாபித்த, ஸ்ரீஅரவிந்த அன்னைக்கு, கோடானு கோடி துதிபாட, பக்திபரவசமாக, அவளால், அவளுக்காக வாழும், மூச்சாமோவாக!

123. பக்தியால் வளர்ந்த சைத்திய ஆன்மா படிப்பின்றியும், உடல் தொண்டின்றியும், ஆன்மீக மாற்ற ஞானமின்றியும், தனது உண்மை அக உடல் மட்டில் வளர வளர புற உதவியின்றி தானே தன்நிலையாக, சைத்திய, அதிமன இறக்க, தளமாக அமையும் அருள் ஆன்மாக்களும் ஸ்ரீஅன்னையிடம் வளர்கிறார்கள்.

124. ஸ்ரீஅன்னையிடம் மிகநெருங்கி உயர்நிலையில் ஒரு காலத்திலிருந்த ஆன்மா, சில அறியா, அகங்கார பலவீனத்தால் வளர்ந்த நிலையோடு நின்று, இனி வளரவிருந்த அரிய வாய்ப்பினை, ஸ்ரீஅன்னைக்கு பணியாத அகங்காரத்தால், தனக்குத்தானே தடையான ஆன்மாவே! அதோ பாருங்கள் ஸ்ரீஅன்னை உம்மை விட்டு தூரமானார்களா? அல்லது நீங்கள் விலகினீர்களா? மீண்டும்

நிவேதித்து, ஐக்கியமாகிட, ஸ்ரீஅன்னையை துதியுங்கள். நீங்குபவை நீங்கட்டும். வளர்வது வளரட்டும். முன்னேறுங்கள். முடியும் தருவாயில் விடியலை வீணாக்காதீர்கள்.

125. இயங்கா இடத்தில், இயக்கம் ஏற்படாமல், காத்தால், இன்னலில்லை. இன்னலுறுத்தும் சக்திகள், வலுவிழந்து வகை தேடி ஒழுங்குறுகிறது. இதை ஈடேற்ற ஸ்ரீஅன்னையின் பாதுகாப்பும், உதவியும், சக்தியும், இயங்காவிடத்து, நிலைபெற வேண்டுவோமாக.

126. ஸ்ரீஅன்னையின் சக்தியை தன்னுள் அல்லது கூட்டு இயக்கத்தினுள் கொணறுபவர்கள், மிக மிக கவனத்துடன் அசுர, தேவ, மேல்மன சக்திகளின், தாக்குதலுக்குள்ளாகாத ஞானத்தோடு, திறத்தோடு, விவேகத்தோடு, காலமறிந்து கடுகளவும், பிசகாது, கலங்காது, கவனமாக, செயலாற்றி, இசைவுறுத்தி, வெற்றி கண்டவர், தெய்வீக அன்பினை, அடைய ஆயத்தமானவர்களாவர்.

127. ஸ்ரீஅன்னையின் சில உண்மை குழந்தைகளுக்கு, மக்களோ, இயற்கையோ அவர்களின் அத்தியாவசியத் தேவைப் பூர்த்திக்கோ, உதவுவதில்லை. மாறாக, மறைவாக உபத்திரமே, தருவதைக் கண்டு, தடுத்து ஸ்ரீஅன்னையின் அருளால் உதவிபெற்று, நிரந்தர நிறைவாக்குவது மிகமிக அவசியம். அத்தியாவசியம். ஆற்றலின்றி, அலட்சியப் படுத்தி, அல்லலுறுவது, ஞானமாகாது.

128. ஸ்ரீஅன்னையைப் புரிந்து கொண்டால் போதாது. அவளது இச்சைப்படி வாழ வேண்டும். அவளது சித்தத்தை ஈடேற்ற வேண்டும். அவளது அருளைப்பெற்று, தனது அகங்கார செயல் புரிவது உண்மையான திறனாகாது. தனது சக்தியை, உணர்வை முழுவதும் அவளுக்கு ஒப்புவித்து அவளது ஒளியில், அவளுக்காக மட்டும், வாழக் கற்பதே சைத்தியக்கல்வி ஆகும்.

129. அழிகின்ற அகங்காரமே, ஆன்மீகத்தை அழிக்க, அகற்ற, முனைவதால், உனக்கு உயர்வு என ஆர்பரிக்காதே. அழிவது நீயே! அழுகும் உனக்கேது ஸ்ரீஅன்னையின் ஆற்றலை விழுங்க? வீழும் நீ முடிவில் சரணடைகிறாய். சாவே உனது முடிவு. சமாதியில் சரணடை. சாந்தம் கொள். சண்டை, சச்சரவுண்டாக்கி இசைவினை இடைஞ்ச லுண்டாக்கும் உனது மாய

வேஷங்கள் கலைந்தன. கனலான ஆர்வம் கபடற்ற பக்தி கொண்டோரே! இனி வேடதாரிகள் வேலை உம்மிடம் நடவாது. உம்முள் ஸ்ரீஅன்னை அந்தரங்கமாக அதை அகற்றுகிறார்.

130. ஸ்ரீஅன்னைக்கு சரணடைந்து பின் தனது அகங்கார தேவைகள் பூர்த்தியானபின் ஆன்மீக முன்னேற்றமின்றி அவர்களே ஸ்ரீஅன்னைக்குத் தடைக்கற்களாக நிற்கும் நிலைமாற ஸ்ரீஅன்னையை பிரார்த்திப்போமாக! இறை வெற்றி நிச்சயமாம்.

131. பிறரின் தடைகளை தகர்த்த பக்தர், பின் தானும் தனக்கே அறிய முடியாத அகங்கார தடையாய் இல்லாமலிருக்க, ஸ்ரீஅன்னையின் அருளை நாடுவோமாக.

132. ஸ்ரீஅன்னையின் பணியை முதலில் முடிப்பவர் ஆன்மீகத்தில் உயர்வர். அகங்காரத்தை ஸ்ரீஅன்னைக்காக விலக்குபவர், அவளின் பணியாளராவார். பணிவு, பலமிக்க கருவியாக உதவுகிறது. துணிவு ஆன்மீக வெற்றியைத் தருகிறது. கனிவு கருணை உள்ளத்தை உய்விக்கிறது. பொறுமை திறனை வளர்க்கிறது. ஆன்மீகத்தை அகங்காரத்திற்காக விட்டுக் கொடுக்காமலிருப்பது ஆண்டவனின் சக்தியை பெருக்குகிறது. திருட்டு உணர்வினை தீவிரமாக விலக்க விழிப்பானால் அசுரசக்திகள் அகன்றிடும். அயர்ந்தால் நமதுடைமையை உறிந்து அது உயர்ந்துவிடும். விவேகமான ஜாக்கிரதம் அவசியம்.

133. மலர்கள் அர்ப்பணம் மகத்தானது. ஜீவன் வளர, சைத்திய உணர்வு உயர, ஆன்மீகத்தில் முன்னேற, அதிமன மாற்றத்திற்கு உதவ நமது மலர் தொண்டு அமையட்டும். அகங்கார ஆசை தேவைக்காக அதிக விலை கொடுப்பது குடும்ப செலவிற்கே தவிக்கும் போது கடன்பட்டு செய்வது மேலும் இன்னலை தேடுவது தவறு. எளிதாகக் கிடைப்பதை, இடமிருப்பின் வீட்டிலும் நாமே உற்பத்தி செய்து ஸ்ரீஅன்னைக்கு அர்ப்பணிப்பது சாலச் சிறந்தது. மது அருந்தினால் பலம் வரும் என்பதை நம்புவதே ஆசைத் தூண்டலுக்கு அடிமையாகிடும் ஜீவனே, உனது உண்மை வளர்ச்சிக்கு உள்ளதை மட்டும் செய்திடுக. ஆன்மத் தெளிவுறுக. மனமாயைக் கருத்தினை மாய்த்திடுக. மனிதனுள் உள்ள இறையுணர்வான மலரை அர்ப்பணித்திடுக.

புற அர்ப்பணிப்பு எவ்விதத்திலும் இசைவுடன் உணர்வு உயர்வுற ஆகட்டும். வெந்து, நொந்து, வெதும்ப வேண்டாம். வினை தீரட்டும், அகமகிழ் அர்ப்பணமே ஆன்மீகம். ஆசையோ வீண் சொப்பணம்.

134. புத்திசாலிகள் புரிந்தது போல் புரியாமல் வாழ்வதைவிட, அகவளர்ச்சியால் ஞானம் பெற்று தெய்வீகமாக ஸ்ரீஅன்னையே தஞ்சம் என இருப்பது இனிமையாகவேயுள்ளது! யோகவாழ்வமைகிறது.

135. ஸ்ரீஅன்னைக்கு அர்ப்பணிக்கப் பழகுக. அபகரிக்க மறக்க. கொடுக்க வளர்க. எடுக்கத் தவிர்க்க. தன்னலம் மறக்க. உடல், மன, பிராணனில் ஊவுருக. உணர்வினில் நிலைபெறுக. சைத்திய, அதிமன உணர்வாகிடுக.

136. ஓ இயற்கையே! பஞ்ச பூதங்களே! ஸ்ரீஅன்னையின் சைத்திய உணர்விற்கு உருமாறி உயர விழைகிறீர்கள். அதைவிட மாறும் மனித இனம் மாறா நிலையில் நிலைத்திட முனைபவர் அதிகரிக்க உமது உண்மைக்கு உழைப்பது எவ்வாறோ! வெளிப்படுத்துக! ஸ்ரீஅன்னையைக் கண்டு வாழ உதவிடுக. தடைகளைத் தகர்த்திடுக!

137. ஓ! ஸ்ரீஅன்னையே! என்னே! மனித சோம்பல், தாமசீக உணர்வு, எதிர்ப்பு, தடை, ஆசை, அகங்காரம் பகை சக்திகள் இவைகளெல்லாம் நம் இனிய அன்னையின் தெய்வீக புன்முறுவலில் (புன்னகையில்) கரைந்து விடுகிறதே! ஸ்ரீஅன்னையின் மகிமையே, அற்புதம், அதிசியம், ஆன்மீகம் அமர அருளாம்.

138. குதிரையின் வாய்க்கு எட்டாத ஒரு அடி தூரத்தில் உள்ள கேரட் கொத்தை தின்ன பறப்பதைப் போல பறக்கும் பற்றுடைய மாந்தா! காலத்தை வீணாக்காது தெளிவடை. ஞானம் பெறு. ஸ்ரீஅன்னையிடம் சரணடை. அருளே பொருளாம்.

139. இறைவனுக்காக இறைத் தொண்டிற்காக வாழ்கிறேன் வாழப்போகிறேன் என வாயால் வம்பளந்த வஞ்ச நெஞ்சே! எப்போது முழு நேர்மையுடன் ஸ்ரீஅன்னைக்காக ஆகப்போகிறாய்? ஆயிரம் ஆண்டிற்குப்பின்னரா? அளவற்ற பிறவிக்குப்பின்பா? இனி வரும் பிறவிக்கு இவ்வுடலுண்டா? இந்த வாய்ப்புண்டா? ஞானக் காட்சிக்காண்க. திசை மாறினால் மடிவே! அமரத்தன்மைக்கு வழி அருளும் ஸ்ரீஅன்னையின் பாதையை அகத்தில்

கண்டு செயல்புரிக. சைத்திய வழிக்காட்டுதலே உண்மையானது. பிறதள காட்சிகள் ஏய்த்துவிடும். மிக கவனமாகிடுவோம்.

140. இனிய அன்னையின் பணிக்குள்ளானவரே. உம்மை வலிய ஏய்த்திடும் மாய சக்திகளை இனங்கண்டு கரைத்து கனலாகிடுவீர். காலத்தை வீணாக்கி ஸ்ரீஅன்னையின் பணியினை தாமதிக்க விழைகின்றன. விவேகத்தோடுக விலக்கிடுக.விலகிடுக. உருமாற்றிடுக, உயர்ந்திடு ஒளியாகிடுக. பணி துரிதமாகட்டும். அவளின் சித்தம் இனிதே ஈடேறட்டும்.

141. ஓ அகங்கார அன்பே! தெய்வ அன்பினை வெளிப்படாதவாறு மனித உடலை மயக்க முனையாதே! மடிவது நீ வெல்வது தெய்வ அன்னையின் அன்பே! நீயும் நாடுவது அதுவே. திரிக்காதே! திரியாதே! திகையாதே! திமிறாதே! பணிந்திடு, சரணடைந்திடு. ஸ்ரீஅன்னைக்கு உள்ளாகிடு.

142. ஸ்ரீஅன்னையின் உணர்வால் வாயுவே வளம்பெறுக. ஆகாயமே அவளின்அருவ சக்தியால் திறம்பெறு. நீரே மாயத்தோற்றத்தை நீக்கி தெளிவாகி சைத்திய வளர்ச்சிக்காக உருவாகுக, அருளாவாய். தீமைக் குள்ளானால் இருளாவாய். ஸ்ரீ அன்னைக்கு சரணடை சரியாவாய். அமைதிகாக்கும் அக்னித்தேவனே. அசைவுறாது தாமதியாதே சைத்திய, அதிமன ஒளியாகிடுக. நீ அழியவில்லை சூரியனே இருளாகிடும் அளவு பிரகாசஅதிமனச் சூரியனாவாய். உனதை ஸ்ரீஅன்னைக்காக இழக்கத் தயங்காதே. கலங்காதே! அஞ்சாதே! அகப்புற உலகு அமரத்தன்மையாகிட விழித்திடுக. அவளுக்கு உதவிஉயர்வுபெறுக. உன்னதமாகிடுக. ஓ. அவனியே. ஸ்ரீஅன்னைக்காக மட்டும் ஆகிடுக. அந்தராத்மா இதயமாகிடுக. சைத்திய அன்னையின் இதயத்துள் உமதுள் உருவாகிய இதயங்களெல்லாம் ஒன்றாகி ஸ்ரீஅன்னையின் வழிக்காக திறவாகிடுக. புவிவாழ்வு மலர்ந்து ஸ்ரீஅன்னையின் ஆட்சியில் பிரபஞ்சங்கள், உயர் உலகங்கள் எல்லாம் உண்மை உலகில் சத்திய யுகத்தில் அதிமன வாழ்வடையட்டும் ஓ ஸ்ரீஅரவிந்தமிராவே உமது வழியில் வளர அனைததுலகங்களும் ஆர்வமுற அமைத்த உமக்கு எல்லா உலக உணர்வும் நன்றியாகிடுமன்றோ ஸ்ரீஅன்னையின் குழந்தைகளுக்கு.

143. ஓ சைத்திய திறவாகா பிற சக்திகளே! உமது அறியாமையால், பலவீனத்தால், குறைபாட்டால், தீங்கிழையாதீர்கள். உமக்கும் அவளின் குழந்தையாகிட அருளுதவிடும். தன்னை அவளுக்காக அர்ப்பணி. ஸ்ரீஅன்னை உமது நிலைக்கும் உதவி உயர்த்தி காத்தருள்கிறார்.

144. எதையும் கேவலமாக, அலட்சியமாக, இகழ்வாக நினைக்க உருவாகும் எண்ண அலைகளை ஸ்ரீஅன்னைக்கு அர்ப்பணிப்போம். அது நம்மை கீழிறங்கத் திட்டமிடுகிறது. நமக்கு தரித்திர புத்தி வேண்டாம். சைத்திய, ஆன்மீக, அதிமன வளர்ச்சிக்கான உணர்வலைகள் எழட்டும். நாளுக்கு நாள் நாம் அவளாக அவளை வெளிப்படுத்த அவளின் நினைவாலே வளர்வோம்.

145. தனக்கு ஸ்ரீஅன்னையின் குழந்தைகளிடம் பெற விழையும் மனமே! நீயோ ஒரு துளியேனும் ஸ்ரீஅன்னைக்காக தர மறுக்கிறாய். தந்திர வாழ்வு நிரந்தரமா? சிந்தி! உனது குணமே உன்னை வெட்கபட வைப்பதைக் கண்டு சிரி! என்னே! அசிங்க வாழ்வு. வீழ்வதும் வாழ்வா? வாழும் வளரும் குழந்தைகளை வேதனைக்குள்ளாக்காது இனிதாகிடு. புரிந்து, தெளிந்து, திருந்தி அவர்களைப் போல வாழப்பழகிடுக.

146. இனிய தெய்வக் குழந்தைகளே! ஸ்ரீஅன்னைக்காக வாழும் நீங்கள் உங்களைப் போல உருவாகும் உலகமக்களை உதாசீனப்படுத்தி உதறிவிடாதீர்கள். உம்முள் வளரும் ஸ்ரீஅன்னை உம்மை உதறிவிடுவார். உமது உண்மைக்குள் வளர, உயர, உலகுக்கும் உலகுள் உள்ள சைத்திய அன்னையின் வளர்ச்சிக்கும் வாய்ப்பளியுங்கள். நம் எல்லோரையும் அவள் உற்று கவனித்துக்கொண்டுள்ளாள். அவளுக்காக வாழ்வோம் அவனியை அதிமன சிகரமாக்குவோம். அதிஅகங்காரத்தை ஆன்மீக மாற்றமடைய அதிசேதனமாவோம். ஸ்ரீஅன்னையின் சித்தம் ஈடேற்றுவோம்.

147. இறைவனின் புன்முறுவலை எந்த அன்னையின் முகத்திலும் காணலாம். அகச்சான்றே அத்தாட்சி. புறச்சான்றால் புரிவது அகவளர்ச்சியாகாது. அகமே! ஸ்ரீஅன்னையுள் வாழ்ந்திடுக. புறம் உமக்கு இடஞ்சலாகாது. இனிய உலகாகிடும்.

148. அர்ப்பணி அபகரிக்காதே! கொடு எடுக்காதே! தியாகி, தியானி, தீவிர ஸ்ரீஅன்னை பக்தனாகு. தீராதவைக்கு தீர்வாகும். தினமும் திருவுருவெடு. நித்தமும் நிரந்தரமாக்கிட நினைந்திடுக. அனுதினமும் ஸ்ரீஅன்னையை அணுகிடுக. அமைதியுறுக. இறைவாழ்வாகிடும்.

149. தன்னையே! தாயிற்காக தந்தவரே! பற்றெல்லாம் பறந்தன. வெறுமையானோம், தனிமையானோம் காலம் கடப்பது கடினமாகிறது. எதை செய்தாலும் என்ன பயன்? எதுவுமே தனக்கின்பம் அளிக்கவில்லையே என அயறாதே! அமைதியுடன் உள்ளாயே அதுவே பெரிய சாதனை. அதில் ஆறுமாதம், ஆறு வருடம், அறுபது வருடம் கடப்பது கடிகை நேரமாவது ஒரு பெரும் பாக்கியம். உணர்வற்ற, விழிப்பற்ற மக்கள் விரைந்து, விரைந்து விரயமாவது உமக்கில்லையே! ஒருமையான அசைவற்ற நிலையுள்ள உமது நித்திய கால நிலைக்கு மாறும் மடியும் காலங்கள் கழிந்தன கரையா திடசித்தம் அமரவாழ்வாக்கியது. இனி எதாலும் இறவா நிலை கண்ட நிம்மதி வாழ்வில் நீ எது செய்தாலும் செய்யாவிடினும் நிறைவே! ஸ்ரீஅன்னையுள் நீயும் உன்னுள் அவரும் ஆவீர் அன்றோ!

150. அதிமன உலாகாகிட அயறாது உழைத்த ஸ்ரீஅரவிந்தரே. ஆண்டவரே! பரமனே! இறைவனே! கடவுளே! அவதாரமே! பிரபுவே! புவிக்கும் ஈரேழு உலகிற்கும் ஸ்ரீஅன்னைதான் அனைத்தின் மூலம் என உணர்த்தியவரே! உமக்கு ஸ்ரீஅன்னையின் கருவி, குழந்தை, தொண்டன், சாதகன், பக்தனாவதன்மூலம் நன்றியை அர்ப்பணிக்கிறோம்.

151. இறைவன் மனிதனை நாடுகிறான். ஆனால் மனிதனோ ஓடுகிறான். மனிதன் இறைவனைத் தேடுகிறான். இறைவனோ மறைகிறான், பக்தனோ ஏங்குகிறான். இருவரையும் உரிய தருணத்தில் இணைப்பது ஸ்ரீஅன்னையின் சக்தியே.

152. தெய்வ அன்பினைப் பெற தனது இருக்கையில் நிலைத்து நிரந்தரமாக ஸ்ரீஅன்னையின் ஆளுகையினால் அமைதியுறும்போது ஏற்படும் நிறைவான, இனிமையான அகத்தில் பிங்க்ரோஸ் ரோஜா மலர்வதைப் போன்ற அனுபவமே வெளிப்படு. தெய்வ அன்பினை உணரச்செய். ஏனெனில் பூரண சைத்தியதினுள்ளிருந்து வெளிப்படும் தெய்வத்தாயன்றோ நீவிர்.

153. முதுமையில் இன்னலைத் தரும் பஞ்ச பூதங்களே! இயற்கையே! மனித சமுதாயமே! ஸ்ரீஅன்னையின் சைத்திய அன்பினை ஏற்று அவர்களுக்கு கருணைக்காட்டி ஆறுதலளிப்பீர்களாக! முதுமையில் உடல் தளர்வால், ஆதரவற்ற நிலையால், நோயால், மனக் குறையால் ... சிந்தனையால், எண்ணத்தால் ஓய்வின்மை, உறக்கமின்மை, நிறைவின்மை, நிம்மதியின்மையால் பீடிக்காதிருக்க ஸ்ரீஅன்னையின் அன்பினை நாடிட, நன்மை பயத்திட உதவிட வேண்டுகிறோம். உம்முள் ஸ்ரீஅன்னையைக் காண்கிறோம்.

154. ஒரு தியானக்கூடத்தில் கூட்டம் வரவில்லையே என ஏங்காது ஸ்ரீஅன்னையின் உணர்வை மட்டுமே நிறைவாக்கிய அந்த ஒரு பக்த சாதகரால் ஸ்ரீஅன்னையின் மலர்பாதங்கள் தியானமாக உருவெடுத்து மீண்டும் பக்தர்கள் பெருக்கினால் இடமே கொள்ளாதாகினும், அங்கு கூட்டமே இல்லாதது போல் ஸ்ரீஅன்னையின் உணர்வு ஒன்றே அனைவருக்கும் தெரிந்தது. எண்ணிக்கையல்ல. உணர்வே நிரம்பியது. உண்மை சாதகர்களே உணர்வாகி ஸ்ரீஅன்னையுள் ஐக்கியமாகிட ஆர்வமுறுங்கள் அமைதி நிலவட்டும்.

155. ஸ்ரீஅன்னையின் ஆதிக்கம் நிலைபெற ஆற்றலுடன் ஆணையிடும் சக்திகளே! நீங்கள் நயந்து, வளைந்து, நெளிந்து சென்றால் நெடுங்காலம் நீண்டு தாமதித்துவிடும் என்பதாலா? ஸ்ரீஅன்னையின் மகாகாளியாக ஆழ்ந்த அன்புடன் வலிய இறைத்தன்மைக்கு உதவி உய்விக்கிறீர். உம்மால் ஒருநாளில் ஈடேறும் முன்னேற்றம் பிறசக்திகளால் நூறாண்டு ஆகும் என்பதாலா? ஆணையிடுகிறீர். ஆகட்டும் அதன்படியே அவனி துரித முன்னேற்றம் காணட்டும். கனலான பொன்னொளி மிளிரட்டும்.

156. ஸ்ரீஅன்னையுள் ஆழ்ந்து செல்வதைப் பொறுத்தது அவரவர் அகவளர்ச்சி இதில் புற சான்றும், சேவையும் கணக்கிட முடியாது.தன்னுள்தான் தனது சைத்திய அன்னையை வளர்ப்பதைப் பொறுத்தே அகதகுதி உருவாகிறது.

157. மனம் அமைதியுற்று பிராணன் தொல்லைக்குள்ளாகி உடல் இசைவற்று இருந்தால் என்ன செய்வது என கலங்காதே. உனது பிராணனை தொல்லைக்குள்ளே ஊடுருவிச் சென்று ஸ்ரீஅன்னையின் பிரசன்னத்தைக்

கண்டிடுக. ஆனந்தம்வரும். உடலை பசிக்கு இரையாக்காது, ருசியை, பசியை உடலுக்கு இரையாக்கிடுக. தொலைந்தது தொல்லை. உடல் தெய்வ உடலாகிடும். தெய்வ அணுவாகிடும். ஸ்ரீஅன்னையின் அருளால் அமைதியுருபெறும்.

158. ஸ்ரீஅன்னையின் உண்மைத் தொண்டர்களே! சக பக்தர்கள் உமது தொண்டினை உறிஞ்சி அகங்கார வாழ்வமைத்துவிட்டனரே! நாம் ஏமாந்தோமே என எண்ணவேண்டாம். நீங்கள் மட்டுமே உண்மையில் முன்னேறியவர்கள். இருளானவர்கள் எவ்வாறு அருளாளர் ஆகிட முடியும். பொருளாளர் ஆகலாம். ஆனால் ஸ்ரீஅன்னையின் அருளாளரின் தகுதிக்கீடாக முடியாது. நிறைவுறுங்கள். நிரந்தரம். சுதந்திரம், பவித்திரம், பத்திரம், பக்திதிறம்.

159. பேசுவது, எழுதுவது, செயல்படுவது ஸ்ரீஅன்னைக்காக ஸ்ரீஅன்னையால் வழிநடத்தப்பட ஸ்ரீஅன்னையையே பிரார்த்திப்போமாக. வளர, வளர அவைகளும் ஆன்மீக கருவிகளாகிவிடும். தான் வளர அல்ல தன்னுள் உள்ள உண்மை ஸ்ரீஅன்னைக்காக வெளிப்பட்டு தொண்டாற்றிட இறைத்தன்மையாகிட சைத்திய ஆன்மீக அதிமன மாற்றத்திற்கு உதவிடும் கருவியாகிட அமைய ஸ்ரீஅன்னையை வேண்டிக்கொள்வோம்.

160. பூமியும், ஆகாயமும் ஒன்றுபட காற்றும் , நீரும் உதவட்டும். அனைத்துள்ளும் உள்ள அக்கினி வேறுபடாமல் பூமியின் சைத்ய நெருப்பினுள்ளாகி ஸ்ரீஅன்னையின் சாநித்யத்தால் ஆன்மீக மாற்றமடைந்து ஸ்ரீஅன்னையின் அவனியாகி ஸ்ரீஅரவிந்தரின் அதிமன வெளிப்பாட்டிற்கு பரிணமித்து அதிமனித சமுதாயம் திரு உருப்பெற மனித இனம் தமது உடல், மனம், பிராணன், அடிமனம், உள்ளியல்பு, அவசேதனத்தில், ஸ்ரீஅன்னையின் சைத்திய உணர்வாய். ஒளியாய் வெளிப்பட்டு உதவிட அனைவரும் அயராது ஆர்வமுற்று ஆற்றலோடு ஸ்ரீஅன்னையின் சக்தியால் நம்முள் உள்ளவை உருமாற்றி ஜீவன் முழுவதும் அவளாக மாற உழைப்போமாக.

161. திக்கற்றவர்களுக்கு தெய்வமே கதி. குழப்பத்தில் உள்ளோர்க்கு குருவே துணை. நாதியற்றோருக்கு நாராயணன். சீரழிந்தவனுக்கு சிவன். ஆதரவற்றவனுக்கு ஆண்டவன். இன்னலுற்றோனுக்கு இறைவனே கதி....

இப்படி உடலால் உள்ளத்தால் அறியாமையால் பலவித பாதிப்பால் பரிதவிக்கும் மக்களை மனதில் இதயத்தில் இனிய அன்னையை பலங்கொண்ட மட்டும் அழைத்து, அமைதி கண்டு ஆனந்தத்திற்கு உள்ளாகுங்கள். நல்வழிகாட்டி நன்மை பெருக்க ஸ்ரீஅன்னையே நமக்கு எல்லாம் ஆகிடுவாள். தீராதவை தீரட்டும், அனைவருக்கும் நல்வழி பிறக்கட்டும், அல்லல் அகழட்டும் ஸ்ரீஅன்னையே தஞ்சம்.

162. ஓ ஸ்ரீஅரவிந்தரின் அதிமன சக்தியே முடியாததை முடிப்போரே! கீழோர், மேலோர், நல்லோர், தீயோர், அசுரர், தேவர் அனைவருக்கும் தீராத பிரச்சினைகள் எதுவாகிலும் தீர்க்கும் திறன் கொண்டோரே. தாங்கள் காட்டிய தரணியில் பிறந்த தாயிடம் தஞ்சமாகிறோம். ஏனெனில் ஸ்ரீஅன்னை மூலமே அனைத்தும் மாறிடும் மார்க்கம் காட்டியுள்ளீர்கள். இப்புவி முழுமையாக உமதுடமையாக திருஉருப்பெறும் வரை எமது ஆன்மீக நன்றி கடனை செலுத்தியவாறுள்ளோம் ஏற்றருள்வீர்களாக.

163. தனித்து வளரும் ஆன்மாக்களே. ஸ்ரீஅன்னையே முழுமைக்கு காரணம் என உலகு உணர்ந்துள்ளது. உருப்பெறுகிறது. கொக்கென நினைத்தாயோ கொங்கனவா? என புவிப்பெண் ஞானத்தை ஞானிகளுக்கு புகட்டிய புகழுடை புவியே ஸ்ரீஅன்னையின் இதயமாயிருக்கிறது. ஞானிகளே, துறவிகளே, சாதுக்களே, மகான்களே, ரிசிகளே,யோகிகளே,சித்தர்களே விழியுங்கள். ஸ்ரீஅன்னையின் அன்பால் மென்மேலும் உயருங்கள். உங்கள் ஆற்றல் மிகு செய்கைகள் ஸ்ரீஅன்னையால் புத்துணர்வாகி, துரிதமாகி, அக, புற உலகு உய்விக்க உதவுங்கள். உமக்குள் வளரும் ஸ்ரீஅன்னைக்கு அவனி மக்கள் சரணடைகிறோம்.

164. விஷ்வ சக்தி தேவர்களே தாங்களெல்லாம் அவதாரங்களாக, திருவிளையாடல் புரிபவர்களாக, மூன்று தேவிகளில் யார் உயர்ந்தவர்களென்று நிரூபிக்க, நக்கீரன், அனுசியா, ஸ்ரீவள்ளி உயர்வினை அனைத்து லோகங்களும் அறிய செய்திட்ட மேல் மன முப்பத்து முக்கோடி தேவர்களே இப்புவி வாழ்வு மலர்ந்திட ஸ்ரீஅன்னையின் அவதாரத்தை தாங்களும் அனைத்து லோக சக்தியிலும் முன்னோடி சக்தியான சைத்ய அதிமன சக்தியுள்ளாகி அதிக திறம் பெற்று எங்கும் ஆனந்தமும், சைதன்யமும், சத்தியமும் செறிவுடன்

நிறைவு பெற விழித்து உதவி சைத்திய அதிமனஅன்பால் மென்மேலும் மகிமைக்கும் மதிப்புக்கும் உள்ளாக்கி மகத்துவம் நிலவ உம்முள் வளரும் சத்திய, அதிமன அன்னையை வணங்கி இறைஞ்சுகிறோம். கருணைக்கடலாய், ஆனந்தமாய் ஆகாயமாய், சத், சித்து, ஆனந்தம் சைத்திய, அதிமன, சச்சிதானந்தமாக, இடம், காலம், உருவம் கடந்துதவி எல்லாமே எல்லாமுமாக ஆகிட அருள்பாவிக்க ஸ்ரீஅன்னையின் மூலம் இறைஞ்சுகிறோம்.

165. ஸ்ரீஅன்னையின் வழிச்செல்லும் சக பக்தர்களே சாதகர்களே ஒருவருக்கு ஒருவர் ஸ்ரீஅன்னையின் உணர்வில் உயர்வுற உதவுங்கள் .உம்முள் உள்ள சைத்திய அன்னை வளர நிலைபெற மிக மிக உதவிடும் வழி இதுவே. சமயத்தில் காலம் முழுக்க சேர்த்த ஆன்மசக்தியையும் ஸ்ரீஅன்னைக்காக இழக்க நேரிடினும் கலங்காது மகிழ்வுடன் அர்ப்பணித்து ஸ்ரீஅன்னைக்காக ஆனந்தங்கொள்ளுங்கள். உமக்கு இதுவரை அடைந்த உயர்வினை விட பண்மடங்கு உயர்வடைய அவள் அருள்வதை உணர்வீர்கள்.

166. ஒருகாலத்தில் ஸ்ரீஅன்னையை விரும்பாதவர்கள் தற்சமயம் பெரும் பக்திமானாகிஉள்ளனர். பலயுகங்களாக ஸ்ரீஅன்னையை நாடிய ஆன்மாக்கள் மனித பிறவி எடுத்து ஸ்ரீஅன்னையை தஞ்சமடைந்து அவளின் தொண்டாற்றுகிறார்கள். இனியும் எத்துனை அவதாரங்கள் எடுத்தேனும் ஸ்ரீஅன்னையின் குழந்தையாய் கருவியாய் ஆகாமல் விட மாட்டேன் என வைராக்கியம் கொண்ட ஆன்மாக்கள் எத்தனை எத்தனையோ அதுபோல் அசுரருக்கும் அசுரராயிருந்தவர்கள் ஸ்ரீஅன்னையின் தொண்டால் தானும் உருமாறி அக, புற உலகினையும் உருமாற்ற உதவிடும் சக்திகள் எத்தனையோ ஸ்ரீஅன்னையின் எதிர்கால பார்வைக்கே வெளிச்சம்.

167. லோகமாதா, ஜகன்மாதா, ராஜராஜேஸ்வரியே, பராசக்தியே ....எண்ணற்ற தாய் தெய்வங்களே ,துர்க்கையே ..எமது பாரம்பரியமாக வந்த வளரந்த எங்களுக்கு இந்த மானிட வடிவில் அவதரித்த உமது அனைத்து கூட்டு சக்தியின் ஓருருவான ஸ்ரீஅன்னையை காண்பித்து எமது உணர்வினை சைத்திய உணர்வாக உயர்த்த உதவிய உங்கள் அனைவருக்கும் சைத்திய அன்னைமூலம் நன்றியை செலுத்துகிறோம்.

168. பிளவற்ற, பசகற்ற சைத்திய அன்னை ஊட்டி உலகினை உயர்விக்கும் இனிய அன்னையே எங்கும் இசைவினை உண்டாக்கி எல்லோரையும் ஏற்று எல்லோரும் பயனுற புவியில் உருவாய் வாழ்ந்த காலங்கள் சிறிதாயினும் அருவாய் ஆற்றிய அதிமன வெளிப்பாடு. உருவ ,அருவ பரிணாமத்திற்கே ஆதார உருவாய் எமக்கருளியதற்கு நாங்கள் செலுத்தும் நன்றி, ஆற்றும் தொண்டு, எம்மாத்திரம்? கடுகினும், அணுவினும், தூசினும் சிறிதே.

169. புதுவையில் ஸ்ரீஅரவிந்த ஆசிரமத்தையும், அருகே தமிழகத்தில் ஆரோவில்லையும், அக,புற வளர்ச்சிக்கு அமைத்த ஸ்ரீஅன்னையே மென்மேலும் நாங்கள் காலங்காலமாக தொடர்ந்திட அடுத்தடுத்து வரும் மனித சமுதாயங்களை ஏற்று பாதுகாப்பும், அன்பும், ஆற்றலும், அருளாசியும் வேண்டி முழுச்சரணடைகிறோம். எம்மை இவ்வுலகம் உய்விக்க உதவிடும் கருவிகளாகி வேண்டுகிறோம்.

170. ஸ்ரீஅன்னையே உமது பன்னிரண்டு அம்சங்களை எமக்கும் அருளி எம்மை உயர்வித்து உமது உடமையாக்கி உலகை அதிஉலகாக்கிட எம்முள் ஒற்றுமை பணிவு, துணிவு,கணிவு, ஐஸ்வர்யம் , கிரகிக்கும் ஆற்றல், விடாமுயற்சி, சகிப்புத்தன்மை , பரந்த உள்ளம் , தூய்மை .முன்னேற்றம், அமைதி , புத்துணர்வு, எழில் ,...இப்படி பன்னிரண்டு, பனிரண்டாக பல்லாயிரம் பனிரண்டு அம்சங்களை அருளி அன்பர்களை அரவணைத்து அதிஉலகாக்கிய அன்னையே! எம்மையும் உய்விக்க இறைஞ்சுகிறோம்.

171. தாயிற்சிறந்த கோவிலுமில்லை, தந்தை சொல்மிக்க மந்திரமில்லை. ஸ்ரீஅன்னையே அகத்தில் நிலைக்க இவ்வுடல் கோயிலாகிறது. அகக் கோயிலுள் சைத்திய அன்னையிடம் அதிமனம் ஸ்ரீ அரவிந்தரின் மந்திரவாக்காய் மேலுலகம் இப்புவியிலறங்க வெளிவருகிறது. நிலைபெற நாம் முயல்வோமாக.

172. ஸ்ரீஅன்னைக்கு உடலை, உயிரை, மனதை, அடிமனதை, உள் இயல்பை, அவசேதனத்தை, அர்ப்பணித்து. அவற்றுள் நிகழ்பவைகளை நிவேதித்து, அனைத்திலுள்ளும் எழும் பக்தியால் சைத்திய வளர்ச்சி அடைந்து உணர்வு ஒளியாகி அதிமன தளமாகிட ஸ்ரீ அன்னையை தஞ்சமடைவோமாக.

173. அழிகின்ற படைப்புகளெல்லாம் இயங்கியவாறுள்ளது. அமரத்துவமோ அழிவற்றதாக்கிட மோனத்தை அருளி ஸ்ரீஅன்னையிடம் இருமையும் ஆர்வமுற்று சைத்திய உருவாகி, அதிமன இறக்கத்திற்கு ஏற்புடையதாகிறது.

174. முழுமையாக தூய்மையுற விழையும் பக்தனே இனியும் ஒன்றிரண்டு தவறுகள், பலவீனங்கள் உன்னை ஆட்கொண்டுள்ளதை. விலக்க இயலாது தவிக்கும் தருணத்தில் ஸ்ரீஅன்னையின் உருவை, உணர்வை தொடர்ந்து விடாது அழைத்திடுக, அமைதி, நிறைவு, எல்லாம் எளிதாவது கண்டு களிப்பாய். இதய ஆழத்துள் ஸ்ரீஅன்னை உன்னை தொட்டதை உணர்ந்து உயர்வுறுவாய். குதூகலமடைவாய். இறை சித்தத்திற்கு இல்லாதது விலகும்.

175. இனிய அன்னையே சைத்திய உண்மையற்ற அதெய்வீக வாழ்விலிருந்து விடுத்து உமது சித்தப்படி வாழ அருளி, இருளான, மாய, அசுர, தீய, ஏமாற்றத்திலிருந்து காத்தருள இரவும், பகலும் இறைஞ்சுகிறோம். உம் கருணை ஒன்றே எம்மை தெளிவாக்கி விடுவிக்கும்.

176. அகவழிகாட்டுதல் ஸ்ரீஅன்னையுடையதாகினும் பிற ஆளுமைகளெல்லாம் தாமதப்படுத்தி, தடுப்பதாகி தேவையற்ற அலைச்சலை, காலத்தைக் கானல் நீராக்கி, கண்ணீருண்டாக்கி கலங்கிடச் செய்பவைகளே விலகிப்போங்கள். சைத்திய அன்னையிடம் அவ்வாறு செய்வதால் உமக்குத்தான் உண்மை முன்னேற்றம் காண கடுமையாகிடும். மீண்டும் அவளின் தொண்டாற்றி உம்மை உய்விக்க நேரிடும். ஆயினும் உமது முழுமைக்கு முடியாமலும் போகலாம். ஏமாற்றம் உமக்கே.

177. இனிய அன்னையே தாங்களே எத்துனை அன்னையாக இருந்து அன்பினை, ஆனந்தத்தைப் பொழிகிறீர்கள் மகாகாளியாக ஆழ்ந்த அன்பினாலும், மகாலெஷ்மியாக வசீகரிக்கும் அன்பு, ஆனந்தத்தாலும், தெய்வ அன்னையாக தெய்வ அன்பினையும், அன்பு ஒன்றே ஆயினும் நிலைக்கேற்ற அன்பினை, சைத்திய அன்பினை, அதிமன அன்பினை பொழியும் தங்களின் இவ் ஒரு தூல உடல் வடிவில் எத்துனை மகத்தும் அக உலகு, புற உலகு, புலனாகா உலகு அனைத்திலும் ஆட்சி செலுத்தும் அரவணைக்கும், ஒருங்கிணைக்கும் உள்ளம் கொண்டோளே! உமது அன்பிற்கு அளவுண்டோ? ஈடுண்டோ? இணையுண்டோ? இல்லவே இல்லை.

178. ஓ அந்தராத்ம அன்னையே முற்பிறவிகளின் பாவ, புண்ணிய நிலைகளை திருத்தி தங்களின் புத்துணர்வால் புதுவாழ்வு, நித்திய வாழ்வு, சைத்திய வாழ்வு, ஆன்மீக வாழ்வு, அதிமன வாழ்வமைப்பவளே! தங்களின் குழந்தைகள் இவ்வுடலை பிரிந்தாலும் அவருள் உள்ள அனைத்தையும் திருவுருவாக்கி, அதிமன சமுதாய உணர்வினை அமைத்துக்காப்பவளே! உமக்கு உமது எல்லா அம்மசங்களுக்கு, எம்மை எமது எல்லாவற்றையும் எமது உண்மை நிலை, சைத்திய நிலை அனைத்தும் எவ்வுடலாகினும், உருவ அருவ கடந்திட்டாலும் உமக்கே அர்ப்பணம், அர்ப்பணம், அர்ப்பணம். மற்றவை வெற்று சொற்பணம்.

179. உலக மக்களனைவரும் இனிவரும் எக்காலத்தும் தங்களை தாங்களே ஸ்ரீஅன்னையின் குழந்தையாக்கி அவளுள் அவளுக்காக வாழும் சமுதாயத்தின் பழைய, உருபெறா, முழுமையுறா, உணர்வுகளனைத்தும் அச்சமுதாய சாதனையால் ஸ்ரீஅன்னையின் உணர்வு, ஒளி, அன்பு, கருனை, அருள், அழகு, இசைவு, ஆனந்தம், செயல், ... இவற்றால் சைத்திய வாழ்வாகி, வஞ்சனை, சிக்கலற்ற சீர்மிகு ஏற்றம் பெற்று இப்பூவுலகு மலர்ந்து மணம் வீச பரிணமிப்பது ஸ்ரீஅன்னையின் மதத்துவமே.

180. ஓ தூல உடலே உனது உண்மை ஜீவனில் ஸ்ரீஅன்னையை நிலையாகக் கொண்டு அவளின் ஆதிக்கத்தால் மனத்தை, பிராணனை சீராக்கி ஸ்ரீஅன்னையின் இராஜ்ஜியத்தை விரிவாக்கி இன்னும் அடிமனம், உள்ளியல்பு, அவசேதனம் வரையிலும் ஆன்மிக சாதனை புரிந்து அவளுக்காக உருமாற்றி அர்ப்பணித்து இப்புவியையே அமர அதிமன உலகாக்கிய ஸ்ரீஅரவிந்த அன்னையின் கருனையால் கருவியாகி, அவர்கள் அதிமன வெளிப்பாட்டிற்க்காக அவசேதனத்தை அதிசேதனமாக்கி, ஒரே குறியாகக் கொண்டு, புகை, குடி, காமம், அரசியல் அற்ற விரதத்தால் வெற்றிக்கொண்டு அதிமன ஞானம் பெற தஞ்சமடைந்து, ஒவ்வொரு அணுத்துகளுள்ளும் ஸ்ரீஅன்னையின் அருளும், உணர்வும், ஒளியும், ஊடுருவச்செய்து, நித்தமும் ஒவ்வொரு மூச்சும், அசைவும் எண்ணமும், புலனுணர்வும் அவளுடைமையாக்கி முழுச்சரணடைந்து முழுமைபெற முனைவோமாக! ஓம் தத்சத் ஜோதிர் ஸ்ரீஅரவிந்தா ஓம்.

181. அடிமேல் அடிவைத்து முன்னேறுவதுபோல அக அனுபவங்களும் அடுத்தடுத்து அக காட்சியாய் வெளிப்பட உதவியாய் மாத்திரு மந்திரை அமைத்து அதிமன சமுதாய உலகமைக்க ஊன்றுகோலிய உன்னத அன்னையே உம்முள் நாமெல்லாம் தஞ்சமாகியுள்ளோம். ஆரோவில்லின் மாந்திரு மந்திரே உமது இதய அறை போலும் அவனிக்கே இதயமாய் திகழும் அனுபவம் தந்தவளே! உமக்கு எம்மூச்சுள்ளளவும் தாழ் பணிகிறோம். தங்கத் தரணியமைக்க அரிய சாதனையால் தளமைத்த தாயே உமக்கே நாம் உடமை.

182. சஞ்சலமான மனமே நிதானித்து ஸ்ரீஅன்னையை நினைத்து அமைதிபெறு. நிம்மதியிலா நெஞ்சே, நெகிழ்ந்துருகி அவளிடம் நெருங்கிடுக. கிடு கிடு பள்ளத்திலிருப்பினும் கலங்காதிருக்க ஸ்ரீஅன்னை மீது ஒரு முனைப்படுக. குறையுடமைக்கு தீர்வுகாண தெளிவுறுவாய். பாதை நன்கு அமையும். இனிய அன்னையால் ஆறுதலடைவாய். ஆனந்த வாழ்வு மலரும். இன்னல் அகலும். மகிழ்வினை தந்த தாயின் மலரடிகளை இருகப் பற்றி முத்தமிடுவாய்.

183. பால பருவத்தில் சைத்திய புருஷன் முன்னுக்கு வர, வாலிப பருவத்தில் மேன் மேலும் முன்னேறிய சாதருக்கு வயோதிகப் பருவத்தில் கனிந்த ஞானப் பிழம்பாகி ஜொலிப்பதிலே ஸ்ரீஅன்னையின் வடிவைக் கண்டு அவருக்குத் தரும் மதிப்பினை என்னென்பது. பக்குவமாய் முப்பருவங்களையும் ஸ்ரீஅன்னைக்கு உடமையாக்கிய தாலோ? முரணாக செயல்படாததாலோ? முழுமையாக ஸ்ரீஅன்னைக்கு தன்னையே நிவேதித்ததாலோ? சரிவிலா இச்சா சக்தியும், திட சித்தமும், சிதறா சிந்தனையும் குலையா உணர்வும், உறுதியான முடிவும், பிசகா பிடிப்பும் கொண்ட ஸ்ரீஅன்னையின் பக்தர்களே! சாதகர்களே! தொண்டர்களே! நேரிடையான உமது நெருக்கம் ஸ்ரீஅன்னையே உம்மை வழிநடத்துவதால் நிகழ்ந்தவையோ? நிழலற்ற, நித்திய பரமனின் ஸ்ரீஅன்னையே நம் மிர்ரா அல்லவோ? அவளுக்கே அனைத்தும் அர்ப்பணித்து, சரணாகதியாகிடும் நெஞ்சங்களை நெகிழ்வித்து வழி நடத்தும் தாயே! உம் புகழே எம் துதி.

184. ஸ்ரீஅன்னைக்காக வாழும் பெரியோர்களே! மகான்களே, யோகி, ரிஷி, சாதகர்களே! உங்களின் உணர்வான புறத் தொண்டால் அகவளர்ச்சியருளிய ஸ்ரீஅன்னையுள் லயித்து, நினைவுகூறி, ஆற்றும் தொண்டே தியானமாய்

ஆசிரமத்தின் அங்கங்களாய், அகத்தில் தங்கங்களாகி தாழா நிலையாகி நிகரற்ற தொண்டே ஸ்ரீஅன்னையெனவாகிட தங்களுள் மணம் கமழும் கமலங்கள் விரிவாக ஒளியெழும் உடலை காணும் அகஉலக பக்தர்களும் உணர்வுற, வழிகாட்டும் உமக்கு நன்றி.

185. பரமனால், இறைவனால், ஸ்ரீஅரவிந்தரால் தீர்மானிக்கப்பட்ட அதிமன வெளிப்பாடு இப்புவியில் பரிணமிக்க, மிளிர அனைத்தும் திருஉணர்வாகிட அமரத்தன்மை கொண்ட அதிமன ஆமை புவி உணர்வினைத் தாங்கி ஒளியுடல் கொண்ட தூல ஜீவன் நிலைத்து செயல்திறன் கொண்ட பனிரண்டு வெண்ணிற சைத்திய ஒளிர்கதிரால் அனைத்தும் அதிமன உணர்வாகிட அருளிய பெருமானுக்கு முக்கால மக்களும் அகப்புற இயற்கையும் சரண் அன்றோ! மேல் மனக் கடவுளர்களும் இஃதினையடைய விழைந்து ஸ்ரீஅரவிந்தமிராவின் ஆளுமைக்கு ஆட்பட்டு இயங்கி சூட்சும தொண்டாற்றி பரிணமிப்பது கண்டு பரவச மடைவது என்னே மகத்துவம், பெருமை, ஆனந்தம், ஆன்மீகம் ஈடுண்டோ? தெளிந்தோரே, அனுபவித்தோரே ஸ்ரீஅன்னையை அணுகுவது இதனாலன்றோ!

186. ஞானியர், யோகியர், தபசிகள், ரிஷிகள், தேவர்களுக்கும் எட்டா நிலைகளையும் சிருஷ்டித்து, தேவ நிலைகளுக்கும் இதுவரை அறியப்படாததை வெளிப்படுத்தி அதை அவனியில் எளியோர், பாவி வரையிலும் எளிதாக அடைய வித்திட்ட ஸ்ரீஅன்னையே. இனியும் எதிர்வரப்போகும் நிலைகள் யாதென யாரும் அறியா நிலைதளங்கள் எண்ணற்றவைகள் உள என்பதை மட்டும் உணர முடிகிறது. அடி, முடி காண முடியா ஈஸ்வரனும், இனி ஒரு காலை எங்கு வைப்பது எனக் கேட்ட விஷ்ணு பெருமானும் அறிய விரும்புவதை படிப்படியாய் வெளிப்படுத்துபவளே! தெய்வ அன்னையே, லோக மாதாவே! உலகாதீய அன்னையே இதுவரை சொல்லால் சொல்ல முடியா உயர் அன்னையே! உணர்வாலும், ஒளியாலும் காணக்கிடைக்கா தாயே இதுவரை அடைந்த நிலையாலும், இனி அடையப்போகும் நிலையாலும் அறிய இயலா தொடர் வளர்ச்சியுடைய ஸ்ரீஅன்னையே, சைத்திய அன்னையே உமது ஒரு கதிரையேனும் அடைய அருள இறைஞ்சுகிறோம். ஒருதுளி அமுதேனும் பருகிட வலிமைதாருங்கள். குறுகிய தனியுடல் எத்துணை விஸ்வமாகிடினும்

கிரகிக்க, தாங்க இயலுமோ? அளவறிந்து அருளும் ஸ்ரீஅன்னையே! உமக்கே சரணம் அனைத்தும்.

187. தபத்தால், யோகத்தால், சாதனையால் எத்துணை வலிமை, சக்தி, உணர்வு, ஆனந்தம், சச்சிதானந்தம், முக்தி, அனுபூதி அடைந்தாலும் ஸ்ரீஅன்னையின் உணர்வு முன் கைக்குழந்தையாக கரைந்து விழும்படி ஆக்கிடும் உமது கருணைக் கடலோ? அருளின் ஆகாயமோ? உணர்வின் உலகோ? ஒளியின் வெளியோ? அணுவின் ஆற்றலோ? அண்டங்கடந்த அன்போ? பிண்டத்துள்ளிருக்கும் பிரம்மமோ? எல்லாவற்றினுள்ளும் அடங்கியதோ? எதாலும் அகப்படாமல் ஆகாய வெளிக்கும் வெளியோ? சிறுதுளியும் சிக்கா சிகரமோ? சிறப்பை வருணிக்க வாயுண்டோ? மகிழ இதயமுண்டோ எழுத எழுத்துண்டோ கரைநீக்கும்கரைகடந்தவளே! குறை தீர்க்கும் நிறைவான வளே! குழந்தையாய் உமது நினைவில் வாழ்வது விடுத்து வேறு தேவையோ?

188. தன்னடக்கம், பணிவு, கீழ்படிதல், தாழ்மை, எளிமை, ஒருமை, இசைவு, சாந்தம், பொறுமை, விடாமுயற்சி, நிவேதனம், ஆர்வம், பக்தி, தூய்மை, ஸ்ரீஅன்னையுள் ஒன்றி ஐக்கியமாதல், ஒரு முனைப்பு, சரணம், சைத்தியவளர்க்குக்கு விலக்கல், இவையெல்லாம் தொண்டால் ஸ்ரீஅரவிந்த, ஸ்ரீஅன்னை நூல்களைப் படிப்பதால், அர்பணத்தால், ஆசிரம ஆரோவில் தரிசனத்தால், சச்சங்கத்தால், தனி, கூட்டுத்தியானத்தால், அகசாதனையால், பிறந்தநாளில் தனது ஜீவனுள் ஸ்ரீஅன்னையை காண்பதால், அரிய தொண்டால் இன்னும் எண்ணற்ற வழிகளில் முயன்றேனும் இனிய அன்னையின் அருளில், கருணையில், உணர்வில், ஒளியில், சக்தியில், மோனத்தில், ஒரு துளியேனும் இப்பிறவியில் அடைந்து ஆன்மீக அதிமன நிலைக்கு அதுவே உயரிய (சத்பொருளாக) சொத்தாக அடைய வாழ்நாளெல்லாம் ஸ்ரீஅன்னையுள் முயற்சிப்போமாக. ததாஸ்து.

189. ஒரு மனிதன் தெய்வீகமாக வாழ பிரபஞ்ச உதவி தேவை. ஆனால் தானே, தனதுள் ஸ்ரீஅன்னையின் பிரசன்னத்தால், ஆளுமையால் உருவாக்கிய பிரபஞ்சத்தால், உதவிடும் புற பிரபஞ்சத்திற்கும் மேலாகி கடந்து, தன்னுள் உள்ள ஸ்ரீஅன்னையால் இதுபோன்ற பிற பிரபஞ்சங்களுக்கும் (Universes) உதவும் அதி பிரபஞ்மாக (Cosmic) ஆகிறார். இம்மானிட

உடலுக்கு இத்துணை புகழைத் தந்திடும் ஓம் ஸ்ரீஅரவிந்தமிராவே நமஹ. நமஹ. நமஹ.

190. தனது உண்மையின் உண்மையான அகத்திறவு, அகத்தூண்டல், அகக்காட்சி, அகச்செயல் நேரிடையாக எல்லாவற்றிலும், எங்கும் (அகப்புற) உள்ள உண்மையுடன் தொடர்புறச் செய்வது ஸ்ரீஅன்னையின் சைத்தியபுருஷன் ஒன்றேயாம்.

191. அதிபிரபஞ்ச நிலையில் மையங்கொண்டு அண்ட சராசரங்களைப் படைத்தும், காத்தும், அழித்தும், பல் வடிவில் வாய்ப்பினை உருவாக்கி நெகிழ்வினைத் தந்திடும் மேல்மன தேவர்களும் அனைத்தையும் ஸ்ரீஅன்னையின் அவனி வளர்ச்சிக்கு அதிமன வெளிப்பாட்டிற்கு உயரிய உன்னத உருமாற்றத்திற்கு உதவிடும் ஸ்ரீஅன்னையின் கருவிகளன்றோ!

192. புவிப் பரிணமிக்க தசாவதாரமாய் மகாவிஷ்ணுவும், திருவிளையாடலாய் சிவபெருமானும், அணுஷியா தூய்மையில் உயர்ந்ததை காண மும்மூர்த்திகளும், சக்தி, லக்ஷ்மி, சரஸ்வதியும் தமது தகுதியை பரிசீலிக்கி ஸ்ரீஅன்னையின் சைத்திய பூமியில் அவதரித்து மக்களுக்கும் தேவையானதை அருளி அவர்களும் சைத்திய மகிழ்வோடு பரிமாற்றம் செய்துகொள்ள இனிய அன்னை தங்கபாலமாக திகழ்ந்து இன்னும் அதிமன இறக்கத்திற்காக கைலாயம், பிரம்மலோகம், வைகுண்டம் எல்லாமே புவியிலேயே அதிஉலகாக அமைய ஆர்வமுறுகிறார்களோ? இயேசுகிருஸ்து, முகமது நபி போன்றோர் மீண்டும் வருவோம் என்பது புவியினை உயர் உணர்விற்கு உயர்த்திடவோ? இனிய அன்னையே அவனித்தாயே உமது குழந்தைகளை அரவணைத்து ஆதரிப்பது கண்டு களிக்கிறோம்.

193. ஸ்ரீஅன்னையின் நினைவில் ஆழ்ந்த ஆன்மா தனதுணர்வில் பெறும் அனுபவம், உண்மைக்கும் ஒளிக்கும், சக்தி, வலிமைக்கும், முழுமையாக செயல்பட செய்வது ஸ்ரீஅன்னையேயாம். அந்தராத்மாவில் வளரும் ஸ்ரீஅன்னையின் சாந்நித்யத்தை நித்தமும் அணுவேனும், கணநேரமேனும் அகலாதிருக்க விழிப்புணர்வோமாக. ஓம். தத் சத் ஜோதிர் ஸ்ரீஅரவிந்தா.

194. அன்பெனும் பிடியில் அகப்படும் மலையே என்பர். ஸ்ரீஅன்னையெனும் அந்தராத்மா சைத்திய விழிப்பால் அதிபிரஞ்சத்தை ஆளும் விஸ்வ

தேவர்களே பக்தியால் பலபிறவிகளைக் கடந்த ஜீவனின் பக்தி ஆணைக்கிணங்கி பிரஞ்ச படைப்புகளை ஸ்ரீஅன்னையின் அதிமன உலகிற் கேற்ப மாற்றியமைக்க உதவிடுமாம். மதர்ஸ்ரீஅரவிந்தாய. ஓம் நமோ பகவதே!

195. பிரபஞ்ச எல்லையற்ற இறைவனையே அச்சாக வார்த்ததே மனித உடல் என்பர். உதாரணமாக உடலே பராசக்தி, நட்சத்திரக்கூட்டங்களவு உடல்அணுக்களே முப்பத்து முக்கோடி தேவர்களளவு என்பர். கண் அக்கினி ஈஸ்வரன், வாய் மண் உண்டு வாயில் அனைத்தையும் காட்டிய கிருஷ்ணன். மூக்குக் காற்றால் மெய்யைக் காப்பதால் ஐயப்பன் மெய்யப்பனே மறுவியது. வலதுமூக்கு சூரிய கலை. இடமூக்கு சந்திரகலை சிவன். ஹரியும் சிவனும் ஒன்று. இவர்களின் குழந்தை மெய்யப்பன். இரு கலைகள் சிறக்க ஆரோக்கியம், ஆன்மீகம் ஆகவே ஐயப்ப மலைவாசம். சுவாசம் சுடர் பெற (பிராணாயாமம் கிரியா சர்ப பிராணா இத்யாதி) விரதமோ? தலை உச்சியில் பனிரண்டு லக்கன நிலைக்கு உயர்ந்தவர்களுக்கு சுத்தமான பரத்தை உடையவருக்கு தலை உச்சிக்கு சுப்பரமணி (சுத்த பரமணி, முருகன் என்பர்). விநாயகர், மூன்று தேவி ........... எல்லோரும் உள்ள இந்த உடலில் ஸ்ரீஅன்னையை நினைவு கூறி, உடலில் நிகழ்பவை அனைத்தையும் அவளுக்கே அர்ப்பணிக்க அர்ப்பணிக்க அற்புத படைப்பாகி தன்னையாண்டான் தரணியாண்டான் பிண்டத்துள் ஸ்ரீஅன்னையைக் கண்டு அண்டத்தை ஆளும் வல்லமை பெற்று எல்லையற்ற இறைவனும் தானும் ஒன்றேயாம், அடைந்தவர் ஆயிரமாயிரம். அடையப் போவோரும் அவ்வாறோ எல்லோரும் ஒன்றான கூட்டுணர்வும் ஸ்ரீஅன்னையின் உணர்வாகி அதிமனித சமுதாயத்தை மீண்டும் புதுப்பித்து புதிய அரிய, அறிய அதிபிரபஞ்சமாகிட அனைத்தும் அறிந்தோ, அறியாதோ வளர்ச்சிக்கேற்ப செயல்பட்டு அதிஉலக ஸ்ரீஅரவிந்தரின் ஆன்மீக வாழ்வை நோக்கி புவி, பிரபஞ்சம், அக உலகனைத்தும் விழைகின்றனவாம். ததாஸ்து.

196. தனிமனித அன்னை (ஈன்ற அன்னை) ஆன்மாவை தாங்கிய ஒவ்வொரு உடலின் இயற்கையை வளரச்செய்கிறாள். திருஉருபெறச்செய்யும் ஸ்ரீஅன்னை எல்லா உணர்வுகளையும் ஒருங்கிணைத்து தனி அன்னை பிரபஞ்ச அன்னையோடு இணைத்து மூன்று அன்னையும் எல்லாருள்ளும் உள்ளார்கள். புறத்திலுமுள்ளார்கள். எல்லா அன்னையும் நாம் வணங்கும்

ஸ்ரீஅன்னையுள்ளேயே உள்ளார்கள். பிரபஞ்ச அன்னை மேலுலக சக்திகளை ஒருங்கிணைத்து சிருஷ்டித்துக்கொண்டேயிருக்கிறார். அவளையும் புவியின் அன்னையையுமே திருவுருச் செய்யும் ஸ்ரீஅன்னை இணைத்து புற, அக பிரபஞ்சத்தில் எழும் ஜீவ சக்திகளை ஒன்றாக்கி சைத்திய ஆளுமைக்கு உதவி அனைத்து லோகங்களும் அடைய வேண்டிய அதிமனத்தை புவிக்குத் தொடர்ந்து வெளிப்பட்டு நிலைபெற அருள்கிறார். ஸ்ரீஅரவிந்தர் அதிமன இறைவனாக வெளிப்படுகிறார். இனிய அன்னை அனைவருக்கும் அதிமன வழிகாட்டிச் செல்கிறார். அடுத்தடுத்த மேல் மன சக்திகளும், சாதகர்களும் பக்தர், யோகியர், தபசி, ரிசிகளும், அசுரர்களும், இயற்கை, பஞ்ச பூதங்களும், உருவ அருவ உணர்வுகளும், நாளுக்கு நாள், வினாடிக்கு வினாடி, யுகத்திற்கு யுகமாகவும், தங்களை தாயிடம் தஞ்சமாக்கி அந்த அமர இலக்கை நோக்கி முன்னேறி பரிணமிக்கிறார்கள். அனைத்தையும் ஸ்ரீ அன்னை அரவணைத்து, பாதுகாத்து, சைத்திய செயலால் அதிமனசமுதாயமாக்குகிறார்.

197. புவிஉணர்வுள் ஆளுமைகொண்ட தனிமனித சைத்திய புருஷனால், பிரபஞ்சங்கடந்த அதிபிரபஞ்ச (Cosmic) மேல்மன ஆளுமை பிரபஞ்சங்களும் திருஉருவடைய செயலாற்றலுடைய ஆன்மீக அன்னைக்கான அந்தராத்மாவானது தானே ஒரு அதிபிரபஞ்சமாகி தொண்டாற்றி தனது மனிதமனமே மேல் மனத்தில் குறைநீங்கி கரைகிறது. பின் அந்த சைத்தியபுருஷன் அதிபிரபஞ்ச இருக்கையாய், செயலாய், தானே சிருஷ்டிகர்த்தாவாய், உண்மை உருமாற்ற சக்தியின் வெளிப்பாடாய் ஸ்ரீஅன்னையின் கருவியாகிறது. எத்துணை அந்தரங்க ஆற்றலை ஸ்ரீஅன்னை அவனிவாழ் ஆன்மாவிற்கு அருளுகிறார் என்றால் வியப்பே, ஆச்சரியமே, களிப்பே அவளின் மகிமையே மகிமையன்றோ!

198. ஸ்ரீஅன்னையின் குழந்தையாய், கருவியாய் ஆன சைத்திய புருஷன், உருவ, அருவ உணர்வுகளையாளும் அதிபிரபஞ்சமாய் புதிய பரிணாம உணர்வாகிய பின்பே அவசேதனத்தை நிவேதித்து, ஆன்மீக மாற்றத்துள்ளாக்கி, அதிமன சக்தி, உணர்வு, ஒளியினை அடைய சாத்தியக்கூறாகிறது. மேல்மன நிலையளவில் அந்தராத்தமாவிற்கு அவசேதன ஆளுமை திறனில்லை. இவையனைத்தும் இனிய அன்னையின் உணர்வில் ஒளியில் அருளில் லயித்து, ஆசிரம, ஆரோவில்லில், இல்லில், உலகில் எங்கு எப்புறப் பணி

செய்யினும் சாதனை செய்ய வாழ்வனைத்தும் யோகமாக்கியுள்ள எளிய வலிய வழியைக் காண்பித்த எம் இதய நுண்ணணுவிலும், இதயத் துடிப்பிலும், இரத்த நாளங்களிலும் ஊற்றாய் எழும் ஸ்ரீஅன்னையை கோடி, கோடி, கோடானுக்கோடி, எண்ணற்ற வழிகளில் பக்தியாலும், துதியாலும், புகழாலும், பூஜித்தாலும் நிறையவே நிறையாத அளவு சைத்திய அன்பினைப் பொழிந்து ஈர்த்து இயக்கமற்ற இன்பத்தை, மகிழ்வை, அமைதியை, மோனத்தை, ஆனந்தத்தை, அருளிய ஸ்ரீஅன்னையே உமது தெய்வீக பாதமே கதி.

199. அதிமன அன்னையை அனுபவமாகக் கொண்ட சைத்தியபுருஷன் மோன நிலையில் ஆற்றும் ஸ்ரீஅன்னையின் அகப்பணியினை புற அறிவாற்றலால் அறிந்திட முடியுமோ? பாம்பின்கால் பாம்பறியும், கற்றாரோ கற்றாரையறிவர். ஞானியரே ஞானியை அறிவர். அனைவரும் ஆழ்ந்து ஊடுருவி உள்ளே புலனுக்கும் எட்டா ஜீவ உணர்வுக்குள்ளானால் அதிமனத்தாயிடம் தஞ்சமடைய அமர அனுபவம் ஆயிரமாயிரமுண்டாம்.

200. ஓம் தத்சத் ஜோதிர் ஸ்ரீஅரவிந்தா. ஓம் ஸ்ரீஅரவிந்தமிரா. மதர் ஸ்ரீஅரவிந்தா உமது கருணையால் இனிய அன்னையை அவனிக்குக் காண்பித்து இருள் நீக்கி அருளொளியால் இவ்வுலகைத் தொடர்ந்து நிரப்பும் அதிமன அருவியன்றோ! தங்கள் ஆணைப்படி ஸ்ரீஅன்னைக்கு சரணடைகிறோம். அவளே எமக்கு எல்லாம்.

201. இதுவரை வந்த அவதாரங்கள் திருவிளையாடல்கள் விபூதிகள், வேத, உபநிடத, காவிய, புராண, இதிகாசமந்திரங்கள், மலைகள், சிகரங்கள், மேகங்கள், வானில் நிலவும் விண்மீன்கள், அனைத்துள்ளும் இறைவா ஸ்ரீஅரவிந்தா உமது உருவே, ஒளி, ஒலியாக சைத்திய உடலுள்ளோருக்கு காட்டியருளும் கருணை கடலே, அசையா நிலையான, நித்திய நிரந்தர மோன உருவே, அருவே, குருவே ஸ்ரீ அன்னை எம்மை வழிநடத்தி உம்முள் சேர்க்கும் பெரும் கருணையை களிக்கையில் கண்ணீரே கடலாகிறது.

202. 1926 நவம்பர் 24ம் நாள் ஸ்ரீகிருஷ்ணரின் உணர்வு ஸ்ரீஅரவிந்தரின் உடலில் இறங்கிய அதே நேரத்தில் ஈஸ்வரரும். ஸ்ரீஅன்னையினுள் இறங்க அனுமதியாது உடன் இருந்து உலகிற்கு உதவ ஸ்ரீஅன்னையார் கூறி அன்று

ஸ்ரீஅரவிந்தமித்ராவின் தரிசனத்தில் சூட்சுமாய் மேல்மன கடவுளர்கள் அனைவரும். கலந்ததை கேட்கும் போது எல்லோரும் அதிமன வெளிப்பாட்டினை வரவேற்று மேல்மனமே திருஉருப்பெற ஆர்வமுறுவதாகிறது. இனிய அன்னையே நீரே மனித சமுதாயதமதை எப்படி எப்போது பரிணமிக்க திருப்பெறச்செய்து அழைத்துச்செல்வீர்களோ அதை விரும்பி நாடும் மனித சமுதாயமே உம்முள் முழுச்சரணடைகிறது.

203. அதிமன அன்னையின் வெளிப்பாடு ஒவ்வொரு தனிமனித சைத்திய புருஷனுள்ளும், பவியின் சைத்திய இருக்கையிலும் வெளிப்படும் போது அறியாமை, பலவீனம், நோய் என்பதற்கு இடனின்றி அதிமன உலகாய், பிரபஞ்சமாய், சத்திய, நித்திய யுகமாய் திகழவே ஸ்ரீ ஸ்ரீஅரவிந்தரின் பெருமுயற்சிப் பயனை அனுபவிக்கும் அவனிவாழ் மக்கள் பாக்கிய சாலிகளே. புரிந்தோ, புரியாமலோ, அறிந்தோ, அறியாமலோ அனைவருக்கும் ஸ்ரீஅன்னை மீது ஏற்படும் தெய்வ அன்பினால் அடைவது உறுதியன்றோ.

204. அகத்தில் யாரும் அறியா வண்ணம் நுழையும் இருளான, அசுர, அழுக்கினை அகற்றிடும் அந்தராத்ம அன்னையே வலிமை மிகு உணர்வால் உரிய தருணத்தில் விழிப்புற்ற இருக்கையால் உயர் ஆளுமையால் உருவாகும் உயர் இயற்கைக்கு அக ஆன்மீக வளர்ச்சிக்கு உதவிட உம்மை சைத்திய பிரார்த்தனையால், எமது சைத்திய ஜீவனால் மட்டுமே அகப்புறம் அனைத்தும் இயங்கிட இறைஞ்சி சரணடைகிறோம். இன்னருள் புரிவரளே எமது உண்மை அன்னையே நீரே கதி.

205. அதிஇயற்கையிலிருந்து வரும் அதிமன ஒளி, வலிமை நன்கு தேர்ந்த சைத்திய புருஷனால் கிரகித்து அதன் கருவியாகி திரு உருமாற்றம் செய்ய நம் அன்னையின் உணர்வு உதவி உயர்த்துகிறது. ஸ்ரீ அன்னையின் மூலமாக அன்றி வேறு எவ்விதத்திலும் எளிதல்ல. அடைவது இயலாது பகவான் ஸ்ரீஅரவிந்தரே ஸ்ரீஅன்னையின் ஆணைப்படி நிறைய தூல ஒழுங்கினை கட்டுப்பாட்டினை கடைப்பிடித்துள்ளார் என்றால் பக்த சாதகர்கள் ஸ்ரீஅன்னையின் சைத்திய ஒழுங்கினை எவ்வாறு கடைப்பிடிக்க வேண்டும் என்பதை உணர்ந்து உயருவோமாக!

206. அகத்தில் தன்னை ஸ்ரீஅன்னைக்கு சரணாகதி செய்து தேறிய சாதகர், இனிய அன்னைக்கு நல்ல பாத்திரமாகி உண்மைத்தொண்டாற்றி உயருகிறார். மனதை விட இதயத்தை நம்புகிறார். தெய்வீக வெற்றியடைகிறார். தெளிந்த நீரோடையாக வாழ்வு மலருகிறது.

207. தெய்வஅன்னையின் சாநித்யத்தை காணும் சாதகர் உடலணுவினுள்ளும் சைத்திய உணர்வாகி ஸ்ரீஅன்னையை நிலையாக கொள்கிறார். அனுபூதியடைந்த ஆன்மாவாகி விழிப்பான செயல்திறனால் சாதனை புரிந்து அவளுள் கரைந்து அவளாகவே ஆகிறார்.

208. சைத்திய ஒழுங்கின்மையும், திறனின்மையும் அகத்தில் அல்லலுறச்செய்வதை ஸ்ரீஅன்னைக்கு அர்ப்பணித்து தனது உண்மை நிலையை கண்டு நிலைகொள்ள ஒருமுனைப்பட்டு, விடுபட்டு, வெளியாகி, ஒளியாகிட, தவமிருப்போமாக.

209. விடுபட்ட அகப்புற இயக்கங்களில் சாட்சியாக இருந்து இருக்கையின் உடல் மன பிராண ஜீவன்களில் அசைவற்ற நிலையில் எல்லாம் கடந்து ஸ்ரீஅன்னையின் பிரசன்னத்தை அனுபவிக்கும் சாதகர் இன்னலற்று, அகங்காரமற்று அதிமன இருக்கைக்காக அதிபிரபஞ்ச உணர்வோடு இப்புவியில் நிலவுகிறார்.

210. ஸ்ரீஅரவிந்தரின் அதிமன இயற்கைக்கு தன்னை தகுதியாக்கிய சாதகர் அதிபிரஞ்சங்கடந்த தனித்துவம் அடைந்து உண்மை ஒளியால் அறியாமை அகங்காரமற்று இசைவாக தம்முள் தாமே சிருஷ்டித்த பிரபஞ்ச உலகையும் விழிப்பான உணர்வுடன் முன்பிருக்கும் அகபிரபஞ்ச உலகையும் ஸ்ரீஅன்னையை முன்வைத்தே தொடர்புறுகிறார். தன் சைத்திய ஆன்மீக அதிமன வளர்ச்சிக்குள்ளானதை மட்டும் கிரகிக்க இனிய அன்னை அருளுகிறார்.

211. சாதகர் சிருஷ்டித்ததை உண்மை பிரபஞ்சத்தில் இசைவை சைத்திய வெளிப்பாட்டினைவிரிவாக்கி உண்மை, வலிமை, உணர்வு, ஆனந்தம், தூய செயல், சுதந்திரம், ஆன்மீக முழுமை ஒளியுருத்தும் ஒன்றிப்பு ஆற்றல் மிகு ஆர்வத்தில் இந்த அவனி திருஉறுப்பெற உதவும் ஸ்ரீஅன்னையின் எண்ணற்றவைகளில் ஒரு சிறு கருவியாக இவ்வாறு தேர்ந்து

தொண்டாற்றுகிறார். தமது உண்மையில் அறியாமை அற்று ஆழ்ந்து அகத்தே ஆளும் ஸ்ரீஅன்னையுடன் நிலைப்போருக்கு நிச்சயம் சாத்திமாம்.

212. தனது சைத்திய புருஷனுள் அதிபிரஞ்சங்கடந்து, ஸ்ரீஅரவிந்த மிராக்களின் அதிமன ஆளுமையால் பரிணமிக்கும் அதிபிரஞ்சமானது ஏற்கனவே உள்ள சகல பிரபஞ்ச சக்தி, ஒளி, உணர்வு, உலகினூடும் சிறிதும் பிசகாது இசைவாய் ஆயினும் தெய்வீக சைத்திய அதிமன இசைவாய் செயல்படுத்தும் நம் ஸ்ரீஅன்னைக்குள் ஒரு சிறு நுண்ணிய அணுத்துகளுக்கும் மிகச்சிறிதான ஸ்ரீஅன்னைக்காக வாழும் உயரிய எளிய சாதகரை அரவணைப்பதை உணரும் போது ஆனந்த பரவச பக்தி அவளின் பால் பொங்கி எழுகிறது.

213. தனது உண்மையைக்கண்ட ஆன்மா ஸ்ரீஅன்னையின் மீது பக்தி பரவசமாகி சைத்திய புருஷனுள் வாழ்ந்து எல்லா பற்றுகளன்று, எதையும் சார்ந்திராது, புறத்தில் முழுநிறைவோடு பூரணத்துவ நிச்சய சைத்திய வழிகாட்டுதலில் வாழ்வே நிகழ்கிறது. வளரும் சாதகரே அவரை சாருவர். ஸ்ரீஅன்னையால் வளரும் அதிமனத்தூண்டலால் அகப்புறத்தை பரிமாற்றி நிறைவுபடுத்தி உண்மையான உண்மையால் ஒன்றுபட்டு உருவாகும் அதிமன இயற்கைக்கு இட்டுச்செல்கிறார். ஒவ்வொரு மூச்சிலும் கோடானுகோடி வந்தனம் இனிய அன்னைக்கு செலுத்தவே தூண்டுகிறது, அவளின் அன்புக்கருணை.

214. இவ்வுடலில் சைத்திய புருஷன் தலைகீழாக விழுந்துள்ளதால் நேராக தலைகீழ்மாற்ற சாதனை புரிய அகமாற்றத்தால் புறத்தை ஆளுமைக்குள்ளாக்கிட ஸ்ரீஅன்னையை தன்னுள் நிலைநிறுத்தி புறத்தை நிவேதித்து, அர்ப்பணித்து, மீண்டும் நேராகும் சைத்திய வளர்ச்சிக்கு உழைக்கும், உறுதியுடைய சாதகர், தெய்வ ஜடமாக்கிட, இசைவு, அழகுள்ள வாழ்வமைத்து புதிய ஜீவனாக, அதிமன உணர்வினை கிரகிக்க ஏற்புத்திறனை ஸ்ரீஅன்னையால் அடைகிறார்.

215. அறியாமையற்ற ஜீவன் அமைதியுறுகிறது. அன்பும், தைரியமும் பொதுவென அறிகிறது. தானும் தனிமையற்ற எல்லையற்றது என்று உணர்கிறது. பின்பே உண்மை ஜீவனாய் எல்லையற்ற பிரபஞ்ச வாய்ப்பினைப் பெறும் தெய்வீகத்தனித்தன்மையாகி சைத்திய புருஷனாகிய ஸ்ரீஅன்னை மூலம்

உணர்வை, அறிவை, ஞானத்தை, உண்மையை, நேர்மையை வெளிப்படுத்தி தனது தரம், தகுதி ஸ்ரீஅரவிந்தரின் அதிமன தொண்டாற்றும் ஆற்றலாகிறது.

216. பிரச்சனை மனத்தளவே, அகத்திற்கல்ல. விளிப்புறுக. ஜீவனுள் லயித்திடுக. ஸ்ரீஅன்னையை கண்டிடுக. சைத்திய தூய்மையாகிடுக பொய்மை பொன்னாகிடும், அறியாமை அகவாழ்வாகிடும். அகங்காரம் அன்பாகிடும். ஆன்மீகம் ஆற்றல் மிகு ஆறாகிடும். தெய்வ அன்னையின் தோப்பில் மலர் வண்ணங்கள் மணம் கமழ்ந்திடும். இறைவனின் இனிமை தென்றலாய் புன்முறுவலோடு வீசி, மகிழ்வினை தந்திடும். உண்மையுடன் உயர் உலகுடன், நெகிழ்வுடன் நெருங்கிடும். ஓம் மிர்ரா ஓம்.

217. ஒரு சில சாதகருள் இனிய அன்னை நித்தியமாய் நிலைகொண்டு அவரின் சைத்திய புருஷனுள், உயர் இயற்கையிலிருந்து வரும் அதிமன ஈஸ்வர வலிமையை பொழிவது, அந்த உயர்ந்த, புண்ணிய புனித, எதாலும் பாதிக்கா, வீழா, கொழுந்தேரிய, சைத்திய அக்கினிக்கன்றோ! விதி, தர்மம், பாப புண்ணியங்கடந்து ஸ்ரீ அன்னையே கனலாய், கண்ணாய் பாவித்ததாலோ நிபந்தனையற்று, தன்னலமற்று, முழுச்சரணமே தவமாக்கியதாலோ!

218. விழிப்புற்று ஒன்றுபட்ட ஜீவன்கள் எல்லையற்ற தெய்வ ஜீவன்களுடன் ஒன்றறக் கலந்து எல்லையிலா அதிமன விதிக்குள்ளாகிடும். சைத்திய அன்னை செயல் மிகு ஒழுங்கமைந்த அதிமன ஜீவனாக, பரிணமிக்க, அதிமன படைப்புகளையும், வாழ்வையும் அமைத்து அருளுகிறார். தெய்வீக நன்றியை செலுத்தி செம்பொன் தழுவுவோமாக. ததாஸ்து.

219. பண்டை யோகியர் நேரிடையாக சச்சிதானந்தத்தில் திளைத்தனர், அதே சச்சிதானந்தத்தை உடல், மன, பிராண கீழ்த்தளங்களுக்கும் கொண்டுவர நம் ஸ்ரீஅரவிந்த மிர்ராக்கள் சைத்திய கல்வி, அதன்மூலம் வளரும் ஆன்மிகக் கல்வி இவற்றால் அதிமனக் கல்வியடையடைய வையகத்தின் வழிகாட்டியாக வானவரும் நாடும் வண்ணம் அதிமன சக்தியால் அவசேதன வரையிலான கீழ்த்தளங்களை உருமாற்றி சச்சிதானந்த்ததை புவியில் நிரந்தரமாக்கிய உயர்ந்த பரிணமிப்பினால் முழுமையான நிறைவான படைப்புண்டாக்கிய ஓம் ஸ்ரீஅரவிந்த மிராவே சரணம், சரணம். சரணம். சரணமே சரணம்.

220. இனிய அன்னையின் நேரிடையான ஆளுமைக்குட்பட்ட அந்தராத்மா, சைத்திய அருளாள், மகிழ்வால், அழகால், இசைவால் இறப்பின்றி அமரத்துவத்தை அடைகிறது. மனமும், பிராணனும் எதிராயும், தமது விருப்பத்தை திணிக்கவும் செய்யாத ஜீவனில் ஸ்ரீஅன்னையின் சித்தப்படி எல்லாம் நிகழ்ந்து நித்தியத்துவமாகும். சரணடைந்து சாதனைப்புரிவோம். சாந்தி, சாந்தி, சாந்தி, சாந்தி ஓம்.

221. நமது சங்கற்பமும், தீர்மானமும், விடாமுயற்சியும், எதாலும் தளரா இச்சாசக்தியும், உறுதியும், ஊக்கமும், தைரியமும், ஞானமும் விவேகமும் கொண்டு ஸ்ரீ அன்னையை தனது சைத்திய புருஷனில் கண்டு நிலையாகக் கொண்டு பிற யோக சாதனை புரிய துணிந்தோருக்கு இப்பிறப்பு தோல்வியுறாது. புகழுடம்பெய்தும். புண்ணிய, புனித வாழ்வாகிடும் . ஓம்தத்சத் ஜோதிஹி. ஸ்ரீஅரவிந்தா.

222. அழியும் இவ்வுடலில் அழியா அந்தராத்மாவில் ஸ்ரீஅன்னையைக்கண்டு தலைவிதியை மாற்ற முனைந்த மாந்தா மாணிக்கச்சுடராய், வைர ஒளியாய் மங்கா ஒளியாகிட சைத்திய அன்னையின் வழிகாட்டுதலில் விழிவைத்து விரைந்திடுக. வீணிலா நித்திய காலத்தை கண்டிடுக. கனலாகி கதிராய் எங்கும் எழில், சைத்திய அன்பு இசைவு, ஞானம் அமைதி, அழகு, பரவட்டும். இப்பணிக்கே பிறந்தாய், வளர்கிறாய், மாளாதிருப்பாய், மண்ணை பொன்னாக்கிடுக. ஸ்ரீஅரவிந்த அன்னையின் விழிதனை வளமாக்கிடுக வையகம் வாழ்வாங்கு வாழ தொண்டாற்றிடுக. துவழாதே. அஞ்சாதே. அயராதே, பதறாதே. கலங்காதே, சிதறாதே ஒன்றுபடுக உமது எல்லா அணுத்திறனையும் ஒன்றாக்கிடுக. ஸ்ரீஅன்னையின் உணர்வாகிடுக. உயர்வாய் உன்னதமடைவாய். உன்னுள்ளே ஒளிர்ந்திடுக.

223. ஸ்ரீஅன்னையின் ஆன்மீக அடிப்படையை நன்கமைத்த அந்தராத்மாவிற்கு ஒளிபொருந்திய மனம், வாழ்வு, உடல் எல்லாம் அகப்புற வாழ்வெல்லாம் ஒளியாகி, ஒளியாலே எல்லாம் ஆகிறது. தெய்வஅன்னையினுள்ளே வாழ்ந்து அவளுக்காகவே ஆகிறார்.

224. சைத்திய எழுச்சியுடன் வாழ்வதே முழுமையான சரியான, இசைவான, தூய்மையான, மகிழ்வான, தெய்வீகமான, அழகான, அமரமான,

ஆனந்தமான வாழ்வாம். அதை விடுத்தது இப்பிறவிக்கு கோணலானவை, கீழானவை, இருளானவை, நோயுற்றவை, பலவீனமானவை, உண்மைநிலையிலிருந்து தள்ளியுள்ளதின் அடையாளம். மீண்டும். ஸ்ரீஅன்னை மீது ஆழ்ந்து, அளவு கடந்து, பக்தி, ஆர்வம், நம்பிக்கையுடன் சாதனை புரிந்து அந்த நல்ல நிலைக்கே மீண்டும் வந்தாகவேண்டும், அதன் பின்பே ஸ்ரீஅன்னையின் உயரிய தளங்களுக்குள் நிரந்தரமாக புக முடியும்.

225. காரிருளை அவசேதனத்தை அதிசேதனமாக்கும் வல்லமையுடைய ஸ்ரீஅன்னையே அதை எல்லோரும் ஒதுக்குவர் அல்லது தப்பிப்பர். ஆனால் தாங்களோ இப்புவியில் அதிமன வெளிப்பாட்டிற்க்காக பிரபஞ்சத்தையே சேரமைத்து அதனால் அவசேதனத்தை ஒளியுறுத்தி உலகை உய்விப்பவளே! சைத்திய தாயே! நமஹ.

226. சைத்திய ஞானம் முடையவர் ஸ்ரீ அன்னையை முன்வைத்து இயங்குவதால் சாதகருக்கு புதிய யுக்தி, புது படைப்பு, தான் தொடர்புறும் பொருட்களிடம் உணர்வுடன் இருத்தல், எதையும் ஸ்ரீஅன்னையின் கட்டுக்கடங்கிடச் செய்தல், அகத்திலேயே எதை, எதை எப்படி இயக்குவது என்பதை தெய்வ சித்தப்படி செய்தல், முடிவு எதிர்பாராது, அயராது முன்னேற்றுதல். ஸ்ரீஅன்னையின் உணர்வு சக்தியுடன் சேர்ந்து ஒன்றித்து அவளை உணர்வதால், உண்மையை உணர்ந்து. உயிர், உடல், மூச்சு, சிந்தனை, செயல் எல்லாம் ஸ்ரீஅரவிந்தரின் அதிமன வெளிப்பாட்டிற்கு தன்னை தொண்டனாக்குதல் போன்றனவாம். ததாஸ்து.

227. ஸ்ரீஅன்னையின் பிரசன்னமாகிய சாதகரின் சைத்திய புருஷன் பிற சாதகருள் உள்ள சைத்திய அன்னையுடன் தொடர்புறுகிறது. பிறரின் உணர்வில் நிகழ்வதெல்லாம் தனதாகிறது, அவர்கள் சாதிப்பது, தான் சாதிப்பது போலாகிறது. அவர்கள் உண்பது ரசிப்பது, உபயோகிக்கும் பொருட்கள் கூட தானே தனக்கென செய்வதாகிறது. இந்நிலையில் தனது உண்மை சைத்தியம் எங்குள்ளது? வெளியிலிருந்து வரும் சைத்திய ஆளுமை எது? இப்படி உணர்வு, ஒளி, அன்பு, ஞானப்பகுப்பால் காண, காண, அதிஒளி ஞானம் வளர்வது திண்ணமாம்.

228. ஸ்ரீஅன்னையை உண்மையாக, முழுமையாக பூரணமாக நாடுபவர் பிற அகங்கார, அழுக்கு, இருள், ஆசை போன்ற கவர்ச்சியில் சிக்கவே சிக்காது. சீரான, நேர்மையான ஸ்ரீஅன்னைக்கு மட்டும் திறந்து வாழ்ந்து, அவருள் ஆகும் சாதகர் லட்சத்தில் ஒருவரோ! கோடியிலோ! முயலுவோம். முழு உணர்வும் அவளுடைமை ஆக. ஒவ்வொரு அணுவினுள்ளும் அவளின் பிரசன்னம் மிளிர தன்னலமற்று ஆர்வமுற்று அவளாகவே ஆகிட பக்தியுள்ள சைத்தியபிரார்த்தனையால் இறைஞ்சி இனியவளுக்கு உள்ளாகி இன்புறுவோம்.

229. ஸ்ரீஅன்னையின் உண்மையான பக்த குடும்பங்கள் உயர்ந்தவை. அவர்கள் குடும்பளவிற்கும் குறைவான வருவாய் உடையவர்கள். ஆயினும் கோடீஸ்வரனும் அடையா நெருக்கத்தால் ஸ்ரீஅன்னையிடம் ஆழ்ந்தவர்கள். வளரப்போகும் ஸ்ரீஅன்னையின் புதுபக்தர்கள் அவர்கள் மூலம் ஸ்ரீ அன்னையைப் பற்றிய வழிமுறை ஞானத்தைப் பெறலாம். ஆனால் அவர்களுக்கு பாரமாக உணவு, இருக்கை போன்ற சிக்கலை கூட்டமாக கூடி உண்டாக்காதிருத்தல், மேலும் அவர்களின் அன்றாட பணிக்கும் பாதிக்காமலும் நேரத்தை வீணடிக்கவும் கூடாது. அதே நேரத்தில் நீங்கள் அறிய விரும்புவதை கவனமாக, துரிதமாக, யாருக்கும் சிரமமின்றி, தெளிவாக, தப்பிக்காமல் ஸ்ரீஅன்னையின் உணர்வோடு வளர்தல் சாலச்சிறந்தது. ஆன்மீக எதிர்பார்ப்பு கூட ஸ்ரீஅன்னையின் தொண்டிற்காக மட்டும் என உள்ள குடும்பங்கள் உயரும். பொதுவாக ஸ்ரீஅன்னை பூமியில் தொண்டுள்ளம் தியாகம் நன்கு வளரும். சுயநலம், ஆசை அழுக்கறும். ஓ ஸ்ரீஅன்னைக்காக உள்ள ஆன்மாக்களே! ஸ்ரீஅன்னையிடம் அவளின் தொண்டிற்கு மட்டுமாகிட பிரார்த்தியுங்கள். உமது நிலை தானே உயரக்காண்பீர்கள். அறியா, மாய, பலவீன உறிஞ்சும் சுய நல இருளுக்கு இடமே அளிக்காதீர்கள். நீங்களும் அவ்வாறு ஆகாதிருங்கள். அமைதி, சாந்தி, தூய்மை நிறைவு நிலவ பிரார்த்தியுங்கள்.

230. புற உலகில் ஸ்ரீஅன்னைக்கு தொண்டாற்றும் சாதகரே! மிக மிக கவனமாக உம்முடன் தொடர்புறும் பக்தர்களுடன் செயல்படுங்கள். அவர்கள் ஸ்ரீஅன்னைக்கு மட்டுந்தானா அல்லது ஆதாயத்திற்கு மட்டுமா? உண்மைத்தொண்டனான உம்மையே சுயநல தேவைபாதிப்பால் பழி பகர்வர்.

பாங்காய் கரைத்து விடுங்கள். முழு ஆன்ம பலத்தோடு செயல்படுங்கள். ஸ்ரீஅன்னையின் தொண்டினை மேன்மேலும் செம்மைபடுத்துங்கள். செம்பொன் அதிமன சக்தி உம்முள் ஊட்ட ஸ்ரீஅரவிந்தமிரா காத்திருக்கிறார். சைத்திய ஆற்றலைப் பெருக்கி அதன் கட்டுப்பாட்டிற்குள் அனைத்தையும் ஆக்குங்கள். ஆனந்தமே, பூரணயோகமே, சைதன்யமே.

231. ஓ சாதகரே! ஸ்ரீ அன்னையின் பக்த குடும்பங்களே! உம்மூலம் வரும் நல்ல ஜீவன்களை உறிஞ்சுபவை என தவறாக கணித்து விடாதீர்கள். நன்கு யூகித்து, ஆன்ம பலத்தால் ஆய்ந்து ஆழ்ந்து அந்தராத்ம வளர்ச்சிக்குள்ளாக்கி, உதவுங்கள். உன்னதமாவீர்கள். உமக்கு இயலும் நிலையில் உதவி இயலா சுழலை தெளிவாக்குங்கள். அவர்களும் ஒத்துழைப்பார்கள். சுபமே வளர்க.

232. ஸ்ரீஅன்னையின் பக்த குடும்பங்களில் ஸ்ரீஅன்னைக்காக போல பலர் வந்து விருந்தாடி, விளையாடி, வினையாக்கி, விஷமித்து, விவேகமற்று, இசைவிற்கு, இடையூறாக்கி, இறைதன்மையை குறைவு படுத்தி குதூகளித்து, கூத்தாடிடும் கொடிய கும்பலிற்கு இடனேயளியாதீர்கள். இக்கட்டிற்கும் இடர்பாட்டிற்கும் மத்தியில் மையமான ஸ்ரீஅன்னைக்காக மட்டுமே தாங்களுள்ளீர்கள். அவர்களை விரட்டிடும் வலிமையும் தன்மையும் வேண்டும். எதார்த்தம் பதார்த்தமாக ஆகிவிடுவீர்கள். சில பக்தர்கள் பலர் நம்பி ஏமாந்தது போலாகி புலம்பாதீர்கள், திடங்கொள்ளுங்கள். திறன் பெறுங்கள். தீவிர சாதனைக்குள்ளாக்குங்கள். நீங்கள் திணறுவது அவர்கள் அனுப்பியது திருப்பிவிடுங்கள். திண்மை பெறுவீர்கள். தீமை, உம்மை உறிஞ்சாது காக்கும் தைரியம், விவேகம் வேண்டும். சைத்திய வளர்ச்சியே சிக்கலற்ற பாதுகாப்பு, உண்மையான உயர்வு. சில மாயபரிதாபம், இரக்கம், தர்மம், உண்மையை உறிஞ்சுவதாக்குகிறது. நாமே கர்த்தாவல்ல என்ற நினைப்பு போதாது. செயலாக்கமே நன்மை நல்கும். ஸ்ரீஅன்னை அன்னசாலை, தர்மசத்திரம் ஏற்படுத்தவில்லை. நாமும் அவளின் படியாவோம். தொண்டு, உயர்வுக்கேற்ப ஸ்ரீஅன்னை மீதான நம்பிக்கைக்கேற்ப, நாம் உதவலாம். உணர்வால் உயரலாம். ஆன்மீக சாதனை, வெற்றிகள், அனுபவம், பல அவர்களை பூரணப்படுத்தியதால் பெறலாம்.

233. மனத்தளவில் இப்படித்தான் என ஒருவிதியமைத்தால் வீணாகிறது. தந்திரமாக பொய்மை அதிநுட்பத்தோடு செயல்படுகிறது. ஸ்ரீஅன்னையின் சைத்திய வழிகாட்டுதலிலுள்ள சாதகர் அவ்வப்போது இன்னதென முன் விதி அமைப்பேதுமின்றி அவளின் சித்தத்தை ஈடேற்றுவர். எதுவரினும் சைத்தியமாற்றமாக்கிடுவர். தன்னிடம் வரும் ஒவ்வொன்றினுள்ளும் உணர்வோடு ஒளியுறுத்தி உருவாகும் உயர் சாதகர் ஸ்ரீஅரவிந்தரின் அதிமன உணர்வுற்று உன்னதவராவர்.

234. நல்ல சாதகருக்கு வெளியார் வருகையால் தன்னுள் உருவாகும் தனக்கு சரியான, ஆனால் அவர்களுக்கு முரனாக, எழும் எண்ணத்திற்கு மாறாக, நிகழ்சி நிகழும் போது, மனதில் சஞ்சலமுண்டாகும். அதை அர்ப்பணித்து அயறாது உம்மை தவறாக நீங்களே நினைக்கவும் உருவாகும். உருக்குலையாதீர். உண்மையில் உறுதியாகி தோல்வியிலும் ஓர் அக அனுபவ வெற்றியும் இனிய அன்னை அந்த அற்ப நிலையையும் தாண்டச்செய்து இன்னும் தகுதியை மேம்படச்செய்கிறாள். இப்படி உமக்கே புற எண்ணம் தோல்வியுற்று அக அனுபவ ஞானமூட்டும் அன்னையை எப்படி வருணிப்பது?.

235. ஒவ்வொரு சாதகரின் ஆங்கில பிறந்த (தேதி) நாளில் நிறைய ஆன்மீக முன்னேற்றத்தை ஸ்ரீஅன்னை அருளுவதால் அந்நாளில் பலபிறவியை கடக்கும் ஆற்றலும், அமைதியும், ஆர்வமும், தீவிரமும், திறவும் உண்டாக்கி உயர்விக்கிறாள். இத்தூல சரீர சாதகர்கள் பாக்கியசாலிகள் சைத்திய திறவானோர், இன்னும் அதிர்ஷ்டசாலிகளே.

236. தனது ஜீவனுள் ஸ்ரீஅன்னையை நிலையாக நிலைநிறுத்தி செயல்படும் சாதகருள் உள்ள ஒவ்வொரு அணுவும் உணர்வாகி உயர்ந்து ஸ்ரீஅன்னையின் கருவியாவது திண்ணம்.

237. தனதிருக்கையில் வலுவான உண்மைசக்தி வெளிப்பட்டாலே அதிமன வள்ர்ச்சியுண்டாம். அதற்காக. ஸ்ரீஅன்னையின் தொண்டால் திண்மையுறுவோம்.

238. ஸ்ரீஅன்னையே நாங்கள் அதிமன இருக்கைக்கு பரிணமிக்க எம்மை, எமது இருக்கையை, உணர்வின் சக்திகளை, இயற்கையின் ஆற்றலை, ஜடத்தை, வாழ்வை, உமது கருவியாக்கி ஆள்வார்களாக.

239. சூட்சுமான நம் சைத்திய உடலில் ஸ்ரீஅன்னை உள்ளுக்குள்ளேயே உணர்வோடு உணர்வாய் அகத்தினுள்ளே காட்சிக்கு காட்சியாய், உணர்வுக்குணர்வாய், எண்ணத்திற்கு எண்ணமாய், உடலுக்கு உணர்வான உடலாய், நேரிடையாக ஒருமித்து மிக உயர்ந்த இதுவரை வெளிப்படாத அதிமன அற்புத சூட்சம அரிய வாழ்வமைக்கிறார்.

240. எம் இனிய அன்னையே அக மையங்களை திறவாக்கி சூட்சம அனுபவம் அருளி விருத்தியாக்கும் புதிய உணர்வு வலிமையுண்டாக்கி, ஆன்மீக விரதத்தோடு ஜீவனுள் ஒட்டியுள்ள முரணாணதை விலக்கி, அக, அதிமன வாழ்விற்கு பரிணமிக்க சாதனை புரிய, நீரே பாதுகாப்பு, வழிகாட்டி. உண்மைவளர்ச்சிக்கு மட்டும் உதவிடும் உன்னத இறைமையே உம்மை இறைஞ்சுகிறோம்.

241. ஸ்ரீஅன்னையின் ஆன்மீக சாதனை உயர்வு தாழ்வற்றது. உயர்ந்தது, உன்னதமானது, ராஜசீக, தாமசீகம் கடந்தது. நெகிழ்வான உணர்வுகளை உண்மைக்கு உயர்த்துவது. உடலால் ஆன்ம ஞானம் ஊட்டுவது. சிந்தனைகளை பிரார்த்தனையாக்குவது. உள்ளத்தால் உழைத்து பல உணர்வு, ஒளியுள் புகுந்து தாண்டி ஸ்ரீஅன்னையின் சைத்திய ஒளியிலும், அதிமன ஒளியிலும் தன்னைத்தானே தயாரிக்க வாய்ப்பளிப்பது.

242. ஸ்ரீஅன்னைக்காக அர்ப்பணம் செய்வது ஆராய்ச்சிக்குரியதல்ல. ஆயினும் முன்பே நன்கு ஆராய்ந்து அர்ப்பணம் செய்வது ஸ்ரீஅன்னையிடமே அகத்தில் தெளிவாக வினவி பதிலில்லாவிடினும் வரும் பக்தி, நம்பிக்கையோடு அர்பணிப்பது பிற்கால உயர் தொண்டிற்கு உகந்ததாக அமையலாம்.

243. ஸ்ரீஅன்னையின் ஆன்மீகத்தில் அலட்சியப் போக்கு ஆபத்தாகிடும். பாதிப்பிருக்காது. அரவணைப்பே 'அவளின்' அன்பு. நீயே உருகி, திருந்தி, பிறவற்றையும் திருத்தி, அழுக்கறும் தொண்டில், காலம் கழியும்.

244. ஸ்ரீஅன்னையின் ஆன்மீகத்தில், பூரண யோகத்தில், ஒருங்கிணைந்த யோகத்தில், வாழ்வனைத்தையும் யோகமாக்கும் சாதனையில், வரும் சோதனை கடந்து தன் அக ஸ்ரீஅன்னையுள் மிக ஆழ்ந்து, தன்னுள்ளே ஆராய்ந்து, உணர்வால் உணர்ந்து, வாழ்வே தெய்வீகமாகிட சிறு அசைவு, விடும் மூச்சு, எழும் எண்ணங்கள், உயிர் துடிப்பு, அணுதிரளின் அதிர்வு, அனைத்தும் ஸ்ரீஅன்னையின் சைத்திய உணர்வாக்கி முக்காலங்கடந்த நித்தியத்தில் நினைவாகி நிரந்தர பிரசன்னத்தால் பரிணமித்து ஸ்ரீஅரவிதமிர்ராவின் செம்பொன்னொளியாகிய அருள் மழையில், அருவியில் அமர நீராடி நித்தியத்துவம் எய்துவோமாக! ததாஸ்து.

245. பெரும்பாலும் அவசேதனம், காரிருள் புவியை, விட்டு விட்டு தன் வளர்ச்சி, பிறப்பறுத்தல், வீடு அடைதல், யுகயுகமாக நிம்மதியாக இருத்தல் போன்ற ஆன்மீக யோகியர், ரிசிகள், சித்தர்கள், மேல் மனக் கடவுள் முக்தியை விரும்பினர். ஆனால் அவர்களுடைய முக்தி, சக்திகளோடு தப்பித்து விட்டுச் சென்றதையும், திருஉருப்பெரும் ஆன்மீகத்தை அவனிக்கு அமைத்து, அதிசேதனமுற, பொன்னொளிவீச, புவியே சைத்திய உலகாகிட அவதரித்த ஸ்ரீஅரவிந்தமிராவே கோடி கோடி வந்தனம்.

246. ஸ்ரீஅன்னையின் பக்தர்கள் ஸ்ரீஅன்னையிடம் வருவதற்கு முன்பு சொந்தம், பந்தம், உறவு, நண்பர், சமுதாயம் எல்லாவற்றினுள்ளும் அவரவர்கள் நியதிப்படி இயங்குபவர் மத்தியிலும் நம்முள்ளே ஸ்ரீஅன்னைக்காக ஆர்வமுறும் ஆன்மாவிற்கு முன்னோடியாக ஸ்ரீஅன்னையின் வழியில் வளர உதவலாம். மக்கள் தொண்டும் மகேஸ்வர (அதிமன) தொண்டாக பரிணமிக்க வாழ்வனைத்தும் யோகமாக்கலாம்.

247. ஸ்ரீஅன்னைக்காக தன்னை நிவேதித்த சாதகர் தனக்காகவோ, சமுதாயத்திற்காகவோ, உயரிய தர்மத்திற்காகவோ, நாட்டிற்கோ, இன மொழிக்கோ, காலத்திற்கோ கட்டுப்படாது. அவளின் தொண்டிற்காக, அவளுள் தான் கரைவதற்காக தன்னை மாற்ற வேண்டும். மாறாவடிவில் சூழ்நிலையால் வலிய மாற்றப்படுவர்.

248. பிரம்மன் படைக்க, ஈஸ்வரன் அழிக்க, கிருஷ்ணன் இவ்விரண்டையும் பிறப்பு இறப்பற்றுக் காக்க. கிருஷ்ணரும் ஸ்ரீஅரவிந்தரும் அதிமன

வெளிப்பாட்டிற்கு முன்பு ஒன்று என்பர். ஸ்ரீஅரவிந்தரும் ஸ்ரீஅன்னையும் ஒரே உணர்வே. ஒளியின் வண்ணமே நீலம், வெண்மை. ஸ்ரீஅன்னையே எல்லாம் என இறைவனே தன்னை முழுச்சரணடைந்த போது, ஸ்ரீஅன்னைக்கு பதில் ஸ்ரீஅரவிந்தரையோ, ஸ்ரீ கிருஷ்ணரையோ என்பது எப்படியும் ஆன்மத் தெளிவில் குறைவாம். எவரொருவர் ஸ்ரீஅன்னைமூலம் அனைத்து தெய்வ நிலைகளையும், உயர் ஜீவன்களையும், ரிஷி, யோகி, சித்தர்களையும் காண்கிறாரோ? அவரும் அவர் மூலம் வருபவர்களும் பூரணத்துவம் பெற முயலுவதாம்.

249. ஸ்ரீஅன்னையை தன்னுள் கண்டோர், ஆவிகள், பிராணசக்திகள், இரத்தத்தை உறிஞ்சும் பேய்களால், குட்டிசாத்தான், பில்லி சூனியம் போன்றவற்றால் பாதிக்க மாட்டார்கள். அவற்றை கரைத்து ஸ்ரீஅன்னையின் ஒளிர் வெண்மை ஒளியால் ஒளியுறுத்தி அவர்களையும் தமது உண்மை மூலத்திற்குள்ளாகி இறைவனுக்குள்ளாகி மீண்டும் உண்மைக்கு உதவிட செய்கிறார். அச்சம் அறவே நீங்கிட தெளிவான ஞானத்தோடு பாதுகாப்பும், முடிந்தால் ஸ்ரீஅன்னையின் மகாகாளி சக்தியே எதை எதை எப்படி சரி செய்வது என்பதை அவளே அறிவாள். நாம் அவளுள் பாதுகாப்பாய் இருந்தாலே பிற சிந்தனை வராது அகலும் அல்லலுறாது.

250. விலங்கு மனிதனை தெய்வ மனிதனாக்கும், தாயே, நீரே! எனக்கு தஞ்சம். அக உண்மையை ஸ்ரீஅன்னையின் ஆளுமைக்கு உள்ளாக்கியோர், தன்னை தானே ஆண்டவராவார். பஞ்சபூத, புறசூழல், பிரபஞ்சம் போன்ற பாதிப்பின்றி தனது உண்மையாலே உலவுவர்.

251. ஸ்ரீஅரவிந்த மிர்ராக்களின் ஆசிரமம், ஆரோவில்லில் அவர்களின் மகா சமாதியில் தியானக்கூடத்தில், மதர் ஸ்ரீஅரவிந்தர் அறையில், மாத்துரு மந்திர் அருகில் உலகின் பன்னாட்டு பிடிமண் ஸ்தூபிமுன் அக்கினிகுண்ட திறந்த வெளி தியானிக்கும் இடத்தில் புற உடலாலோ, அகத்தாலோ தியானித்து வரும் அனுபவ நிலைகளை சைத்திய புருஷனில் சேகரிக்கும் சாதகர்கள் உலகில் எங்கு எப்படி இருப்பினும் தன்னை ஸ்ரீஅன்னைக்காக நிவேதித்தவராவர். ஆன்ம வளர்ச்சி குறைவின்றி வளர்ந்த வண்ணமாகும்.

252. தனது சைத்திய இருக்கையில் சச்சிதானந்தத்தை உணரும் உண்மை ஜீவனானது ஆன்மீக உண்மைக்கு தாமதமின்றி பயணம் செய்ய ஸ்ரீஅன்னை உதவியும், பாதுகாப்புமளிக்கிறார்.

253. கூட்டுத்தியானம், சத்சங்கம், இவற்றில் ஏகமாக ஸ்ரீஅன்னையின் அம்சங்களை அடையும் அன்பர்களே, தனித்தும், தன்னுள் தானாகி தானே அன்னையாகி அவளே அவனி, அகிலம், அண்டமாகி விஸ்வரூபியாக தரிசித்து, அவளால் ஆன்மீக சக்தி பெற்று அதிமனம் அனுபூதிக்க ஆர்வகொழுந்தாகி விழைவோருக்கு விடியலே, விடுதலையே, வீடுபேறே. எல்லாமே.

254. ஸ்ரீஅன்னையின் ஆன்மீக சாதக நண்பர்களே! உடலால் உலகில் எங்கு பிரிந்திருப்பினும் உணர்வால் பிரிவதேயில்லை. ஆங்காங்கே ஸ்ரீஅன்னையின் தொண்டாற்றியவாறு ஒருவரை ஒருவர் நேசித்து, சைத்திய அன்பு தொடர்புறுகிறீர்கள். ஆயினும் இதுபோதாது. உடலை விட்டு உயிர் பிரிந்திட்டாலும் அக ஆன்மீக சைத்திய சூட்சம சரீரத்தில், அதைவிட நேசித்து சைத்திய, அதிமன அன்பு, நெருக்கம் அதிகரிக்க ஆர்வமுற்று ஸ்ரீஅன்னையிடம் பிரார்த்திப்போமாக.

255. தன்னுள் வளர்ந்து நிலை கொண்ட சைத்திய அன்னையே, மிர்ராவே புறபிரபஞ்சத்தை அகபிரபஞ்சத்தால் ஆளுபவளே, அண்டசராசர, சூட்சும, புறலோக உணர்வுகளுக்கெல்லாம் தலைவியே! உமது தாழ் பணிகிறோம். எங்கெங்கு எப்படி என பரிணமிக்க திகைத்து, திக்குமுக்காடி, தடுமாறி, அலைந்து திரியும் ஆவிகளையும், ஜீவன்களையும் அங்கங்கு நிறுத்தி அமைதிப்படுத்தி, உணர்வாக்கி, உயர்த்தும், உன்னத தாயே! உமது கால்படும் இடமாக எமது இதயங்கள் ஆகட்டும். உமது பாதமே எமது தியானம்.

256. ஸ்ரீஅரவிந்த ஆசிரம, ஆரோவில்லில் நிகழும் தரிசன நாட்களில் நிலவும் கூட்டுணர்வால், அக தூண்டுதல், ஆன்ம கண்டுபிடிப்பு, அகஉண்மைவிழி, நிறைவாகும் ஆன்மா, ஆன்ம சுதந்தரம். அதிபிரஞ்ச ஞானத் தெளிவால் உள்இயல்பை திருஉருவாக்கி அடிமனத்தை தனித்துவமாக்கிடும், சைத்தியஅன்னை ... இப்படி எண்ணத்திற்கெட்டா ஆன்ம அனுபவத்தை அந்தராத்மாவில் அருளி அன்பால் அரவணைக்கிறார். மகிமை பொருந்திய இனிய அன்னையே! உம்மை உடும்புபிடியாய் சிக்கென

பிடித்துக்கொண்டோம். எம் இதயத்துள்ளே தங்களை எப்பொழுதும் நிலைகொள்ளச் செய்வதே இனி எமக்கு தபம், யோகம், முயற்சி, சாதனை எல்லாம்.

257. ஓ ஸ்ரீஅன்னையே அதிபிரபஞ்ச கூட்டு அமைப்பை உள் இயல்பால் ஒழுங்கு படுத்துபவளே! அடிமனத்தை உயர்த்தி அதிசேதன தெய்வ உண்மையூட்டி, தனித்துவமாக்கி, உண்மை வழியை அமைத்து, மோதும் பிரபஞ்சத்தில் நெகிழ்வினை உண்டாக்கி, பரிணமிக்க அருளுபவளே! அதிபிரபஞ்ச காரிருளான அவசேதனத்தை மாற்றி, பொன்னொளி வீசச்செய்திடும், அதிமன அன்னையே! நித்திய கால அமர இருக்கையில் உம்மை இருத்தி, ஒருமுனைப்புடன் ஒன்றித்து லயித்து ஐக்கியமாகிறோம். புறமனைத்தும் என்றும் உமது கரத்திலே தஞ்சம்.

258. ஓ தெய்வ அன்னையே! எமது உடல், மன, பிராண, அகங்கார கோசத்தினுள், சைத்திய உணர்வினை ஏற்படுத்தி, காரிருளான பிரபஞ்ச அழுக்கினை அகற்றி ஸ்ரீஅன்னையின் அருளுடம்பினை அமைக்க வாய்ப்பருள தியானிக்கிறோம். எமது, முயற்சி, தபம், தொண்டு, சாதனை எல்லாம் உமது கருணைப்பார்வையின் முன்பு கரைந்திடும் அற்பமே! அனைத்தும் அர்ப்பணம். இனிய அன்னையே! உமக்கே அர்ப்பணம்.

259. எம் இனிய அன்னையே! மனித இனம், தெய்வ இனமாக பரிணமிக்க மிர்ராவாக அவதரித்தவளே! தன்ஞானம், தன்னடக்கம், அதிஜீவன், அதிஅவஜீவன், அழகு, நிர்வாணம், அன்பு, ஆனந்தம், சூட்சும உலகம், உண்மை ஜீவனை அறிதல், உண்மை அர்ப்பணித்தல், உடல், மன, பிராண, ஆன்மீக அகங்கார மாற்றல், அருவாய், தாழா தனித்துவம், சகல ஜீவதள மாயை நீக்கல், பரமனை தனதுள் கண்டு அனுபவிக்க எத்துனை, எத்துனை வழிகளில் துணை நின்று பக்த சாதகர் தொண்டர்களை காப்பவளே கனிந்து, உருகி, உம்முன் நிற்பதே, எமக்கு கதியோ, மாந்தர்விதியோ!

260. எம் இனிய அன்னையே! மக்களின் அகஉண்மையில் ஆன்ம, இறை, இயற்கை ஞானமருளி மூன்றிற்கும் ஆதாரமாக ஓர் உணர்வாயிருந்து எல்லாவற்றையும் இசைவித்து அனுபூதி அருள அவதரித்த அந்தராத்ம அன்னையே, அதிமன ஈஸ்வரியே, எம்முள் இனியேதும் தங்களுக்கு

அர்ப்பணிக்க அறியாது மறைந்திருந்தால் தாங்களே எடுத்துக்கொள்ள எமது இருக்கையை முழுமையாக உம்மிடம் ஒப்புவிக்கிறோம். ஏற்றருள்வீர்களாக! உங்கள் இரக்கம் அரக்கர்களையும் அன்பால் அரவணைத்து ஆழ்ந்து தொண்டாற்றி தெய்வத்துவம் ஆகிடச்செய்கிறதே. என்னே மகிமை! உமக்கு புகழாரம் சூடத்திறனின்றி இதயம் குமுறுகின்றதே.

261. ஸ்ரீஅன்னையை அகத்தில் நிலை நிறுத்தி தனது சைத்திய உணர்வால் எல்லைகளை, பிரபஞ்சங்களை, சூரியன்களை, பல்வேறுபட்ட ஒளிநிலைகளை கடந்து அதிமன ஒளியால் ஆளப்படும் சாதகர்களே! தங்களின் உருவம் உலகிலிருப்பினும் அருவ நிலைகள் எல்லையிட முடியுமே! என்னே! அன்னையின் அருளாசி, அன்பு, உதவி தங்களுக்கு. பிறமக்களும் தங்களைப்போல் உயர வழிநடத்தி ஸ்ரீஅன்னையிடம் இட்டுச்சென்று சேர்த்து பிறருக்காக பிரார்த்திக்க வேண்டுகிறோம். தங்களைப்போன்றோரின் தயவு தேவையன்றோ உலகிற்கு.

262. ஜடத்தில், வாழ்வில், தூயமனதில், அதிமனதில் ஆட்சி செலுத்தும் ஸ்ரீஅன்னையே! அவசேதனம, அறியாமைகளை பரிணமிக்க செய்து சுதந்திர ஜீவனுள் உண்மை, உணர்வு ஞானத்தை அருளுபவளே இதய துடிப்பினை விட அதிநுண்மையாக சைத்திய புருஷனுள் இயங்கி சைத்திய தூய்மை, மகிழ்வு, ஒளி, உணர்வு, ஞானம், அமைதி, அன்பு .... போன்றவற்றை அருளி மனித சமுதாயத்தை உய்விக்க வந்த தெய்வ அன்னையே சகலமும் தங்களன்றோ! தரணிதழைத்திட, தாங்கிட, தங்கமாகிட, தயவுகொண்ட அருளே! சுடரே! உமது சித்தமே எமது தொண்டு.

263. அயறா அகவிழிப்பே! தூங்கா தூய உணர்வே வாழ்வு, மனம், அதிமனத்தையுடைய அணுவே முன்னேறி முக்தியாகி எதாலும் வீழா ஜீவனே, உள்ளியல்பிலுள்ள சூட்சம சக்திகளே எண்ணற்ற சூரிய சக்திகளே எத்தனையோ உயர்லோக ஜீவர்களே இதுவரை அடையாத புதிய பரிணமிப்பு, புதிய படைப்பினை ஸ்ரீஅன்னை சிரிஷ்டித்துள்ள சைத்திய லோகத்தில் வெண்ணிற நிலவு போன்ற குளுமையும் அருளும் அமர அமுதமும் கதிறாய் பொழிந்து சுடர்விடும் சைத்திய சூரியனுலுள்ள தாயே உம்மூலமே படைப்பகளனைத்தும் பலனுக்கெட்டா படைப்புகளும், காணா சூட்சும

படைப்புகளும் பரிணமித்து உம்முள்ளாகி அதிமன சமுதாயமாகிட ஆர்வமுற்று அனைத்துமே அயறாது விழிப்புற்று உணர்வுற்று உயறுகிறதன்றோ! என்னே பெருமை, மகிமை, மகத்துவம், அகத்துவம், அமரத்துவம். அரிந்தவறோ அமுத அன்பில் மூழ்கிடுவர். ஆழ்ந்திடுவர், ஆனந்திப்பர்

264. தியானத்தில் அசையறு நிலை ஏற்பட்டு ஸ்ரீஅன்னையுள் ஆழ்ந்து பூரண உணர்வாக எல்லா இசைவினையும் ஏற்படுத்தும் சாதகர்கள் மோனத்தை அடைந்து ஸ்ரீ அரவிந்தரின் ஞானத்தை பெறும் யோகத்தை அடைவர். உங்கள் மூலம் உன்னத படைப்பினை உருவாக்கிடும் உண்மை உணர்வான சைத்திய அன்னையுள் ஒருமுனைப்போம். தியானிப்போம். தியாகிப்போம். தீயவையகற்றி தேன் சுவை அமுதை பருகி பாரை பரமனுக்கே உடமையாக்கிட உழைப்போம்.

265. குண்டலினி யோகத்தில் ஏழு சக்கரம், ஏழு தாமரை மேல் நோக்கி ஆர்வமுறுவது ஸ்ரீஅரவிந்தரின் அதிமன சூரிய தளங்கள் உடலில் ஏழும் கீழ்நோக்கி புவி பரிணாமத்தை தெய்வ சைத்திய அதிமனத்திற்கு உருப்பெற அருளுகிறது. அகபுற அடைவெளியில் தங்கப்பாலம் அமைத்து, இரண்டையும் இணைத்து, ஒன்றாக்கி பூரணத்துவம் செய்யும் மகா சக்தி ஸ்ரீஅன்னையின் சைத்திய இருக்கையன்றோ! இறைவனுடன் இணைத்திடும் இணைப்புப் பாலமே! இனிய அன்னையே! இதயமே! கண்ணின் கருவிழியே! நவரத்தினமே! நாளும் உம் துதியை எம் இதயத்தில் அம்மா அம்மா அம்மா அம்மா என அழைக்கிறோம். அணுகிடுவோம். அருளினை வீணாக்காது பயனுற முனைந்திடுவோம்.

266. ஆன்மீகத்தில் ஏறும் படிகள் ஏழு, ஒன்பது, பனிரண்டு எனக் கண்டனர். ஆயினும் அதுவே பதினெட்டு, இருபத்தேழு, நாற்பத்தெட்டு, நூற்றி எட்டு, ஆயிரத்தெட்டு ஆயினும் அந்நிலைக்கு உயர்ந்திருப்பினும். ஸ்ரீஅன்னையை அணுகி சரணடைந்து ஜீவனில் ஏற்று இதுவரை அடையாத புதிய யுகத்தை, பூரண யோகத்தை ஸ்ரீஅரவிந்தரன் அதிமன அனுபூதியை அடைய சூட்சம தொடர்புறுபவர் ஏராளம் என்பதை ஸ்ரீஅரவிந்தமிர்ராவிடம் இருந்த சீடர்கள் அறிவாரன்றோ. எந்நிலை என்பதின்றி பூனைகுட்டியைப் போலாகிய பக்த

கோடிகளுக்கு காளி ஸ்ரீராமகிருஷ்ணருக்கு குண்டலினியை நொடியில் காட்டி அட! இவ்வளவுதானா என்ற வியப்பினை ஆக்கவில்லையா? அகத்தில் அவளின் அருளுக்கு ஆளாவோம். அனைத்தும் தருணமறிந்து அருளுபவள் ஆயிற்றே.

267. ஸ்ரீ அன்னையின் பக்தர்களே! தடைகளை தாமதிப்படை ஸ்ரீஅன்னை உணர்வார் உடைத்தெரிந்து தெளிவோம். புற முன்னேற்றமும் காணுவோம். வாழ்வையும் வளமாக்கி ஸ்ரீஅன்னையின் தளமாக்குவோம். குறுகியதும் விரிவற்றதும் பொய்மையும் நீங்கி ஆன்மீக உன்மை ஜீவனாகி வளருவோம். வாழ்வில் உம்மை நோக்கி வருபவற்றால் கற்றுத் தேறி ஸ்ரீஅன்னையின் கருவியாவோம். உறுதியும், தீர்மானமும் தீவிரமாகி, இருளகற்றி ஒளியான இயற்கையாகி இறைவாழ்வமைப்போம். நமக்கே ஸ்ரீஅன்னை அவதரித்துள்ளாள். வாய்க்கும் சூழலை, காலத்தை, புனிதமாக்குவோம். பழுதிலா பாதையில் பார்வையை கூர்மைப் படுத்துவோம். அடையப்போகும் குறி நெருங்குவதை உணர்வோம்.

268. குறிப்பிட்ட காலக்கட்டத்தில் தோன்றி மறையும் மனித உடலிலுள்ள ஜீவனை சைத்திய உணர்வாக்கி எல்லையற்றதாக விரிவாக்கி மீண்டும் உடல், மன, பிராண ஜீவனைப் போலே பரிணமிக்க அன்பை, ஞானத்தை, சக்தியை அருளிடும் அன்பு அன்னையே உமக்கு சரணம். இறக்கும் மானிட உடல் இறவா நிலை எய்திடும் வரையில் எத்துணை பரிணமிப்பு, பாதுகாப்பு, கருணை, தூண்டுவிசை, சகிப்பு, பொறுமை, திடம், தீவிரம் அம்மம்மா என்றாலும் உம்மையே எண்ணி எண்ணி வியப்பில் ஆழ்கிறோம். உங்களின் ஓர் உருவில் எத்தனை நிலைகள், சக்திகள், ஒளிகள், ஆனந்தம், அன்பு ...... ஒவ்வொன்றிலும் பிரபஞ்சம் அளவு நிலையுடையவளே! நித்தியமானவளே! நிரந்தரமானவளே! நிலையானவளே! நிம்மதியளிப்பவளே! நிறைவினை அருளுபவளே! தீங்காயினும் நீங்காதிருப்பவளே! நேர்த்தி செய்பவளே! நேர்மையை புகட்டுபவளே! புகழாரம் சூட்டி மகிழ்கிறோம் நித்தமும் உமமையே!

269. தானே ஒரு தனி பிரபஞ்சமாகி, தன்னுள் வளர்ந்த ஸ்ரீஅன்னையில் பிற ஆன்மாக்களிலிருந்து கடவுளர், உயர்ஜீவர்கள், தனது உண்மையில்

சிருஷ்டியானவை தவிர பிற அகப்புற உணர்வின்றி தன்னுள்ளே தானாகி, அதனுள்ளே ஸ்ரீஅன்னையே அனைத்துமாகி அகில அண்டத்தையும் அசைவிக்கும் அமர அன்னையே இனி எவ்வுடலிருப்பினும், இல்லாவிடினும் பிரிவுண்டோ? சைத்திய உணர்வே, நிரந்த ஒளியே! உமக்கே நிவேதனம்.

270. அருள் என்பது எவ்வித எதிர்பார்ப்பின்றி தனது சாதனையின் வலிமையால் ஸ்ரீஅன்னையே விரும்பி அருள்வது, வலிய இழுத்து, வேண்டி பிரார்த்தித்து, நிவேதித்து, தீய ஆளுமையை வென்று அடைவது. சாதனையால் உண்மை தேவை உரிமை, தனது இருக்கை தடைகளை தகர்த்து எரிவது. இது ஸ்ரீஅன்னையின் கருவியால் உதவுவது. ஆனால் பற்று, ஆசை, வெறிகளை திருப்தி செய்யவே ஸ்ரீஅன்னையிடம் முட்டி மோதி மன்றாடி வம்பு செய்து இழுத்து ருசிப்பு நிரந்தரமானதல்ல, உசிதமானதுமல்ல. சமயத்தில் ஆசை ஆன்மை தானே சிக்கலை உருவாக்கி தவிப்பதாகும். தகாததே தன்னைத்தானே தாமதித்து தனது வளர்ச்சிக்குத் தானே தடைவிதிப்பதாம்.

271. சாதகருள் நன்கு வளர்ந்த சைத்திய புருஷன் ஸ்ரீஅன்னையின் தொண்டினை விரிவாக்கி எங்கெங்கு அவளின் மலரடிகளை ஊன்றச் செய்து அற்புத பரவசானந்தத்தை பொங்க உதவுகிறார்களோ அவர்களே அவளின் கருவியாகி, அவளின் அங்கமாக அவதரித்து, அழகு, ஆனந்தம் அமைதி படுத்தி பிறப்பின் உண்மை சித்ததிதிலே வாழ்வாங்கு வாழ்வர்.

272. சைத்திய ஒளியுடையோர் (கண்டோர்) சூட்சும வாழ்வினை வாழும் வகையறிந்தோர். ஸ்ரீஅன்னையின் வழிகாட்டுதலை பிசகின்றி பின்பற்றுவோர் ஆழ்ந்த பிடிப்புடையோர். அழியா ஆன்ம அற்புதங்களை சகஜமாக நிகழ்வதை அனுபவமாக்கியோர். சைத்திய உடலால் நித்திய காலத்தில் நிலையைனவர். தூல உணர்வினை மன உணர்வாக்கி அதிமனித உணர்விற்கு உயர்த்திடும் உறுதி படைத்தவர்.

273. பழயை விலங்கு மனித பிறப்பினை தவிர்த்திட தவம் புரிந்து ஸ்ரீஅன்னையின் சைத்திய ஆன்மீகத்தில் பிரபஞ்ச வாழ்வமைத்து தன்னையே முழுமையாக பரிணமிக்க சாதித்து அதிமனத்தால் பிரபஞ்சத்தையே ஒருங்கமைத்து ஒருங்கிணைத்து உயர்விக்கும் இனிய அன்னையே அர்ப்பணம். அர்ப்பணம்.

மலர்களனைத்தும் தங்களுக்கே அர்ப்பணம். ஆன்மத் தெளிவடையச் செய்யும் தாயினுள் தஞ்சம்.

274. அகில மக்களின் உணர்வு மூச்சு ஸ்ரீஅரவிந்தரன்றோ? புதுவை வாழ் ஜீவன்கள் ஸ்ரீஅன்னையின் உணர்வன்றோ! ஸ்ரீஅரவிந்தமிர்ராக்களின் புதிய படைப்பு, புதிய வாழ்வு, புதிய சக்தி, பரந்து விரிந்து பெரிதாகி விசாலமானது. எல்லையற்ற மோனத்தை அருளிச் சென்றவண்ணம் உள்ளது. முடிவிலா வளர்ச்சியுள்ளது. முடிவாவதும் மீண்டும் பரிணமிக்க உள்ளது. நெடியது, நொடியிலும் எண்ணற்ற யுகங்களைக் கடப்பது. அதிசேதனமாக அவனியிலே ஒன்றுவது. அதிமனிதனை உருவாக்க உழைக்கிறது. ஓம் நமோ பகவதே.

275. உள்ளியல்பு உணர்வே உண்மைக்கு உறுதியளிப்பது. தூலத்தை மீண்டும் மீண்டும் புதிப்பித்து புதிய படைப்புள்ளாக்கி ஸ்ரீஅரவிந்த அன்னையின் அதிமனித சமுதாய பரிணமிப்பை குறியாக்கி ஸ்ரீஅன்னையின் சாநித்தியத்தில் லயித்திருப்பது.

276. தனதிருக்கையே தன்னை ஸ்ரீஅன்னையினுள்ளாக்கும் மனம், உடல், பிராணன் மூன்றும் விருத்தியாவதற்கு உதவ ஸ்ரீஅன்னையின் உணர்வால் ஆளப்பட ஆர்வமுற வேண்டும். செயலாற்றல்மிகு ஜீவன் எல்லை கடந்த காலங்கடந்த நிலையில் செயல்பட்டு எல்லா தளைகளிலிருந்து விடுபட்டு சுதந்திர ஒளிப்பறவையாகி ஸ்ரீஅன்னையின் உண்மை பணியாளனாகி ஆனந்திக்கும். நிறைவுறும்.

277. ஸ்ரீஅன்னைக்காக தன்னுள்ளே வளரும் இச்சா சக்தியே நீ இயற்கையை வென்று, அக இயற்கையாகி ஸ்ரீ அன்னையின் சைத்திய சித்தப்படி செயல்புரிந்து தெய்வ அதிமன சித்தத்திற்கு சித்திக்க வல்லாயோ?

278. ஓ அழியா அமர இயற்கையே, இருக்கையே, சைத்தியமே ஸ்ரீ அன்னையை நினைவு கூறி அழைக்கிறோம். எம்முள் மூவரும் வெளிப்படுங்கள். இரவா தன்மைக்கு உள்ளாக்கி எம்மை உயர்த்துங்கள். அமர அணுவாகி அழியா நிலைக்குள்ளாகி நிலைத்திட வித்திடுவீர்களாக.

279. தன்னுள் தானாகி அதனுள் ஸ்ரீஅன்னையாவது அரிய சாதனையே! எளிதில் எப்போதோ அருளால் கிட்டலாம். அதையே அந்த அனுபவத்தையே தொடர்ந்து, அடுத்தடுத்த வளர அல்லும் பகலும் ஸ்ரீஅன்னையின் அகத் தொடர்புடன் விடாது தொடர்ந்திட அகமுயற்சி அனுபூதியான அமர ஆன்ம அபார ஆன்ம சக்தி முயற்சி நித்தமும் நிச்சயம் நிரந்தரமாகவேண்டும்.

280. ஸ்ரீஅன்னைக்காக புற உலகில் நிவேதித்தவர் நீங்காருக்க உள்ளிருந்து வரும் நேர்மன செயலை மட்டும் ஆற்றுக. என்ன பிரயோசனம் காலவிரயம்தான் என சலிப்படையத் தேவையில்லை. ஓரளவு தன்னிரைவு போதும். மனக்குறைவே பக்திக்குப் பகை. சந்தேக குகை அதனுள்ளே புகுந்து ஒளியுறுத்தி ஸ்ரீஅன்னையை நிலைநிறுத்தி நிலைகுலையாதிருக்கும் திட சித்தமாகட்டும்.

281. உடல், மன, பிராண திறனிற்கேற்ப மனிதன் பிரகாசிக்கிறான். ஆனால் அகத்தில் அந்தராத்மாவில் ஸ்ரீஅன்னையை வளர்க்கும் ஆற்றலுக்கேற்ப உண்மையான ஆன்மீகத்தில் முன்னேறுகிறான். சொல், செயல், சிந்தனை அனைத்திலும் அகச்சுடர் ஒளிரும்.

282. ஸ்ரீஅன்னையின் சைத்திய புதிய இருக்க நம்முள் பரிணமிக்க ஆழ்ந்த ஆன்மீக காரணங்கள், விளக்கங்கள், விபரங்கள், ஞானத்தெளிவு, ஒவ்வொரு செயல், மூச்சு அசைவிலும் ஆன்மீக விளக்கமுறுவோர் இயற்கை ஆன்ம சைத்திய ஒளி பெற்று உண்மை அமரத்துவத்தில் வாழ்வர் நிலைப்பர்.

283. பழய யோகத்தை ஸ்ரீஅன்னையின் வழியில் புதுப்பிக்கலாம். ஆனால் பழைய முறையால் அன்னையின் முழுமையை வெளிப்படுத்த இயலாது. ஸ்ரீஅன்னையின் பக்த சாதக தொண்டர்கள் ஸ்ரீஅன்னை வழியை நன்கு அடிப்படை பிசகாது படித்தோ, தொண்டாற்றியோ, தியானித்தோ, அறிதல், செயல்படுதல் நன்றாம்.

284. ஒரு சிறிய விதையால் எத்தனை பெரிய ஆலமரம் காலம் காலமாக விழுது விட்டு நிழல் வளம் தருகிறதோ அதுபோல் ஸ்ரீஅன்னையின் பக்தர்கள், சாதகர்கள், தொண்டர்கள் அவளின் சைத்திய புருஷனில் வாழ்ந்து சைத்திய நிழல் தந்து பிறரையும் உணர்வால் உயர்த்திட உதவி புகழ் அடைவர். புத்துலகமைக்கும் புண்ணியவான்களன்றோ.

285. ஸ்ரீஅன்னைக்கும் நமக்கும் உள்ள நெருக்கத்தால். பிற ஆளும் கீழிறங்கும் சிந்தனை செயல் வலுவற்றதாகி வாடி வறண்டு பொசுங்கி போயிடுமாம். அவைகளால் காலம், கற்பனை, சக்தி, முன்னேற்றம், ஆரோக்கியம் எல்லாம் வீணன்றோ? விவேகியே விழித்தெழுக. தெளிவுறுக, பயனுறுக. பாதாளத்தில் வீழின் எழுவது எழுபிறப்போ? யாறறிவர். ஏழுமையங்களிலும் சைத்திய அதிமன சூரியன்கள் ஒளிரட்டும். இரவு பகலற்ற தூய உயரிய கீழ்த்தளங்களறியா உயரேயும் அகன்றும், ஆழ்ந்தும் மூழ்கிடுக. நம்முள் நம்மூச்சுக்கு முடிவேயில்லை. இறைமூச்சாம். இறவா மூச்சாம்.

286. அணுவின் ஆர்வமே ஸ்ரீஅன்னையின் மூலம் அதிமனத்தை நோக்கிய இறை ஞானமே நமது உடலின் அணுத்திரள்களை ஒன்றுதிரட்டி ஒருணர்வாகி, ஒன்றி, ஒருநிலைப்பெற்று உண்மையைக்கண்டிடில் திடீரென பேரொளி வீச்சால் மனோமைய புருஷனும் திருவுறுப்பெற்று இருக்கை விரிவாகி அபரீத முன்னேற்றம் காண கனலாகி கடவுள் தன்மையில் நிலைப்போம். ஓம் ஸ்ரீமிர்ரா ஓம்.

287. சூட்சும ஆன்மீக இருக்கையாக சாதகனுள் உள்ள சைத்திய அன்னை அதிமன பரிணமிப்பிற்கு ஜீவனுள் உள்ள உண்மைக்கு அருளும், பாதுகாப்பும், ஆசீர்வாதமும், தூய்மையும் .... தந்துதவி திருப்தி அடைய ஜீவனை, முடிவிலா மாந்தனை முழுமை நிறைவுக்கும் உள்ளாக்கிறார்.

288. ஸ்ரீஅன்னையை நினைந்து நினைந்து தியானி. ஞானியாகு, ரிஷியாகு, யோகியாகு, பக்தனாகு, சக்தனாகு, சாதகனாகு அமைதியுறு, நிறைவுறு, முழுமையுறு, சக்தியுறு, யுக்தியுறு, முக்தியுறு, ஒளியுறு, ஒருமையுறு, உணர்வுறு, உய்வுறு, இசைவுறு, இனிவுறு, களிப்புறு, கனிவுறு, கனலுறு, வேள்வியுறு, ஆர்வமுறு, ஆனந்தமுறு, அன்புறு, அழகுறு, அழியாதிறு, அமருறு, அடக்கமுறு, பணிவுறு, தெளிவுறு, விரிவுறு, விவேகமுறு, வளமையுறு, பொறுமையுறு, பண்புறு, ஸ்ரீஅரவிந்ததரிசனமுறு, ஸ்ரீஅன்னையின் நிரந்த பிரசன்னமுறு. ததாஸ்து.

289. ஸ்ரீஅரவிந்த அன்னையை தன்னுள் நிரந்தரமாகக் கண்டோருக்கு தெய்வீக, சைத்திய, ஆன்மீக, அதிமன வாழ்வாம். அமரத்துவமாம்.

290. சிந்தனைக்கேற்ற செயலல்ல. செயலுக்கேற்ற சிந்தனை எழுவது ஸ்ரீஅன்னையின் உணர்வாம். வார்த்தைகளல்ல, வாய்மை வளரும் செயல்வழியாம், தொண்டு, சேவை, பணி, வேலைதனை செயல்படுத்துவோருக்கு செம்பொன்னுலகு அருளி ஸ்ரீஅரவிந்தரின் அதிமனப் பாதை அமைத்து அவனியை அரவணைத்து அதிமன உலகாக்குவாளாம்.

291. கடவுள்ளில்லையெனும் நாத்திகரும், தான் கண்ட கடவுளைத் தவிர பிற கடவுளே இல்லையெனும் தீவிர மதவாதியும், தனதே உயர்வு எனும் ராஜயோகியும், இரக்கவாதமும், அரக்க வாதமும், சொர்க்க வாழ்வினரும், நரக வேதனையுறுவரும், வறியரும், வளமையுறும் ஸ்ரீஅன்னையை நாடாமலில்லை. முன்னோ பின்னோ இனியவளை அறிந்து அடைய ஆத்மா ஆர்வமுற்று அந்த்ராத்மா உணர்வுக்குள்ளாகி, உருகிறது. ஆனந்தமுறுகிறது. அமைதியாகிறது. ஆழ்ந்து தியானிக்கிறது, திட சித்தமாகிறது.

292. உலகெங்கும் எண்ணற்ற நூல்கள் தத்துவங்கள், யோகங்கள், ஞானங்கள், தியானங்கள், யாகங்கள், பிரார்த்தனைகள், வழிப்பாடுகள், மகான்கள், கடவுளர்கள், அவதாரங்கள், விரதங்கள், வினோதங்கள், அற்புதங்கள், அதிசயங்கள், ஆன்மீகங்களிலிருந்து எதாலும் கவரப்படாமல் ஸ்ரீஅன்னையால் ஈர்த்த நெஞ்சே உனது மகிமையாதோ? மாயை அகன்றதோ? மகத்துவம் கண்டதோ? புத்துணர்வானதோ? புதுயுகம் அமைத்ததோ? பொன்னுடலாகுமோ? புகழ் பிறப்பாகுமோ? இனிய இசைவால் இன்னலற்ற முரணற்ற, தாமதமற்ற, தடங்கலற்ற, ஒருங்கிணைந்த தொண்டாற்றுமோ. இன்னும் எண்ணற்றதாகுமோ? யாரரிவர்.

293. எழுதுவதோ, சொற்பொழிவதோ ஞானத்தில் காண்பதோ செயல்படுத்துவது கடினமாகிறது. ஆனால் ஸ்ரீஅன்னையின் சித்தப்படி உள்ளதைமட்டும் மிக மிக எளிதாகிறது. நாம் அவளுக்காக அவளின் நினைவாலே ஆர்வத்தோடு முழு உணர்வோடு செயல்பட பட தடை தாமதமின்றி. தொண்டு முழுமையுடன் ஈடேறுகிறது. ஆன்ம முன்னேற்றம் அடையும் முறை அவளின் சித்தத்தை ஈடேட்றுதலேயாம்.

294. ஸ்ரீராமருக்காக தனது சுகத்தையும் தியாகித்து விழிஉணர்வோடு பதினான்கு ஆண்டு தொண்டாற்றிய ஸ்ரீ லட்சுமணனை ஸ்ரீ ராமரின் மகுடாபிஷேகம் கண்டு கழிக்கவிடாது தூக்க மூதேவி கவ்வியது. உண்மைத் தொண்டனுக்கு தொண்டின்பம் கூட சமயத்தில் கிட்டாது போனாலும் வருந்த வேண்டியதில்லை. ஸ்ரீஅன்னையின் நிரந்தர பிரசன்ன வாழ்வே சகல நிறைவு சாதனை யோக சித்தி அனுபூதியாம். தனக்குத் தானே நிகராய் நிலையான நித்திய உணர்வினை செயல்படுவதாம். செயல்படு, செம்மையுறு, செம்பொன் உணர்வாகு ஸ்ரீஅரவிந்தர் ஆளுகைக்கு ஸ்ரீஅன்னையின் வழியே உண்மையானது.

295. அகங்காரத்தொண்டு அல்லலுறுத்தும். ஸ்ரீஅன்னையின் தொண்டு அமைதி, ஆனந்தம், ஆன்முன்னேற்றமுறும். நிலைக்கும் நிரந்தர நித்தியமாகும். வழிஉறும், வளமை அருளும், புறத்தை அக ஆன்மாவாக்கும். சைத்திய இருக்கையில் அதிமன சக்தியை அருளும். ஆனந்த வாழ்வாக்கி, சைத்திய மாற்றத்தால் மாயை மாசற்ற மகோ உன்னத சிகரத்திற்குள்ளாகி, ஒளிர் வெண்ணிற ஸ்ரீஅன்னையின் அருள் வெள்ளத்தில் திகழும்.

296. ஓர் அகங்கார தொண்டினை குறை கூறி அங்கிருந்து விலகி தானும் அந்த சாயலில் மீண்டும் ஒரு அகங்காரத் தொண்டால் வாழ்பவரை விட்டு மீண்டும் ஒருவர் அதனினும் சற்று உயர்வெனபரிணமித்து தானும் ஸ்ரீஅன்னையின் சித்தப்படி வாழாதிருப்பின், சைத்தியமாற்றம், அதிமனமாற்றம் தாமதமாகாதோ? அவ்வித தொண்டே செய்யாது போனாலும் உரியவை உரிய தருணத்தில் ஈடேறும்! அகங்கார குன்றினை விலைக்கு வாங்கி அதை சீராக்கி உணர்வுப் பூக்களை வளர்க்க கால விரயமன்றோ. உண்மை உணர்வோடு இருப்பின் உரியதை செயல்படுத்த ஸ்ரீஅன்னையின் உதவி, பாதுகாப்பு, அருள்பாலிக்குமன்றோ?

297. காலங்காலமாகத் தொடர்ந்த தூய்மையான (வீட்டு குலதெய்வம்) அம்மனின் அக்னியுள் ஸ்ரீஅன்னையின் சைத்திய அக்னியை நிலைநிறுத்தி அக்குலக்கோத்திர ரிஷியின் யோகமார்க்கமும் அதிமன வாழ்விற்கு திறவாகிட பரிணமித்து அவ்வினம் முழுவதும் ஸ்ரீஅன்னையை நோக்கிடுமாம். ததாஸ்து.

298. உண்மையாகவே துர்க்கை, காளி, ஆஞ்சனேயர், ஆண்டாள், வினாயகர் ..... போன்ற சக்திகளை பூஜித்தோருக்கு ஸ்ரீஅன்னையுடம் தொடர்பு உண்டாக அவர்கள் உதவுகிறார்கள். ஸ்ரீஅன்னையின் வழிமுறைகளை நன்கு கண்டபின் மீண்டும் அவர்களுள் செல்லும்போது அங்குள்ள பக்தர்களும் ஸ்ரீஅன்னைக்குத் திறவாக நெகிழ்ந்து மகிழ்ந்து அவளின் உணர்வுக்குள்ளாகிறார்கள்.

299. ஸ்ரீ அன்னையிடம் அவளின் உணர்வாலே பல ஆண்டுகளாக சாதித்த சாதகருக்கு வெளியுலக பிற தெய்வத்தொண்டிற்கு உதவிட ஸ்ரீஅன்னையின் உணர்வோடு செல்வதால் மக்களுக்கு அற்புத ஆனந்த வாழ்வினைகாண்பித்தது போலாகிறது.

300. மீண்டும் சாதகம் ஸ்ரீஅன்னையிடம் வருங்கால் அம்மகள் பரிணமிக்க இன்னும் எத்தனை யுகங்களோ என்பது புலனாகிறது. ஆயினும் அனைத்தும் ஸ்ரீஅன்னையின் அருளால் பரிணமித்து சைத்திய உணர்வினை இப்புவியில் அடைவதாகிறதே ஒரு பெரும் தொண்டே.

301. பிரம்மச்சாரியாக சாதனை புரிந்து ஸ்ரீஅன்னையின் அருளுக்குள்ளாகிய சாதகர்கள் அதிமன சித்திக்குள்ளாக சைத்திய அன்னையே அவர்களுள் வழிநடத்துகிறாா். சிலருக்கு கிரஹஸ்த இல்லறத் துணைவியோடு சாதனை புரிய ஸ்ரீராமசீதா, ராதாகிருஷ்ணா, திருவள்ளுவர் வாசுகி போலும் ஸ்ரீராமகிருஷ்ணா சாரதாதேவி, வசிஷ்டர் போல ரிஷிபத்தினிகளோடும் தொன்று தொட்டு தொடர் ஜென்மங்களாக பரிணமித்து இவருள்ளும் ஒரே உணர்வாக உயர்ந்து ஸ்ரீஅன்னையின் அதிமன வாழ்விற்கு ஒத்த பிரம்மச்சாரிகளாகி உய்விக்கவும் உதவுகிறார் நமது இனிய அன்னை. வாழ்வனைத்தையும் யோகமாக்கி, வாழ்வைத் துறவாது, வாழ்விலேயே தெய்வீகத்தை நிலைநிறுத்தி, நிறைவினை அருளி, நித்திய வாழ்வமைத்தவறாகி ஜென்மம் ஜென்மமாக நன்றிக்கடனாளியாகி அவளின் பக்தியே சக்தியாகி முக்திக்குள்ளாகிறார்கள். ததாஸ்து. என்னே அவளின் மகிமை, கனிவு, தயவு, அன்பு.

302. ஸ்ரீஅரவிந்தரின் நேர்மையை முழு சரணத்தை பொறுமையை பூர்ண மோனத்தை அவருக்கு முன்போ, பின்போ அத்துணை துரிதமாக அடைவது

எளிதல்ல ஸ்ரீஅன்னைக்கு அவளால் அனைத்தும் அருளிட ஆண்டவனே ஸ்ரீஅரவிந்தரே பணியாற்றினார். என்றால் பாமரர்களாகிய நாம் எத்துணை காலமோ? முயற்சியோ, தவமோ, தொண்டோ ஸ்ரீஅன்னையின் அருளே வழிநடத்துவீர்களாக! தங்களின் மலர் பாதத்தில் தவழும் குழந்தைகளாகிறோம்.

303. சில சமயம் சாதகர் ஆற்றும் அக சாதனை புறத்தில் சமுதாய ஒழுங்கிற்கு ஒத்ததாகாது. அதனால் அஞ்சி பின் வாங்காது அகவழிகாட்டுதலால் உயர்வினை அடைந்திட, சுரங்கத்தில் தங்கம் எடுப்பவனுக்கு உடலில் மண், கரி, அழுக்கு படாமலிருக்குமா? சாதனைகளத்தில் தெய்வ வெற்றியே முடிவு. அசுர அச்சுருத்தலல்ல. அனைத்தும் ஸ்ரீஅன்னையிடம் அர்ப்பணிப்பதே சாதனை. உயர்வு, தாழ்வு, புகழ், இகழ், இடர்பாடு, இன்பம் கடந்திடுக.துயர், துன்பம், வேதனை, சோதனை வென்று வேரறுத்திடுக.வேலை, வேளையை, வேள்வி, வேதமாக்கிடுக! வெல்வது இறைமையே! அருள்வது அந்தராத்ம அன்னையே.

304. எவ்வித அச்சுறுத்தலோ, அசிங்கமோ, ஆன்மீகதன்மையை உருக்குலைய விடாது. வரும் இடர்களை கடந்து மேலேறி ஸ்ரீஅன்னையின் உச்சி சிகரத்தில் அமைதி பூண்ட சாதகரே உமக்கு எது உபத்திரமோ அதுவே உதவிட உணர்வால் உயர்வாய். ஒளியாவாய் அனைத்தும் ஒருங்கிணைத்து இசைவு ஆகுவோம்.

305. சீராகா உணர்வால் சினமாகிறது. ஸ்ரீஅன்னையின் நினைவால் அனைத்தும் இசைவுக்குள்ளாகிறது. மாறான எதுவுமின்றி எழும் உணர்வு ஆர்வத்தீயாகிட, ஸ்ரீஅன்னையின் அருளால் ஸ்ரீஅரவிந்த அமர உணர்வுகள், சாதகனுள் ஒளியிலிறங்கி நிலைப்பெற்று, வெளிப்பட்டு, படைப்பினை அமர சக்தியால் நிரப்புகிறது.

306. தன்னுள் எழுவது ஈடேறாவிடில் ஏமாற்றம், போராட்டம் வருகிறது. கடும் முயற்சியால் அகப்புறம் தனது ஆளுகைக்கு உள்ளாகிடும் போது உண்மை விதிக்கு ஊறுவித்தோமா? எனவினா எழுகிறது. அதையும் ஸ்ரீஅன்னையயிடம் அர்ப்பணித்து, அந்த அகப்புறத்தையும் அவளுக்கே சமர்ப்பித்து தானும் தாயிடம் தஞ்சமடைந்து வஞ்சமேதுமின்றி அமைதியுடன் அருளுணர்வால்

இயங்குதல் ஆண்டுகள் பல கடக்க ஆற்றிய ஆன்மீகம் வெளிப்படும். இறைவனின் சித்தப்படியே நிகழ்வது நிரந்தரமாம். குழப்பும் மனங்கடந்து, தானுமகன்று, ஸ்ரீஅன்னையின் ஒளிச்சுடர் ஒன்றே ஒளிர்ந்திட ஏது குறை, குற்றம். அவளின் தொண்டே இன்பமாகும்.

307. தந்தை சொல் மிக்க மந்திரமில்லை எனினும் தந்தையின் தர்மத்தை ஈடேற்றுவதால் பரசுராமன் பாபம் நீக்க கடுந்தபம் செய்து விமோசனமாகிட நித்திய ஸ்தலம் தேவையாகிறது. ஆயினும் ஸ்ரீஅன்னையின் அருளின்றி கருணையின்றி அவளின் ஆலயமின்றி தனக்குறிய தருமம் தழைப்பதில்லை இரணியன் சொல் மகன் பிரகலாதனுக்கு மந்திரமாவதில்லை ஆனால் பிறதர்மங்கள் கட்டுபாடுகளே உண்மை உயர்ந்த சுதந்திரமாகாது. தாயிற் சிறந்த கோயிலுமில்லை ஸ்ரீஅன்னையே கதி, விதி, பிற சதி. மதி மயக்கமின்றி ஸ்ரீஅன்னையின் ஆலயம் அகத்தில் அமைத்திடுக. தனது பிரபஞ்சமும் தான் விரும்பும் பிரபஞ்சமும் இணக்கமானபோது இவற்றிற்கும் அப்பாலான பிரபஞ்சமோ திடீரென எதிர்பாராது இவ்விரு பிரபஞ்சங்களின் கூட்டு பரிணமிப்பை தாமதிப்பது ஏனோ? அகவளர்ச்சியின் தீவிரமோ? அல்லது தன்னை மாற்ற விரும்பாமையா? தீய சக்தியின் தலையீடா? அமரத்துவ சக்தியிகளின் பாதுகாப்பா? ஸ்ரீஅன்னையிடம் சரணடை. நிகழ்வதை செம்மையாக்கிட முனைந்திடுக. நிச்சயம் அந்நிலைக்கூடிட இசைவுண்டாம். பரிணமிப்பின் வித்தியாசங்களே காரணம். சமத்துவ உணர்வே ஒருமையுடன் ஒருங்கிணைந்து உன்னத சைத்திய ஒளியாகிடும்.

308. அதிமன மாற்றத்திற்கு உள்ளான இருக்கைகளே ஆன்மாக்களே, சைத்திய இருக்கையே, இறைவன் ஸ்ரீஅரவிந்தரின் அகவுடலோடு பொருந்தி பரிணமிக்க பிரமச்சாரியாய் ஆன்மசக்தி அளிக்கும் அதிமன ஆற்றலைப்போல பிறசக்திகள் அளிக்கவல்லதோ? எது எது? எப்பொழுது தேவை தேவையில்லையென நம்மை வழிநடத்தும் இனிய அன்னைக்கு அன்றோ உரியது. பிற சக்திகளால் பிணக்குண்டாம்.

309. எத்தனை நோய், அறியாமை, பலவீனங்கள் ஸ்ரீஅன்னையின் அதிமன பரிணாமத்திற்கு தாமத செயலாற்றினும் சாதகன் விடாது, தளராது, மாறாது, ஒருமுனைப்பட்டு செயலாக்கம் பெற்று, வெற்றி பெற்று, முன்னேற,

முன்னேற அசுர சக்திகள் வலுவிழந்து கரைந்து காணாததாகிறது. எல்லாம் அவளின் அருளின்படி நடப்பதாலோ, குழப்பம், களக்கம், சச்சரவு நீங்கி அமைதி, மகிழ்வு இசைவுண்டாகிறதாம்.

310. பிரபஞ்சங்களனைத்தும், அதிபிரபஞ்சமும் தனி ஒரு ஜீவனும் தன்னைஅறிந்தோ, அறியாமலோ ஸ்ரீஅன்னைக்கு அர்ப்பணித்து அருளினை கிரகித்து பரிணமித்து அவளின் அதிமன பரிணாம வளர்ச்சிக்கு அடிமனம், உள்ளியல்பு, அவதேனம், அனைத்தும் உண்மைக்கு நிலைப்பதால் அதிசேதனத்தை அடைகிறது. ஸ்ரீஅன்னையின் மீதான பக்தியும், ஆர்வமும், தொண்டுமே, அமர உண்மைக்கு உயர உதவுபவையாம்.

311. தனிமனித இருக்கை இருளகன்று இனிய அன்னையின் தூயசைத்திய பிரசன்னத்தைக் கண்டதால் நிகழும் வழிகாட்டுதலில் ஈடேறா தாமதமான தொண்டும் துரிதமடைந்து, அமைதியுற்று, ஆன்மீக முன்னேற்றம் கண்டு எதிர்பாறா அளவு தெளிவோடும், ஞானத்தோடும் ஈடேறுகிறதாம்.

312. வறண்ட உணர்வின்மை நேரத்தில் மேலிருந்து அகத்தேயும், இறக்கம் ஏதுமின்றி, புறத்தே கீழிருந்து ஆர்வம் ஏற்படாத நேரத்தில் ஸ்ரீஅன்னையின் நாமத்தை உச்சரித்தல், தியானித்தல் ஸ்ரீஅரவிந்த அன்னையின் நூல்களை படித்தல், சத்சங்கம், நிகழ்த்துதல் ....போன்ற ஈடுபாட்டில் மீண்டும் ஸ்ரீஅன்னையின் உணர்வு விலகாது காக்கப்படுகிறதாம். இடைவிடா இறைஉணர்வினை இசைவுபடுத்த இனியவளை பிரார்த்திப்போமாக.

313. சத்திய நிலைதனை நேரிடையாக ஏற்கா பிரபஞ்ச சக்திகள் எங்கே தான் சிதைவுக்குள்ளாகிடுவோமென்றஞ்சி வளரும், விரிவாகும், புவியில் பரவும், ஊடுருவும், வியாபிக்கும் ஆதிக்கம் கொள்ளும் ஸ்ரீஅன்னையின் சக்திக்கு சரணடையா சச்சரவான நிலைதனை காக்க விழைகிறது. ஆனால் அவர்களுள்ளேயே ஸ்ரீஅன்னையின் சக்தியை மட்டும் வெளிப்படுத்தும் ஒரு உணர்வு அசுர சக்தியால் அறியப்படாமல் ஸ்ரீஅன்னைக்கு தொண்டாற்றி தனது வாழ்வினை வளம் பொருந்த ஆன்மீகத்தில் வளருகிறது.

314. ஸ்ரீஅன்னையின் ஆன்மீக சாதகர் காணும் அகப்பார்வை பிற ஆன்மீகத்திற்கு வியப்பினை ஏற்படுத்துகிறது. காரணம் பழைய யோக வரட்சியற்ற புதிய வசீகர. இசைவான மகிழ்ச்சி, ஆனந்தம், அவளுக்கு சரணடைவதிலேயே

கிட்டுகிறது. பெரும் முயற்சி கடுந்தவம் கடந்து எளிய முறையிலேயே வலிய சாதனை பிறக்கிறது.எல்லாம் ஸ்ரீஅன்னையே. மகிமையே!

315. ஸ்ரீஅன்னையின் பக்தர்கள் , சாதகர்கள், தொண்டர்கள் யாவரும் அவளின் உயர் ஞானத்தை பெற்று உயர் இருக்கையாகும் வழிதனை தாமே காணும் திறனை அவளே அருளுகிறாள். ஸ்ரீஅன்னையின் பிரசன்னத்தை நிரந்தரமாக்குவது, நித்திய நிவேதனம் நீங்கா நிவாரணி, தூங்கா விழிப்பு, ஏங்கா ஏற்பு, வீழா விவேகம், கரையா காலம் குறையா பக்தி, நிறைவான சக்தியாம்.

316. தன்னை தான் காண ஸ்ரீஅன்னையை நாடினால் தன்னை தரணியை ஆளுதல் எளிது.தங்க உலகான ஸ்ரீஅரவிந்தரின் அதிமன உலகமைக்க உதவிடும் உபகரணமாகி உயர்ந்து உன்னத மாகிறார்.

317. தன்னை அறிதல் தரணியரியதலாயினும், ஆன்மாவைக் கண்ட பின் பரிணமிப்பு இல்லாவிடினும் அந்த தனி ஆன்மாவே தனது உண்மையில் சைத்திய, அதிமன உண்மையை வெளிப்படுத்த பரிணமிக்க, விழிப்புற, விரைவாக, பிரபஞ்சங்கடந்து, எல்லா இயற்கை விதிகடந்து சுதந்திர சைத்தியமாகி தனது, உடல். மன, பிராணனுள் சைத்திய ஆதிக்கம் செய்திட ஸ்ரீஅன்னையை தனதுண்மையால் நிரந்தரமாக்கிய சாதகர் செயல்படுவது உண்மையின் வெளிப்பாடேயாம்.

318. மோனத்தை இருக்கையின் இருத்திட ஸ்ரீஅரவிந்தரை நாடிடுக. ஸ்ரீஅன்னையே ஸ்ரீஅரவிந்தரின் மோன உணர்வை ஊட்டுகிறார். பிற மோனங்கள் பூரணமாகா. இம்மோனத்தால் அசையறு நிலை இயற்கையின் கட்டுப்பாடு, உருமாற்றம், எதாலும் பாதிக்கா நிலை, ஆன்மீக தனித்துவம், உண்மையின் வடிவமைப்பு, தெய்வீக சக்தி, ஒளி, சூழல், அதிமன உணர்வு, சக்தி, செயல்....போன்ற எல்லாம் ஸ்ரீஅன்னை நிகழ்த்தி சாதகனை உயர்விக்கிறார். மோனமே செயல்பாடோ *'No words acts'*

319. அக ஆன்ம, சூட்சும உள்ளியல்பு, உள் இயற்கை, பரிணமிப்பு, ஸ்ரீஅன்னையை தனது சைத்திய புருஷனுள் நிரந்தரமாக்கி தொழும் தொண்டருக்கு, சாகாத தன்மையான இருக்கையாளருக்கு இனியவளின் பிரசன்னம் உண்மை ஜீவனை, அதிசூட்சும, ஆன்மீக, தூயஉண்மை உணர்வினை சாதகரின்

உடல்,மன, பிராணனில் ஊட்டி அதிமுன்னேற்ற வழிகாட்டுதலளித்து அகநுகர்வு, தூண்டல், தெய்வீக ஒழுங்கமைத்து, சகலத்தையும் பகுத்துணர்வாக்கி சைத்திய வாழ்வில் முழுபரிணமிப்பு, பாதுகாப்பளிக்கிறார்.

320. அதி பிரபஞ்ச சக்தியானது பழைய யோகத்திலும் புதிய லோகத்திலும் பிராண, காம, மோக,வசீகர உணர்வினை தூய பிரம்மச்சரிய உண்மை பக்தர்களிடம் பாய்ச்சுவது. அதனால் எப்படி பாதிக்கிறார்கள் என்பது அவர்களுக்கு ஞானத்தாலும் தபத்தாலும் கண்டறியாது. தடுமாறுகிறார்கள். ஆனால் ஸ்ரீஅன்னையின் உருவினை தனது சைத்திய இருக்கைக்குள் கண்ட பிரம்மச்சரிகளுக்கு உண்மையிலேயே அவ்வனுபவம் தேவையெனில் ஈடேறும், தேவைப்படாவிடில் விலக்கி அதிமன சக்திக்கு உயர்த்தி தனது கருவியாக்கி அருள்வாள், சாதகன் மிக நேர்மையாக செயல்பட வேண்டும். பிரம்மச்சரியம் தேவையென்று முடிவெடுத்து பிராணனை வற்றடித்தாலும் உணர்வில் முழுக்குறைவாம். நிகழ்வதை அர்ப்பணி ஸ்ரீஅன்னைக்கு சரணடை. கிரகஸ்தர் விடுபட்டு உணர்வாகலாம், பிரம்மச்சாரி தெளிவடைந்து உலக உணர்வினை உயர்த்தலாம். சைத்திய ஞானம். சக்தி, உணர்வு, இச்சா சக்தி, இசைவு, அன்பு. இவைகள் எல்லாம் நிரம்பிய பூர்த்தியாகி நிரந்தரமாக்கிய சாதகரின் முடிவு இறைவனின் சித்தப்படி அமையலாம். எவ்விதத்திலும் எதிலும் தவறிடக்கூடாது. காலம், உயிர், மனம், அடிமனம், உள் இயல்பு அனைத்துமே உருப்பெற வேண்டும்.

321. இறைவனுக்கு ஸ்ரீஅரவிந்தருக்கு இனிய அன்னைக்கு மக்களுக்காக நல்லதை, உயர்வை, உணர்வை, சைத்திய, அதிமன பரிணமிப்பை அருள முடியும். பிறஜீவிகள், தீய, அருள். அசுர, பிராண சக்திகளே இன்னலை தருபவை.ஆகவே வலிய ஸ்ரீஅன்னையின் சக்தியை ஏற்கலாம். ஆனால் தீய வலிய சக்திகளை விலக்கிட .ஸ்ரீஅன்னையை நாடி நலனடைக, வீணே துன்பத்தை நாடாது. காலத்தை ஸ்ரீஅன்னையுடையதாக்குக.

322. ஆசையை விலக்கி, தேவையை பூர்த்தி செய்து, பகுத்தறிந்து நிவேதிக்க, ஸ்ரீஅன்னையின் பிரசன்னமே உகந்தது, உயர்ந்தது. தவிர்த்து, தடுமாறி, கால விரயம் செய்து அரிய மானிட வாய்ப்பை இழக்கா ஞானமே மிக

உயர்ந்தது. பிரணவம் பிரஹஸ்பதி முன்னிற்கும் வினாயகனே மானிட உடலாம். ஸ்ரீஅன்னையின் சைத்திய சக்தியால் வளர்ந்திடுவோம். அதிமன சித்தியாகிவிடுவோம். மானிட நிலை மாறி அதிமனிதனாக்கிடுவோம். ஸ்ரீஅன்னையே உபாயம், சகாயம், சார்ந்திடுவோம், சரியாகிடுவோம், சீர்பெறுவோம், சிறப்புறுவோம்.

323. ஸ்ரீஅன்னையின் அருள் சக்தி சாதகருள் வேலை செய்யும் போது புற உலகு உயர் உணர்வுற பிரபஞ்ச சக்தி செயல் படும் போது அதற்கு ஸ்ரீஅன்னையின் மகிழ்வினை அடைய உதவுகிறது. வெற்றி கண்ட சைத்திய ஆனந்தத்திற்கு எதிரான பிரபஞ்சம் திணறி தோல்வி கண்டு களங்கம் கற்பிக்க முயன்றும் முடிவு, கீழாகிறது. மீண்டும் தன்னை ஸ்ரீஅன்னையின் சக்திக்கு ஒத்துழைக்க அதுவும் பரிணமிக்கலாம். ஆயினும் சாதகன் ஆன்மீக நோக்கிலே செயல்புரிவது நலம். இறக்கம், பரிதாபம், ஸ்ரீஅன்னையின் வழியை ஏய்க்க வாய்ப்பு, தெளிவு, திறன், ஞானம், தூர திருஷ்டி மிகு சாதகர் எதற்கும் சலிப்பதில்லை. தெய்வீக வெற்றியே காண்கிறார். ஏமாறும், ஏமாற்றும், பக்திமாயை அற, மெய்ஞானமே ஒளிர்க!

324. உலகிற்கு சமுதாய, மத, மனித, இன ஒழுங்கிற்கு கட்டுப்பாட்டிற்கும் மீறிய ஆன்மீக புதிய சித்தியை புவிக்கு கொணர தூண்டப்படும் சாதகருக்கு பழி, பாவம், அச்சுறுத்தல் அசிங்கம் ஏற்படினும ஸ்ரீஅன்னையின் சைத்திய தூண்டலில் அனைத்தையும் உருமாற்றி ஒடுங்காது, ஒதுங்காது, ஒருங்கிணைந்து, இசைவித்து இனிதே அக சாதனையால் புறத்தில் வெற்றி கண்டிட சக்தியற்றதாய், காலமின்மையாய், களக்கமாயிருப்பினும் கனலாகிடுக, இறைப்பணி ஆற்றிடுக. அப்போதே அனைத்துலகமும் ஆன்மீக முன்னேற்றம் கண்டு சைத்திய உலகிற்கு உள்ளாகி கூசாது, பின்வாங்காது அதிமன உலகாகிட உய்வுறும்.

325. ஒவ்வொரு பிரபஞ்ச ஒருமையினுள்ளும் .அன்னையின் உணர்வினை வெளிப்படுத்த நிலை நிறுத்த பாடுபட்டு தொண்டாற்றிய சாதகனுக்கு சைத்திய ஸ்ரீஅன்னையே அதிமனித பரிணாமத்திற்கு முன்னேற வழிநடத்துகிறாள். அச்சம் அகன்று ஆன்மீக சக்தியாகி பிரபஞ்சத்தில் அதிமன வெளிப்பாட்டிற்குரிய சாதகரை தயாரிக்கிறாள். சாதகரும் அவளின்

அருளுக்குள்ளாகி ஆன்ம வளர்ச்சியால் அவனியை சைத்திய மயமாகிட தொண்டாற்றி தொய்விலா ஆரா ஆனந்தம் தேனமுதாய் உண்டுகளிக்கிறார்.

326. ஸ்ரீஅன்னையின் சைத்திய இசைவிலா எவ்வித இயக்கமும் இறுதியில் இன்னலை தழுவும். இடறினை ஏற்படுத்தும். முழு மாந்தா ஸ்ரீஅன்னையின் சாதகனாகி அவளின் பிரசன்னமாகிடும் இவ்வுடல் ஜீவனை, உருமாற்றி உய்வுண்டாக்கிடுவோம். உலகே உலகன்னையாகிய சைத்திய உணர்வினுள் ஒன்று விடாது உருமாறிட ஒன்று திரண்டு ஓர் ஒளியுள்ளாகிடுவோம். உயர் உன்னதத்தில் ஸ்ரீஅரவிந்த அதிமனிதத்துவத்தை அடைந்திடுவோம்.

327. ஸ்ரீஅன்னையிடமிருந்து அருளை அனுபவிக்கும் பிரகிருதியே ஜீவ சக்தியே நன்றியுணர்வுடன் முழுச்சரணடைந்து ஐக்கியமாகிடுக. வீணே அகங்கார அற்ப வாழ்வில் சிக்குண்டு சிதறாதே. பதறி பரிதவிக்காதே. பவித்தரமான பாதுகாப்பான பலமான அதிமன இனைப்பு பாலமாகிய ஸ்ரீஅன்னையே எல்லாம் என்றாகிடுக. மீண்டும் மீண்டும் வீழ்ந்து, கீழாகி எழாமல் ஒரே ஸ்திர முடிவாகிடுக. முனைந்து முன்னேறிடுக. முடிவு அவளே என்றாகிடுக. முணறாது முழுசாந்தியாகிடுக.

328. இறைவன் ஆட்கொள்ள சாதனை புரிவதை விட இறைவனை ஆட்கொள்வது அரிய சாதனை. ஸ்ரீஅரவிந்தர் இறைவனை சிருஷ்டிப்பதும் இறைவனின் இராஜ்யத்தை விரிவு படுத்துவதும் நிகருக்கு நிகர் ஸ்ரீஅன்னையே. அந்நிலைக்கு உயர்த்துபவள். ஓ அவனியே அவளுக்கு முழுசரணடைவதால் நிகழும் உயர்வினை பார்.

329. அதுவாக நடப்பது அரிதாம். அக வளர்ச்சி ஸ்ரீஅன்னை வழியில் பயில, பயில புறத்தில் தானே நிகழ்வதாகும். ஸ்ரீஅன்னையை நினைப்பது அவளுக்கே சகலத்தையும் அர்ப்பணிப்பது முழுமையானால் எது, எது எப்படி, எப்போது எங்கு நடக்க வேண்டுமோ? அது, அது அப்படி ஆங்காங்கே நடக்குமாம்.

330. கணப்பொழுதேயாயினும் ஸ்ரீஅன்னையை நேரிலோ, காட்சியிலோ, உணர்விலோ, தொண்டிலோ, தியானத்திலோ,எதிர்பாறாமலோ கண்டோடருக்கு சைத்திய திறவாகி யோக வளர்ச்சியுண்டாம்.

331. பொன்னொளி பிழம்பாயினும் அதிமனமே ஆயினும் ஸ்ரீஅன்னையின் சைத்தியத்தின் வாயிலாகத்தான் அதிக ஆற்றலோடும், சைத்திய ஒழுங்காயும் சீறாகி அனைத்திற்கும் ஆசானாகிறது. ஸ்ரீஅரவிந்தரே காண உலகிற்கும் எல்லா அண்ட வெளிக்கும், சுத்த சிவத்திற்கும் அப்பாலுக்கும், அப்பாலுள்ளதற்கும் அப்பாலாயிருந்து வழி நடத்தி ஸ்ரீஅன்னை மூலம் ஆன்மீக பரிணாமத்தை சீராக்குகிறார்.

332. பிரகிருதியானது அடிமனமானதால் அதன் சக்திகளெல்லாம் சைத்திய அன்னைக்காக ஆர்வமுற்றாலும் தானே ஸ்ரீஅன்னையின்றி ஒழுங்குற சீராக பரிணமிக்க வகையின்றி தவிக்கிறது, அச்சம். அறியாமை, கூசுதல் இவற்றால் தொய்வுறுகிறது. ஆனால் சைத்திய புருஷன் வழிகாட்டுதலால் இசைவுடன் இன்னலின்றி இறுதிலக்கை அடைந்து இறைவெற்றிக்குள்ளாகிறது.

333. ஞானியகரைக்காணும் அதிர்ஷ்டசாலிகள் மிகச்சிலரே, அவரின் புற தோற்றத்தாலோ, கூட்டத்தாலோ, வசதியாலோ, உடல்பொலிவாலோ, கண் ஒளியாலோ, கூட கண்டிட முடியாது. எந்த சாதகர் ஸ்ரீஅன்னைக்காக மட்டும் தன்னலமற்றுள்ளாரோ அவருக்கு மட்டும் வெளிப்படுவர். ஸ்ரீஅன்னை தமது குழந்தையாக அவ்விருபாலரையும் அரவணைத்து அருள்வார். தெளிந்திடுக, விண்டிடுக, கண்டிடுக, சைத்திய அருளாகிடுக.

334. ஸ்ரீஅரவிந்தரை ஸ்ரீஅன்னையே உண்மை கடவுளாக கண்டார். உலகினை உயர்விக்க உபாயம் கொண்டார். இறைவனின் இன்னுலக பொன்னுலகை அதிஉலகை அவனியில் லெளிப்படுத்த ஸ்ரீஅரவிந்த ஆசிரமம், ஆரோவில்லினை ஆன்மத்தளமாக அமைத்து அவனிக்கு வழிகாட்டுகிறார். அகங்காரம் அறியாமை பலவீன, உலகெலாம் உன்னதமாக உருப்பெறுகின்றன. என்னே! ஸ்ரீஅன்னையின் மகிமை.

335. சைத்திய திறவிலா ஜீவனாகினும் மனோமய புருஷன் வளர்ச்சியடைய தனது அறிவினை, தெளிவினை கூர்மைப்படுத்தி ஒருமுனைப்போடு செய்யும் செயல் ஸ்ரீஅன்னையின் சைத்திய ஒளிக்கு, அருளுக்கு பாத்தியமாகிறது. எங்கோ ஒரு மூலையில் கிடந்தாலும் தன்னளவு பரிணமிக்கிறாள், பிறருக்கு நல்லதை மட்டும் செய்கிறார். சைத்திய அன்பிற்கு பாத்திரமாகிறார்.

பக்தரல்லாவிடினும் தீயலாகரிவஸ்துவிற்கு அடிமையாயினும் உயர் உண்மை அவரிடம் வெளிப்படுவதை மட்டுமே நோக்குக.

336. ஒருமுனைப்பிற்கு உலகிலேயே உயர்ந்த, உகந்த ஒரே இடம் ஆரோவில்லின் மாத்துரு மந்திர்.அங்குள்ள உருண்டை வடிவ ஸ்படிகத்தில் (crystal) ஸ்ரீஅன்னையின் எண்ணிலா உருவினை கண்ட ஞானிக்கு அதிமன உலகு நிச்சயமாம். தனதுண்மையைக்கண்ட ஒருமுனைப்பு சாதகர் உண்மையிலேயே ஒரு அதிர்ஷ்டசாலியாம். அருளுக்கும் அருளான அதிமன அருளாம்.

337. தன்னுள் தெய்வ அன்னையின் அன்பும், அருளும், ஆனந்தமும், ஒளியும் ததும்பிட சாதனை புரிந்த ஸ்ரீஅன்னையின் குழந்தைக்கு எங்கு எப்படி நோக்கினும் அன்பாம், ஆனந்தமாம். ஸ்ரீ அன்னையின் குழந்தையாய் பலவித மலரின் மணத்தில் மத்தியில் சச்சிதானத்தில் திளைத்திருப்பர். புண்ணியாத்மாவாம். பூரணத்துவமாம். ஸ்ரீஅரவிந்தமிரா வழி யோகியாம்.

338. ஸ்ரீஅன்னையின் இயக்கத்திற்கு தொண்டாற்றிடும் பொறுப்பாளர் ஒவ்வொரு அசைவினையும் ஸ்ரீஅன்னையின் வழிகாட்டுதலோடு அருளோடு ஆற்றுகிறார். நேர்மை என்பது ஸ்ரீஅன்னைக்கு மட்டுமே தெரியும். மக்களுக்கு பிறருக்கு மைய உண்மை தொண்டினை கண்டறியும், ஞானமின்றி களங்கம் கற்பிப்பர். கடுகேனும் களங்காது காரிய சித்தியில் கடுவேகம் கொண்டு இறைவனின் வெற்றிச்சக்தியை சூடுவர்.

339. அகத்தில் சூட்டும சரீரத்தில் முக்தியான பழைய ரிசிகளும், இப்புவியில் ஆயிரமாயிரம் ஆண்டுகள் அருவத்தில் இருப்பினும் மனித உடலினுள் ஸ்ரீஅன்னைக்காக அகவளர்ச்சியுற்ற ஜீவனுள் புகுந்து தானும் புற இயற்கையும் உணர்வாகிட ஸ்ரீஅன்னை தன் சாதகன் மூலம் அருளுகிறார். என்துணை மகத்துவம் வாய்ந்த நம் சைத்திய அன்னை. சண நேர தூல உடலில் அவதரித்து முக்காலத்திற்கும், நித்திய காலத்திற்கும் தனது அருளால் ஆசீர்வதிக்கிறார். அவளின் மலர்பாத தொழுகையே பூரண தியானமன்றோ. நம் நன்றியுணர்வு தொண்டு எத்துணை பெரிதாகினும் கடுகினும் சிறிதே. பணிவே மிகத்துணிவே, கனிவே இசைவின் பொலிவே.

340. பரிணாமத்தை துரிதப்படுத்த ஸ்ரீஅன்னையின் பக்தனால் முடியும். மிக எளிதில் பல உணர்வு தளங்களுக்கு உயர்ந்து உன்னதஇருக்கையில் அமர்ந்து ஸ்ரீஅன்னையின் சைத்தியத்தில் தனது உண்மை வளர்ந்து ஸ்ரீஅரவிந்தரின் அதிமன பார்வையில் உலகில் பரிணமிக்கும் திறனோடு சகலத்தையும் சரணடைய செய்து உலகினையும் உயர்விப்பர். ஓம் ஸ்ரீஅரவிந்தமிராய நமஹ.

341. அதிமன இருக்கை ஒன்றே. ஆனால் பரிணமிக்கும் ஆன்ம இருக்கைகள் பல. ஸ்ரீஅன்னையின் சைத்திய இருக்கையில் வாழும் உயர் உணர்வானது பலவித உண்மையை, உணர்வை, ஜீவனை ஒருங்கிணைக்கும், உருமாற்றும் ஸ்ரீஅன்னையின் சாதகனாகிறது. உணர்விலா ஜீவன்களும் சாதகனால் ஸ்ரீஅன்னைக்குள்ளாகி பரிணமிக்கிறது.

342. தனது மைய மூல இருக்கையில் ஸ்ரீஅன்னையின் உணர்வோடு இருக்கும் சாதகன் முக்கால, ஏககால திருஷ்டியாம். தனதுள் சைத்திய ஒளி பிசகின்றி வழிநடத்துகிறதாம். தனதுடலனுவும் திருஉருப்பெற பரிணமிக்கிறதாம். உணர்வற்றவையனைத்தும் பெற்று ஜடமாம். சூன்யமாம். சுடராவது சூதற்ற சுத்த ஸ்ரீஅன்னை தொண்டாம்.

343. தனது ஆர்வத்தை பொறுத்து ஸ்ரீஅன்னையவள் சாதகரின் உண்மையை உணர்விக்கிறார். ஓ சாதகரே! சலியாது, சாதித்து இருளகற்றி ஒளியிலே ஒளிரும் ஞானமுற, அஞ்ஞானம்அற ஸ்ரீஅன்னையே தஞ்சமாம்.

344. தூய ஜீவன் வெண்ணிற அன்னமாகிறது. அது உண்மைக்காக ஸ்ரீஅன்னைக்காக தொண்டாற்றியது . நிறைய நிலங்கள், பணத்தை, தொழிற்கூடங்களை, அண்ணசாலையை தங்குமிடத்தை, சாதகரை ஸ்ரீஅன்னையின் அரண்களாக சேகரித்தது. அஜ்ஜீவன் தூய உடலை விட்டு நீங்கும் வரை தொண்டே குறியானது. உடல் இறப்பு கூட சாந்தமாக, சமாதி நிலையாக அமைதியாக உறங்குவது போல ஒளிர்கிறது. ஆயினும் அவரின் சூட்சும ஜீவன் மீண்டும் ஆசிரம பணியாளருக்கு தூய தொண்டாற்ற தூண்டுவிசையாக சூட்சும வழிகாட்டுகிறது. புகழ் இகழுக்கு பாதிக்கா தொண்டுள்ளம் புனித தொண்டால் இறைமையானது. அமைதியாக ஆற்றிய

புற தொண்டு அகத்திலுள்ள ஸ்ரீஅன்னையால் மட்டுமே அளவிட முடியும். அளவிலா தொண்டரின் பாதம் ஸ்ரீஅன்னையின் அருளன்றோ.

345. ஸ்ரீஅன்னையின் அதிமன அநுபூதி அடையாதவரை எத்துணை யோக சித்தி முக்தியடைந்தாலும் பூரணத்துவமாகா. புவியை விடுத்து பிறப்பறுத்து சச்சிதானந்துவத்தை அடைந்தாலும் மீண்டும் புவியில் ஸ்ரீஅன்னையின் சாதகருள் புகுந்து சைத்தியத்துவத்தை கண்டு அதனுள்லயித்து வளர்ந்து தான் முன் தப்பித்த உலகிற்கு தொண்டாற்றி உயரிய அதிமனம் சிந்திக்க சாதனை புரிந்தாக வேண்டும்.

346. சைத்திய அன்னையை அகத்தே கண்ட சாதகர் எதாலும் பாதிக்கா ஆன்மீக மாற்றமடைகிறார். சைத்திய மாற்றமாகிய இருக்கையுள் உயர் ஒளி, ஞானம், வலிமை, சக்தி, ஆசி, தூய்மை, நிறைவாகி பிற அடிமனம், உள்ளியல்பு, உடல், மனம், பிராணன், அவசேதனம், ஆர்வமுற்று உருமாறி அதிமனத்திற்குள்ளாகிறது. அதற்கேற்ப அதிமன உணர்வானது சாதகரின் இருக்கை, இயற்கை முழுதும் இறங்கி முழுமையான பூரணயோக சித்திக்குள்ளாகிறது. ஸ்ரீஅன்னையின் பிரசன்னமே நிரந்தர நித்திய ஜீவனாக ஜொலிக்கிறதாம்.

347. இதய ஜீவனுள் நிலைபெற இறங்கிய பொன்னொளியானது ஸ்ரீஅன்னையாக மாறி மீண்டும் மேல் நோக்கி எழும் ஒளி பிழம்பாக ஜொலிக்கும் போது சாதகன் அதை தன்னுள் தாங்கிடும் ஆற்றலும், அமைதியும் தியான உடலை அசையறு நிலையாக காக்கிறதாம்.

348. நட்சத்திரக் கூட்டமளவு அனுபவமும், காட்சிகளும் இருப்பினும் வரினும் அவைகளால் ஸ்ரீஅன்னைக்காக மட்டும் ஆற்றிய தொண்டே பிரதானம். அகங்காரமுள்ளவை ஆன்மவளர்ச்சிக்குதவாது. வீழ்ச்சியை தழுவும். உண்மை தொண்டே அருளுக்கு பாத்திரமாம்.

349. உணர்வுள்ள பொய்மைக்கெதிரான அதிதுரித உருமாற்றம் செய்யும் சைத்திய அன்னையவள் கோடானுகோடி யுகங்களில் ஆகாததை சைத்திய உணர்வில் இரண்டரை கடிகை நேரத்தில், காலத்தால் ஆகாததையும் ஆக்குவிக்கும் ஸ்ரீஅன்னைக்கு முழுச்சரணடைவோமாக! போற்றி புகழ்வோமாக!

350. பிற தெய்வங்கள் மேல்மன கடவுளர்கள் சக்திகள் உள்ளன. ஆயினும் ஸ்ரீஅரவிந்த யோகத்தில் ஸ்ரீஅன்னையின் மூலமே சைத்திய திறவு, அதிமன வெளிப்பாடு நிகழ்கிறது. ஆகவே இதை அடைபவர்களுக்கு முந்தயதில் சம்பந்தமே இல்லை. ஆயினும் இவ்வுடல் பிறவற்றிலிருந்து வந்தவையாதலால் சைத்திய மாற்றமடையாதவை சில அனுபவத்திற்கும் அங்கும் சைத்திய திறவுள்ளோர்கள் வளர்வதற்கும் சிலருக்கு தொண்டு தொந்தம் இருக்கலாம்.

351. ஸ்ரீஅன்னையின் யோகம் எவ்வளவுதான் கற்றுத்தெளிந்து தொண்டாற்றியிருந்தாலும் இந்த ஷண நேரத்தில் உணர்வு விழிப்பாய், அவளின் பிரசன்னத்தை விடாதிருப்பதே நித்திய சாதனையாம். அதே போல் தற்போது தன்னுள் நிகழும் அனுபவத்திற்கேற்ற வெளிப்பாடு தொண்டு உயர்ந்ததாம். கூட்டு பொது தொண்டிலும் தனது வெளிப்பாடு தொண்டு பிரபஞ்சமளவுக்கு மேலும் வியாபிக்குமாம்.

352. யோகம், ஞானம் இரண்டிலும் வித்தியாசமான அனுபவத்தை ஸ்ரீஅன்னையின் மூலம் அடையலாம். யோகம் கடினத்தையும் மேற்கொள்வது, அதிமனத்தையும் அடைவது. ஞானம் அதை முழுக்க தெரிந்தும், பார்ப்பதும், விமரிசிப்பதும் வளர்ச்சிக்கேற்ப இரண்டும் ஒருவருக்கே நிகழலாம். ஸ்ரீஅன்னையின் மீதான சங்கல்பத்தை எழும் ஆர்வத்தை பொறுத்தது. பக்தி, ஞானத்தைவிட சிறந்ததாம். இதயம், மனம் இரண்டும் ஒன்றாயின் சைத்திய ஒளி பிரகாசமாம்.

353. அகவளர்ச்சி ஸ்ரீஅன்னையை ஜீவனுள் நிரந்தரமாக்கியோருக்கு புலனாகும் புறஅடையாளங்கள், புதியோருக்கு புலனாகா புறசாட்சி புகழுக்குறியது. ஆயினும் ஆபத்தானது. ஸ்ரீஅன்னைக்கு மட்டும் எனில் பாதுகாப்பும் வளர்ச்சியும் தரக்கூடியது. சாதனையை சோதிப்பது, நிலைகுலையாதிருப்பது நித்தியமானது அசைவின்று அதிமனத்தை தனதுண்மை சைத்திய புருஷனில் ஏற்பது. பிரபஞ்ச, அதிபிரபஞ்ச ஆளுகைக்கு உட்படாதது. உயர்வான உண்மையில்லயிப்பது.

354. சுவாமிவிவேகானந்தர் ஒரு சாதகரை தழுவி அகத்திறவாகிட இறையை உணர்த்தினார். ஸ்ரீஅரவிந்தர் ச்சம்பக்லால்ஜியை தழுவி அதிமனத்தை அணுவினுள் ஊடுருவச்செய்தாரோ? ஸ்ரீஅன்னை அஜந்தா சத்பிரேமிற்கு

முத்தமிட்டு நுண்ணணு திருஉரு பெறச்செய்தாரோ? ஸ்ரீஅரவிந்தஅன்னையின் தூல உடலை தரிசிக்கா பக்த, சாதக கோடிகளுக்கு அருவில் அரவணைத்து முத்தமிட அவர்களின் உணர்வு ஒன்றே குறியாயிருந்தது அடைவோமா? நிச்சயம் தெய்வ அன்பினை ஸ்ரீஅன்னையின் புன்முறுவல் அருளும்.

355. ஸ்ரீஅன்னை பன்னிரண்டு சக்திகளில் ஏதேனும் ஒன்றை முழுமையாக செயல்படுத்தும் மனித சமுதாயத்திற்கு சைத்திய திறவாகி, ஆதிக்கமும் உண்டாம். நம் ஸ்ரீஅன்னையை அறியாதவராயினும் அச்சக்தியின் நிறைவேற்றத்தால் அருள்பாலிக்குமாம். நான்கு திசைக்கும் நான்கு அம்சங்களும் தனது இருக்கையில் இருத்தியோருக்கு மூல ஊற்று சுரக்குமாம். பரந்த விசால விஷ்வாத்மாவே விவேகமாக விழித்துணர்ந்து வீணானவையின்றி விடியலில் ஸ்ரீஅன்னையின் அருள்பாதத்தை தொழுவோமாக.

356. பேசுவது எழுதுவதை விட எளிது . எழுதுவது ஸ்ரீஅன்னையின் உணர்வோடு மந்திரங்கள் உச்சரிப்பதைவிட எளிது. உச்சரிப்பது நன்கு தியானிப்பதை விட எளிது. தியானிப்பது மோனத்தில் ஆழ்வதைவிட எளிது. மோனத்தில் ஆழ்வது ஸ்ரீஅன்னையின் பிரசன்னம் தனது சைத்திய புருஷனில் அகலாது காண்பதை விட எளிதாம். எது எளிதோ அடுத்து வலியதை நோக்கி முன்னேறுவதே ஸ்ரீஅன்னையின் ஆற்றலைப்பெற விரிவாக்க வாய்ப்பாம்.

357. அவசேதனத்தைக் கண்டு அஞ்சி பிறப்பை அறுப்பது குறைவாம். அதனுள் சைத்திய வளர்ச்சியுடன் ஸ்ரீஅன்னையின் பிரசன்னத்தோடு ஊடுருவ, ஊடுருவ ஆன்மீக மாற்றம் ஏற்பட்டு அதிசேதன சக்தியை தன்னுள் சேகரித்து ஸ்ரீஅன்னையின் ஸ்தாபனத்தை புறத்தில் அமைத்து சைத்திய அருளால் அதிமன வளர்ச்சிக்கு முன்னேற பிரார்த்திப்போமாக.

358. பிரகிருதியானவள் புருஷனுக்கு உகந்ததால் பிளவின்றி பூரணயோகத்தினை மேற்கொள்ள ஸ்ரீஅரவிந்தர் ஸ்ரீஅன்னையை காண்பித்தார். பக்தர்கள், கிரகஸ்தர்கள், பிரம்மசாரிகள், குழந்தைகள் என்ற பாகுபாடின்றி யோக சாதனை புரிய அருளி ஸ்ரீஅன்னை உயர்த்துகிறார். பூரணயோகத்தில் ஸ்ரீஅன்னையின் அன்பு வெள்ளம் பொங்கி இதயத்தை நிரப்பி நிறைவினை

ஏற்படுத்தி நிலையான ஒருமையை அருளுகிறது. எண்ணே அவளின் மகத்துவம், புறம் அகத்திற்குள்ளானால் தன்னையே அருளுகிறது, இரண்டும் பூரணத்துவத்தில் சைத்திய ஒளியில் மிளிருகிறது. இந்த ஒருமை பிளவான அனைத்திற்கும் ஸ்ரீஅன்னை அருளி சைத்திய மகிழ்வினை ஊட்டுகிறாள். எல்லாம் ஏற்புறட்டும், இன்புற்று இன்னலகன்று இறைமையாகட்டும்.

359. மலர்களை நிலமிருப்பின் அல்லது எங்கேனும் வாய்ப்பின் வளர்த்து ஸ்ரீஅன்னையின் நாமத்தை உள்ளத்தில் உச்சரித்து பறித்து சுத்தம் செய்து ஸ்ரீஅன்னைக்கு தன்னை அர்ப்பணிக்க அகமந்திர சக்தி வெளிப்பட்டு சைத்திய தூலம் தனக்கு தேவைக்கேற்ப பிராணன், மனத்தை சேர்த்து தூய்மைக்குள்ளாக்கி தனது ஜீவனை ஸ்ரீஅன்னைக்கு உரியதாக்கி உன்னத உணர்வாகிறதாம். தனது பிரபஞ்சத்தின் விதியை ஸ்ரீஅன்னைக்குள்ளாக்கிறதாம். அதிபிரபஞ்ச சுழற்சியின் பாதிப்பின்றி சுதந்திர, பூரணத்துவ சைத்திய தூய, ஒழுங்கான, ஒழுங்கினைந்த பிரபஞ்சமாக வெளிப்படுத்துகிறதாம். கிரக, அசுர மேல்மன ஆதிக்கம் கடந்து அதிமன உலகிற்காக தயாறாகிறதாம்.

360. ஸ்ரீஅன்னைக்காக தொண்டாற்றும் சாதகருக்கு தொண்டாற்றினால் தொண்டின்பம் பன்மடங்காக எங்கும் எல்லா பக்தர்களுக்கும் நல்வழியும் அருளாசியும் கிட்ட வாய்ப்பாம். அதி அகந்தையற்று ஸ்ரீஅன்னையின் ஆன்மீக வாழ்வு மட்டும் நிகழ்ந்து ஸ்ரீஅரவிந்தரின் அதிமன யோகத்தை துரிதத்திற்குள்ளாக்குகிறதாம். தொண்டருக்குள் ஏற்படும் நெருக்கத்தால் அவர்கள் துறவு துயரின்றி உண்மை உணர்வு உறவால் உற்சாகமுண்டாகிறதாம். தொண்டின்ப மகிழ்வாம்.

361. மனித உடலே பிறலோகத்திலில்லா பிரகஸ்பதி கணபதி பிரணவம் சைத்தன்யம் முழுமையாக ஸ்ரீஅன்னையான உடலுக்கு பொன்னுடலாவது நிச்சயமாம். சூட்சும பரிணமிப்பில் தனதுண்மை ஸ்ரீஅன்னையுள் வளர்ந்து விரிந்து வியாபித்து பெரிதாகி விஷ்வமாகி மீண்டும் சைத்திய இருக்கையாக, அதிமன, ஆன்ம சக்தியை தன்னுள் நிரப்பி முன்னேற்ற ஒழுங்கினை கண்டு கனலாகிறதாம்.

362. இதுவரை பிற இயற்கை அதெய்வீகத்திற்கும் இடனளித்தது ஆனால் ஸ்ரீஅன்னைக்காக ஆன சைத்திய பிரபஞ்சமோ ஸ்ரீஅன்னையின் புதிய படைப்பிற்கு, புத்துலகிற்கு, புதுயுகத்திற்கு உருப்பெற்றது. அங்கு அன்பு, ஆனந்தம், இசைவு, இறைமையே நிலவுமாம். பிரபஞ்சங்களெல்லாம் ஓர் அணுவே ஆகினும் அதனுள் முழுக்க ஸ்ரீஅன்னையின் பிரசன்னம் நிலவ, அவையனைத்தும் ஆர்வமுற அதிமன புருஷன் அனைத்தின் தலைவனாக பரிணமிக்க அருளுகிறார். பகவான்ஸ்ரீஅரவிந்தர்.

363. நமது இயற்கையின் ஒரு பகுதியான உள்இயல்பினாலே இன்னல் ஏற்படுகிறது. இனியஅன்னையின் உணர்வின் வலிமையே அதை வெல்லும் ஆற்றலை அருள்கிறது. இயற்கையின் விலங்கு எண்ணங்களை மனமும், பிராணனும் உயர் உணர்வால் உருமாற்ற வேண்டும். நம் ஜீவனில் எல்லா பாகங்களும் ஸ்ரீஅன்னையின் உணர்வுமயமாகவே திகழும் திறனுடனிருக்க சாதனைபுரிவோமாக.

364. காற்றிலே நிலவும் பிராணன் தூலத்தில் நிலைபெற ஸ்ரீஅன்னையின் சைத்திய பிராணனாக உருப்பெற உலகுணர்வுள் நிலையான தகுதிக்குள்ளாகி உலகுயர்களை உன்னத அதிமன சமுதாயமாக்க சைத்திய ஜீவனை உருவாக்கிறது. பிராணனை வற்றடிப்பதும், தூய்மை படுத்துத்தாமல் விஷ்வமாக்குவதும் விபரீதமாம். ஆசையின்றி உண்மை தேவை ஈடேற்றி ஒருங்கிணைந்து உயருறு ஜீவனே! .ஒடுங்குதல், ஒடுக்குதல், திரித்தல், திரிதல், விலகல், தனித்தல், ஒன்றாதல், அழுக்கிலா ஆன்மீகமாகிட ஸ்ரீஅன்னை மட்டுமே சிறந்த வழிகாட்ட முடியும். தனதுண்மையே கூட தடுமாறலாம், பிரபஞ்சம் ஏய்கலாம். முழுக்க அவளே கதி.

365. சந்தோசம், மகிழ்ச்சி, இன்பம், ஆனந்தம், எதுவாகினும் ஸ்ரீஅன்னையை நினைப்பதால், நிவேதிப்பதால், அர்ப்பணிப்பதால் சரணடைவதால் பேரானந்தமும், சைத்திய ஆனந்தமுமாக ஊற்றெடுத்து இதயத்தில் பொங்கி பாய்கிறது. உலகு, பிரபஞ்சம் அதில்லயித்து களிக்கிறது, எல்லாம் அவள் உணர்விலே உயிர் வாழ்வதாலோ?

366. உறுஞ்சும் உலகில் உழலாதீர். உதற, ஊடுருவி உயர, அது நுழையாது தடுத்து பாதுகாக்க ஸ்ரீஅன்னையின் உணர்வோடு விழிப்பாகிடுவோம்.

விரைந்தே வீணாக்கா அமர காலத்திற்குள்ளாவோம். ஸ்ரீஅன்னைக்காக நொடி, நிமிஷம், மணி, நாள், வாரம், மாதம், ஆண்டுகள், யுகங்களை அவளுடைமையாக்கி அவள் நினைவாலே உதிரத்தை, நரம்பை, இதயதுடிப்பை, சிந்தனை, செயல், உறக்கம், விழிப்பு அனைத்தும் அவளுக்காக ஆக அவனியில் ஜனிக்கும் ஜனங்களெல்லாம் ஆகிடுவோம். ததாஸ்து.

367. உண்மையான தெய்வ அன்பிற்கு அகிலமும் கட்டுப்படும் எதிர்ப்புமாறி ஒத்துழைப்பாகும் இன்னல் இடையூரெல்லாம் அன்புக்குறைவேயாம், அது ஜடமானாலும், தாவர, விலங்கு, பறவை, மனிதனானாலும் ஸ்ரீஅன்னையின் பனிரண்டு சக்திகளில் ஒன்றாயினும் தனதாயிருப்பின் சைத்திய வளர்ச்சிக்கு உலக சிருஷ்டிகளனைத்தும் ஆர்வமுற்று தூய பரிணமிப்பால் அதிஉலக சமுதாயத்தின் தளமாகிட ஸ்ரீஅன்னையின் தொண்டில் பங்கேற்போமாக.

368. ஸ்ரீஅன்னையே! உம்மை உலகு பிரார்த்திப்பதால் அதனின் சைத்திய பரிணமிப்பை விளக்கவொண்ணா அருளை பொழிகிறது. ஊனத்தை, குருடருக்கு பார்வை, ஊமைக்கு பேச்சு, செவிடருக்கு கேட்க, முடவருக்கு நடக்க இவையெல்லாம் அற்புதங்களே. அகத்தில் ஆன்மீகத்தில் அதிமனத்தை யாரும் அருளாததை அருளி பிற அனைத்து அற்புதங்களையும் எளிதாக்கி அற்புதங்களுக்லெல்லாம் அற்புதமாக திகழும் ஸ்ரீஅன்னையின் மகிமையை முழு ஞானத்தோடு முழுமையாக அறிவோருண்டோ? ஸ்ரீஅரவிந்தரின் அன்னையல்லவா நம் தெய்வ அன்னை. மதர்ஸ்ரீஅரவிந்தாய! ஓம்! ஸ்ரீஅரவிந்தாயமிராய!

369. பிரபஞ்ச இயக்கத்தின் இழுப்பில் தனது மன ஒளியால் பிராண சக்தியால், உடலன்பால் ஸ்ரீஅன்னையின் அருளினைப்பெற்று பரிணமித்து, புத்துணர்வு, புதிய சக்தியை உற்பத்தித்து உலகத்துள் வாழ்வாங்கு வாழ்ந்து. வானுறையையும் தெய்வமும் தனது சைத்தியத்துள். வந்திறங்கி நிலைப்பெற்று பிரகிருதியும் புருஷனும் ஒன்றாக அகபுறமும், ஒரே சைத்திய ஆனந்தமாகிட, ஓம் ஸ்ரீஅரவிந்தமிராவே நமஹ. மதர் ஸ்ரீஅரவிந்ததாய நமஹ. எனும் அதிமன, சைத்திய மந்திரத்தை இடைவிடா மூச்சாய் ஒலித்துக்கொண்டேயிருப்போமாக! ததாஸ்து.

370. பிரகிருதி புற இயற்கை, மாறானவை, எதிர்ப்பானவை, அசுர சக்திகள் கூட அதனதன் பாணியில் மிக நுண்ணியமாக ஸ்ரீஅன்னையின் சைத்தியலோகத்திற்கு ஏற்ப செயல்புரிகிறது. இதை சாதகன் புரிந்து, அறிந்து, தெளிந்து, விவேகம், ஞானத்தோடு அதை நேராக ஸ்ரீஅன்னைககாக பரிணமிக்கச் செய்ய இயலுமாம். சாதகரின் பொறுமை, முயற்சி, அச்சம், அருவெருப்பின்மை, அயறா பிடிவாதம்(பிறவற்றை விட) .... போன்றவை தெய்வவெற்றி அளிக்குமாம்.

371. இப்பிறவி முதல் முடிவுவரை பல ஆண்டுகளாக ஸ்ரீஅன்னையை மட்டும் தொய்விலாது, அசையாது,களங்காது, சந்தேகிக்காது, சோர்வுராது, துவலாது, தூங்காது (உணர்வால்), தூய்மையாய், நேர்மையாய், நெஞ்சார, மனமார, உயிராக, உடலின் களாப்பினை கருதாது, கனலாய், அனலாய், காட்சியாய், அக்னியாய், பொலிவாய், மகிழ்வாய், அழகாய், அருளாய். பொருளாய், அருவாய், உருவாய், பஞ்ச பூதமாய், நான்கு திசையாய், எங்குமாய், ஏகமாய், பாகமாய், வெளியாய், பகுதியாய், பரமமாய், நட்சத்திரங்களாய், வானமாய், சோலையாய், மலையாய், மருவாய், குயிலாய், மயிலாய், மானாய், வீரமாய், விவேகமாய், சூரியாய், சாந்தமாய், ஞானமாய், கீதமாய், ஓங்காரமாய், ரீங்காரமாய், இதுவாய், அதுவாய், எதுவாய், ......எண்ணிலடங்காகதாய், எண்ணிலுள்ளதாய் அசைவாய், அசையாததாய், நிறமாய், ருசியாய், வித்தாய், நாதமாய், படைப்பாய், பரிணமிப்பாய், யோகமாய், தியானமாய், திவ்யமாய், திகழ்பவளே திரிலோகம், ஈரேழு லோகத்தின் தலைவியே, எம்மால் ஆன மட்டும் உம்மை எப்படியெல்லாம் கண்டுகளிக்கிறோமோ, ஆனந்த பரவசத்தில் ஆழ்கிறோமோ எல்லாம் உமக்கே அர்ப்பணிப்பதால் எம்மை அறிவவர் நீங்கள் மட்டுமன்றோ!

372. துணிவிலா ஜீவனால் பல உண்மைகள் வெளிப்படாமலே மடிகிறது. ஸ்ரீஅன்னையின் அருளோடு துணிவோடு செயல் பட்டால் கனிவோடு காரிய சித்தியாம். கண்டவர் களிப்பர். விண்டவர் விழிப்பர். துவண்டவருக்கு துயரம். துணிந்தவருக்கு சிகரம். அகரத்தில் ஸ்ரீஅன்னையை ஸ்ரீஅரவிந்தரைக் கண்டவர் விண்டிலர். மாண்டிலர். மகத்துவம் எல்லாம் அகத்துவம். பொய்மை, கயமை கடந்த வாய்மை. தூய்மை பெற்றிடும் பேறு முன்னேறு முழுதாய், பழுதாய் பதறாதே, அழுக்காய் அயராதே. தொழுதாய்

தொண்டனானாய். ஆழ்ந்தாய் அமரனானாய். ஸ்ரீஅன்னையே எல்லாமுமாய். சாட்டினாய், சடம் உணர்வுற, பிண்டம் பிடிப்புற, அண்டம் அதிர்ந்து ஸ்ரீஅன்னையை அடைந்திட, இத்தொண்டே அதிமனத்தொண்டு. எத்தொண்டும் ஈடாமோ? இறைவா! பரமா! ஸ்ரீஅரவிந்தா! சரணம், சரணம், சகலமும் சரணம்.

373. உனக்கும் ஸ்ரீஅன்னைக்கும் உள்ள நெருக்கம், உன்னுள் உறையும் உதிரத்தை விட உயர்ந்தது. புறத்தில் கடலும் வானைவிட பரந்து, விரிந்து, சிதந்தது. இனி எவ்வடிவிலிருப்பினும், கர்மவினை தொடராதிருப்பது விசுவாமித்திரரை மயக்கிய மேனகையிலும், கொக்கென நினைத்த கொங்கனவனாலும், ஸ்ரீஅன்னையின் சாதகர், சாதகியரை அசைத்திட ஸ்ரீஅன்னையிடமிருந்து பிரித்திட எவறாலும், தன்னாலும் முடியாது. தனதுண்மை சைத்திய அன்னையிடம் எதிரிடையாகவே கரைந்தாயிற்று. எல்லாம் அவளின் சித்தம் ஆயிற்று. இனி அவளின் அற்புத பரவசானந்த ஓடைகளில் ஓடும் ஆனந்தக்களிப்புறும் நீரன்றோ நினது குழந்தைகள்.

374. உண்மையின் ஆழத்திலிருந்து புற, அக, உள், வெளி எங்கிருந்தும் ஸ்ரீஅன்னைக்காக எழும் ஒவ்வொரு உணர்வும் ஸ்ரீஅரவிந்தரின் அதிமன யோகத்திற்கு உகந்ததாம். தூலாமோ, சூட்சுமமோ, உருவோ, அருவோ இரண்டும் கடந்ததோ, எல்லாவற்றாலும் எளிதில் அறியக்கூடியதோ, எதாலும் உணர முடியாததோ, அனைத்தும் அவளுக்கே யாம். அதிமன ஒழுங்காகுமாம்.

375. பிற உணர்விற்கு ஆளான ஸ்ரீஅன்னையின் பக்தர்களே! இந்த சைத்திய காலத்தில், ஸ்ரீஅரவிந்தரின் சத்திய யுகத்திற்கு விரைவில் விடியலை நோக்கிடும் சாதகர்களாக தாமதியாது பகுத்துணர்ந்து புறம்பானவையின் கைப்பாவையாகாது பகை சக்திக்கு பலியாகாது பாதுகாப்பு, பரமனின் சித்தப்படி வாழும் வகையில் ஆழ்ந்திடுவீர். அமர நிலையை அழியும் காலத்தில் உணர்வு சக்திகளை வீணடிக்காதீர். விரையுங்கள் விரயமின்றி விழைந்து விவேகத்தோடு விழிப்பாயிருங்கள். வீணாகா பொன்னுடலாகுங்கள். புதுயுகத்தினுள்ளாகிட ஸ்ரீஅன்னையை தீவிரமாக நெஞ்சில் இதயமையத்தில் நிலை நிறுத்துங்கள். ஏமாறாதீர்கள்.

376. ஒ எளிய நெஞ்சங்களே! தூய்மையே, வெகுளியாய் வெளிரிடாதீர். புறத்தில் திறனோடு இருங்கள். திக்கு முக்காடி திணறி திசைமாறிடா சக்தி பெறுங்கள். தேவையின்றி அலையாதீர். அமைதிப்படுத்தி ஆழ்ந்து ஸ்ரீஅன்னைக்குள்ளாகி நோக்குங்கள் உண்மை வழிமட்டும் வெளிப்படும் அப்போதே வீனாக அலைந்தது தெளியும். எல்லாத் தேவையும் தன்னுள்ளே தாமசீகத்திற்கல்ல தணலான ஜீவனுக்கு தன்னுள்ளே வளரும் ஸ்ரீஅன்னையிடமிருந்து அனைத்தும அடைந்திடுக. அர்த்தமுள்ள வாழ்வாக்கிடுக. தெய்வீக வாழ்வே நிரந்தரம். சுதந்தரம், பவித்திரம். பத்திரம். பிற உபத்திரம். கண்டிடுக, வளர்ந்திடு., வாய்மையாகிடுக. வளமே, யோக தளமே, அகமே, சுகமே, ஆன்மீகமே, அல்லலகற்றும் களமே உமது உணர்வே ஸ்ரீஅன்னையின் சிம்மாசனமே, யோகாசனமே புறமே, தியாகமே, தாகமே, சரணமே, பூரணமே, பக்தியே, முக்தியே, ஸ்ரீஅன்னையே, மெய்மையே ஈர்ப்பீர் எம்மையே.

377. உச்சிக்குழி, அமுதவாய், ஆயிரமிதழ்தாமரை, சகஸ்தரதள சச்சிதானந்த அனுபவம், குண்டலினி, ஏழுமையங்கள், தாமரைகள், சக்கரங்கள், சூரியன்கள், தனதுள்ளே தோன்றினும், சாகா உடலெடுப்பினும், ஜீவமுக்தி, ஜீவசமாதியாயினும், புழு பட்டு (சில்க்) ஆகிபட்டது போல தனது உண்மையுள் ஸ்ரீஅன்னையுள் சைத்திய புருஷனுள் வளறாதது. அண்டசராசரமாகி தன்னை இழப்பது தகாது. தன்னுள்ளிலிருந்து சைத்திய புருஷனுள்ளேயிருந்து வளர ஸ்ரீஅன்னை ஸ்ரீஅரவிந்த ஆசிரமம், ஆரோவில்லை அமைத்துள்ளார்கள் பழைய யோக அக முறைகளே புறம் போன்றவை பழைய அக ஆழத்திற்கும் ஆழமாக மறைந்துள்ள மகத்தான அந்தராத்மா வழிமுறையில் வளர்ந்திடுக, தகர்த்திடுக. தாழா சைத்திய அக்னியை கண்டிடுக. அதனுள்ளிருந்தே வளர்ந்து பழயன வனைத்தும், புதிய படைப்புகளனைத்தும் தனதுடமையாக்கிடுக. தரணி வாழ்வை தாயின் தங்க உலகாக்கிட தன்னையே ஒப்புவி. உட்குவி, ஊடுருவு. உணர்வான எல்லாவற்றிற்கும் தலைவியான ஒளிரும் ஸ்ரீஅன்னையின் வெண்ணிற உருவே நமக்கு எல்லாம். பிறவா இறைவாகிட இறவா பிறவியாகிட, இனிய அன்னையின் குழந்தையாகிடுக, எல்லாம் அருளுகிறார். எண்ணற்ற வழிகளில் நடத்துகிறார். அவனியே அவருக்கேயாம்.

378. ஸ்ரீஅன்னையை சாஸ்தபமாக கண்டசாதக, சாதகியருக்கு பிற எவ்வித உறவின் பிரிவும் களங்கச் செய்திடாது. எத்துயரும் உயிருக்கு உயிரானதும் இரண்டாம் பட்சமாகி விடும். ஆயினும் அவர்களுக்கு பிரிவுத் துயரே இருக்காது. பிரியவும் முடியாது. எச்சக்தியும் பிளவு படுத்தினால் தோல்வியுறும், ஈஸ்வர ஈஸ்வரிசக்தி சின்னமாக ஆசிரம சர்வதேச கல்வி மையத்தை ஸ்ரீஅன்னை அமைத்தது பிரகருதி புருஷனை பிளவின்றி அக, புற வாழ்விற்கு மாதிரி தளமானது உலகிற்கே அருளாம்.

379. தன்னை ஆண்டவர் தரணி ஆளலாம். ஆனால் திருஉருமாற்றம் செய்வது ஸ்ரீஅன்னைக்கு தன்னை பணிவித்து, தூய இச்சா சக்தியோடு சரணமாவதே பழைய மனம், வாழ்வு, செயல், அகங்காரம், பொய்யானதேவை, பயனில்லா பழக்கம், எல்லாம் தனதுண்மை அர்ப்பணிப் பால் தெளிவான வழியும் கொடுப்பினையும் கிட்டும். தவறில்லா தனது சைத்திய ஒளிச்சாவி ஆன்மீக அருள் கூடங்களை திறக்கும் தனது உண்மையான அக அனுபவத்தால் தனதுள் தொடர்புற்ற பிரபஞ்சங்களுக் கெல்லாம் அதிபிரபஞ்ச சக்திகளை, சூட்சும அசைவுகளை தனது சைத்தியம் தயவுடன் ஒருமித்து தொடர்புறுத்தி அன்பால் , பக்தியால், ஆன்மீக மகிழ்வால், அழகால், ஒளியுடலாக தனதுடலிலுள்ள அண்டசராசர பிரபஞ்சங்களை உருமாற்றி ஜீவாதி ஜீவனாக இறுதியான இருக்கையாக, சைத்திய உணர்வாக தூய தொண்டாற்றி உடனடி உலகிற்குறிய இறை சித்தத்தை ஈடேற்றும் கருவியாளனாக சாதக, சாதகிகளாவதற்கு சடத்தில் .ஸ்ரீஅரவிந்தராஸ்மம், ஆரோவில் அமைத்த ஸ்ரீஅன்னையே உம்மீது எமது பொங்கும் நன்றியான அன்பு வெள்ளம் எம்மாத்திரம்.

380. ஸ்ரீஅன்னையின் யோகத்தை ஏற்ற சாதக, சாதகியர்கள் அக அந்தராத்மாவின் வளர்ச்சியை தனது ஆழ்ந்த இருக்கையின் மூலம் புறத்தை தெய்வீகமாக மாற்றி மேலுணர்விற்கு ஆன்மீக தளம், உயர் இருக்கை, மேல் மன தளம், அதிமன தளம்... இப்படியாக ஒரு இருக்கை சிறந்த கருவியாகி உயர்வுற அருளிய ஸ்ரீஅன்னைக்கு சகலமும் சமர்ப்பணம்.

381. பலகாலமாக தன்னுள் சைத்திய அன்னையைக் கண்ட ஆன்மீகி அனைத்து அதிபிரபஞ்ச உணர்வு திரைகளை விலக்கி, உயர் இருக்கையாக தூலத்தில்

வாழ்ந்து அருளும், ஆசியுமான வெள்ளத்தில் புதிய அனுபவத்தால மேல் மனத்திலும் புதிய சக்தியுடன் மிளிர உதவுகிறார்.

382. எல்லையில்லாதது ஸ்ரீஅன்னையின் உணர்வு. ஆன்மீக ஞானம், எல்லையில்லாததைப் பற்றிய விழிப்பு சாதகனின் சிறு இயற்கையை பரந்த, விரிந்த, பெரிதாக மாற்றுவது. அமரத்துவத்தை அருளுவது, இறைவனின் இருக்கையை நெருங்க வைப்பது. அமைதி,சக்தி, நமது மன, பிராண தூல உலகில் வேலை செய்து திடமான நித்திய ஜீவனாக மாற்ற வல்லது. ஸ்ரீஅன்னையின் மகத்துவத்தை துதிக்க, புகழ, தொழ, மனித மொழியும் போதாது. பிற சூட்சும உயர் தேவகணங்களும், மேல்மன கடவுளர்களும் கணிக்க முடியாத அதிதேவதை ஸ்ரீஅன்னையன்றோ! ஓ ஜீவனே, சரணடை ஸ்ரீஅன்னைக்கு.

383. பிரம்மச்சாரிகளுக்கும் மேலான கிரகஸ்தர்களின் இறைச்சித்தம் உண்மையெனில் உயர்ந்தது. ஆனந்தத்தை அருளுவது. ஆசை, அகங்கார ஜீவன் ஆனந்தத்தை விலக்குவது, கலப்பானது. கவனமாக ஸ்ரீஅன்னைக்கு நிவேதித்து, நிவேதித்து தூய்மையடைந்து, நேர்மையான இன்பத்திலும் இறைவனுக்கா? என்பதை உணர்ந்து உன்னதமாகி இயற்கையை வற்றடிக்காது தேவையை ஆசையாக்காது, விடுபட அதிஉணர்வை அழைத்து தூய சுதந்திர ஆனந்தமாகிடுக. எல்லாம் ஸ்ரீஅன்னையின் அக ஒளியுணர்வால் திறம் பெறுக.

384. ஸ்ரீஅரவிந்த ஸ்ரீஅன்னை கண்ட அதிமன வலிமை ஒன்றே கோடானுக்கோடி யோக முறைக்கும் முன்னோடி எல்லாம் இதிலிருந்தே தன்னை புதிப்பிக்க, பரிணமிக்க விழைகிறது. பிற யோக முடிவில் இதன் ஆரம்பம் புலனாகிறது. பிறவற்றிற்கும் முன்னேற உதவுகிறது. முடிவில்லா முடிவாக உள்ளது. முழுமைக்கும் முழுமையானது. பூரணத்திற்கும் பூரணமானது. பிரபஞ்சத்தை, பிரகிருதியை ஒளியுறுத்துவது. திருஉரு அருள்வது. திவ்ய மாற்றம் செய்யவல்லது. திரையில்லாதது. தூலத்தை தூயதாக்கி பொன்னுலகைப்படைப்பது. ஓ ஸ்ரீஅரவிந்தமிராவே எமக்கு சரணத்தை தவிர ஏது? வேறு அர்ப்பணம். பிறவெல்லாம் வெற்று சொர்ப்பணம்.

385. அறியாமையில் பரிணமிக்கும் இயற்கையை, ஸ்ரீஅன்னையே தனது உண்மை இறைமையாக தெரிந்தெடுத்த ஆன்மாவிற்கு தனது இயற்கையை ஞானத்தோடு நேரிடையாக இறை சித்தப்படி பரிணமிக்க தூய உலகை அருள்கிறார். காலம், சக்தி, விரையமின்றி ஒவ்வொரு அசைவும் ஆன்மீக மாற்றமடைந்து ஸ்ரீஅரவிந்தரின் அதிமனத்தை நோக்கி முன்னேறுகிறதாம். ஓ! இயற்கையன்னையே ஸ்ரீஅன்னையாகுக!

386. உண்மை உணர்வு ஒன்றே இறை சித்த பரிணாமத்தை காணமுடியும். சைத்திய அன்னையின் தொடர்பால் விடுபட முடியும். அப்போது தனதுண்மையில் உறையும் ஸ்ரீஅன்னை தனது வெண்ணுடலில் அதிமன பொன்னுணர்வு இறங்கிட வகை ஏற்படுத்துகிறது. அதிமன ஆன்மீகம் அழியும் திரை நீக்கி சத்திய வெளிப்பாட்டினை தூல உலகில் நிலை நாட்டுகிறது. இவ்வரிய சாதனையெல்லாம் ஸ்ரீஅன்னையே தஞ்சம். தமது நெஞ்சம் என்றிருப்போருக்கு உண்டாம்.

387. தனது உண்மையுள்ள ஸ்ரீஅன்னையின் ஆளுகை ஒளி ஏற்படின் அவளே உண்மையை உருவாக்கி உண்மையால் வளர்த்து உடல், மனம், பிராணனும் உண்மை ஒளியாகி, வேத வாக்காக, சைத்திய அதிமன வாக்காக வெளிப்படுத்துகிறது. திக்கெட்டும் ஸ்ரீஅன்னையின் திவ்விய, ஒலி, ஒளி, மிளிர்கிறது. மிர்ரா, மிர்ரா, மிர்ரா வென மூல மந்திர நாதம் முழங்குகிறது. பக்தி, கீதங்கள். சத்சங்கங்கள். பூஜை, ஆராதனை, தியான, அந்தராத்ம வேள்விகள் சைத்திய அக்னி, அக குண்டங்கள் ஸ்ரீஅரவிந்தரின் அதிமனத்தை நோக்கி மேலெழுகிறது.

388. ஸ்ரீஅன்னை, சாதகரின் அகத்தில் அண்டகராசரத்திற்கும் அப்பாலுள்ளதை தனதாக்கி சாதகர் தனது ஞான ஒளியால் வளரும் உணர்வு உண்மைகளை இருளேயில்லா தெய்வச்சூரியனை சகஸ்தரத்தில் ஈடில்லா ஒளியாக அவரே அருள்கிறார். தன்னை ஸ்ரீஅன்னைக்கு ஒப்புவித்த மனித தெய்வாத்மாவே புண்ணியமே! உமக்கு!

389. இறைமைக்காக உள்ள இயற்கை இறைவனிடமிருந்து வந்த உண்மையை விட நிகழ்காலத்தை ஸ்ரீஅன்னையின் உணர்வால் இசைவிக்க வல்லதாகி ஈடு செய்கிறது. எதிரான விபரீதம் நிகழாது காக்கிறது. வந்த உண்மை

தனது சித்தத்தை ஈடேற்ற ஏதுவாகிறது. பிரகிருதி புருஷன் ஒன்றாகிறது. புருஷனுக்கு புறத்தில் சிதறாது சித்தப்படி நிலைபெற பிரகிருதி உதவுகிறது. உண்மை கிரகஸ்தர்களும் உன்னதமாகலாம்.

390. புவி இயற்கையில் உள்இயல்பு உணர்வில் மேல்மனமும், அதிமனமும் சூட்சும ஆதிக்கம் கொண்டுள்ளது. சைத்திய அன்னையே அதை உயர் இயற்கையாக்கி அதிமன உணர்வு சக்தியை பிற, மன, பிராண, உடலின் ஜீவனுள் வெளிப்பட்டு திருஉருமாற்ற அன்னையாக ஆன்ம சாதகர்களின் இருக்கையில் செயல்புரிகிறார். ஸ்ரீஅன்னையே நமக்கு தருணமறிந்து அருள்கிறார். சரணடைவோமாக.

391. ஸ்ரீஅன்னைக்காக ஆன இயற்கையால் மட்டுமே புதிய உணர்வை அதிமன மாற்றத்திற்கு ஏற்க, செயல்படுத்த, சூட்சும உணர்வுற, அதிமனம் சிந்திக்க வாய்ப்பாம். பழையன மறைந்து போமாம். கர்மம் தொடரா பிறவிகள் அதிமன சமுதாயத்தை நோக்கியதாகலாம்.

392. யாரும் எந்த தேவகணங்களும் செய்திறாத, விட்டு ஒதுங்கிய அவசேதனத்தை அதிமன ஒளியால் திருஉருமாற்றிய ஸ்ரீஅரவிந்தரே நம் இறைவன். ஸ்ரீஅன்னையின் மூலமே நாம் அதிமன அருளினை பெற இயலும். கீழ்நோக்கிய அகத்தினுள் ஊற்றும் பொன்னொளியே அவனியில் அதிமன செயல் திறனை வெளிப்படுத்தும். ஸ்ரீஅன்னையே எல்லாம் என ஏற்ற, ஏற்கவுள்ள ஆன்மாக்கள் அருள்தளமேயாம்!

393. உண்மையை உண்மையே அறிய முடியும். ஆன்மதிருஷ்டி, இருக்கையின் தூண்டல், இறைத்தூண்டலுக்கு நான்கு அடுக்கு வலிமை உண்டு. உண்மையே பார்த்தல், உண்மையே கேட்டல், உண்மையே தொடல் மூலம் ஸ்ரீஅன்னையின் தொடர்பால் உண்மையே வளர வாய்ப்பாகிறது. அவளில்லா உண்மை பொய்மையின் கலப்பேயாம்.

394. ஒரு உண்மையான நல்ல ஸ்ரீஅன்னையின் சாதகருக்கு சைத்திய உடல், அகஇருக்கையில், ஜீவனில், உண்மையில் ஏற்படின் இறவா, பிறவா, நித்திய அமரத்துவமாம். இனி பிறவா ஈஸ்வரன் மக்களின் உடலின் ஆன்மாவினுள் புகுந்து செயல்படல் போன்றும் பிவி வாழ்வு அதிமனமும் சிந்திக்க உதவிட முடியும். ஸ்ரீஅன்னையிடம் சாதாரண பக்தராக வந்து பெரிய, அறிய

சாதகர்களாயிருப்பவர்கள் 'அவளின்' கருவியன்றோ. அவர்களை காண்பது புண்ணியமேயானாலும் தாமும் ஸ்ரீஅன்னை மீது அதிக பக்தி, தொண்டு, சரணம், நிவேதனம், அர்ப்பணம் செய்து அரிய அமர சாதகராவது, கருவியாவது ஈடில்லா தொண்டன்றோ.

395. ஏ! 'பிளவான இருக்கையே' சிக்கலில்லாதிருக்க அகப்புற இயற்கையை இணைத்து வாழ ஸ்ரீஅன்னையை நாடு. ஞானம், தெளிவு கிட்டும். அறியாமை, நோய், பலவீன, பொய் சிறைகள் உடையும் உன்னதத்தில் உயர்ந்திடுக. வளர்ந்கிடுக, வாழ்வாங்கு வையகத்தில் வளர்ச்சிக்குள்ளாகிடுக. சைத்திய, அதிமன பரிணமிக்க, வெளிப்பட அதிமனித சமுதாயமாகிட அருந்தொண்டாற்றிடுக பிளவால், காலம், சக்தி, உணர்வு இழக்காது ஏமாறாது விழித்திடுக. செழித்திடுக, செம்பொன்னாகிடு. ஓம் ஸ்ரீஅரவிந்தமிராய நமஹ.

396. பழைய யோகம் பிறப்பறுத்தலை குறியானது. புறத்தை ஒதுக்கியது. அசேதனமும் ஒதுக்கியதால் உருவானதே. மீண்டும் அதை அதிசேதனமாக்கவும், புது யோகம் புக, ஸ்ரீஅன்னையின் சைத்திய வாழ்வினை மேற்கொள்வதும், பழையவை திருஉருபெற ஸ்ரீஅன்னையின் ஆன்ம சக்தியால் பழைய களத்தை ஸ்ரீஅன்னையின் தளமாக்குவதும் சாதனையே. சச்சரவான இருக்கையின் தளங்களெல்லாம் சைத்திய ஆளுகைக்குள்ளாகி அமைதியுற்ற பின்னரே பழையன உதவியின்றி தனது உண்மையில் சிருஷ்டித்து தன்னிறைவான, ஆன்ம சக்தியை, அதிமன சக்திக்கும், அதன் ஆணைக்கும் உட்பட, செயல்பட முடியும். முற்றும் புதிதாய், எளிதாய், முழுச்சுதந்திரமாக பூரணயோக படைப்பினை விரிவாக்கும் ஸ்ரீஅன்னையின் யோகத்தை நன்கு பயின்று பலனடைய முடியும். பரமாக்கிரமசாலிகளே! பக்தி, சக்தி, பெற்று சாமனய சாதகராக திகழுங்கள். தீவிரமாவோமாக.

397. புவியில் ஜடமாகவோ, தாவர, மிருக, பறவையாகவோ, ஜீவிகளாகவோ, உணர்வுகளாகவோ, கடவுளர், தேவர்களாகவோ, ஆவிகளாகவோ! சித்த, புருஷ, ரிஷி. யோகியருள்ளே அமிந்துள்ள, ஸ்ரீஅன்னையின் சைத்தியத்தை உணர, காண, வாழ 'அவளின்' உணர்வின் தேக்கத்தால் அவனி மலர அரும்பணியாற்றிடுவோம்.

398. ஓ! சாதகரே, பிரகிருதியோ, பிரபஞ்சமோ உன்னை உறிஞ்சிட ஒருபோதும் அனுமதியா திரம் பெற ஸ்ரீஅன்னையின் ஒளிப்பிழம்பாகுங்கள். மயக்கும் மாயைகள் பிராணனைப் போல விரும்பினால் தன்னையே தாராளமாக தரும் வெறுத்தால் எல்லாவற்றையும் நாசமாக்கிடும். அதிலும் அழியா அமர நிலைக்குள்ளிருந்து செயல்பட உம்மை உறியவோ, ஏமாற்றவோ, உதாசீனப்படுத்தவோ, உதறவோ, உலகாலும் முடியாது. உலகே உன்னதமாகி உன்னிடமே இணையும். ஈடில்லா ஸ்ரீஅன்னையின் மகத்துவம் அவற்றினை ஆண்டிடும் ஆன்மீக வலிமையே ஆர்வமுற்று அதிமன வெளிப்பாட்டுடன் கலந்து, கரைந்து, அதனுள்ளே உரைந்திடுக, விலக, விலக்க, வீணாக்க, விண்ணில், மண்ணில், எண்ணிலடங்கா சூட்சுமத்திலும் இடமேயில்லை. இனிதே ஸ்ரீஅன்னையின் தொண்டாற்றிடுக. தொய்வின்றி தொடர்ந்திடுக. திட சங்கற்பத்தால் ஸ்ரீஅன்னையின் உறைவிடமாகிடுக.

399. ஸ்ரீஅன்னையின் மூலத்திலிருந்து வரும் சக்தியை அறியாமை பக்தர்கள் பகை சக்திக்கு, அசுத்தத்திற்குள்ளாக்கி விடுகிறார்கள். ஆன்ம சாதகர்கள் அத்தகைய பக்தர்களை இனங்கண்டு தெளிவுண்டாக்கி அறிந்தோ. அறியாதோ, அவ்வாறு நிகழாமல் ஸ்ரீஅன்னையின் உணர்வுவளர்ச்சிக்குதவியாகும்படி பயிற்சிக்க வேண்டும். பயிற்றுவோரும் மாறானவைக்கு மயங்கிடக்கூடாது. மூலத்தை வீணாக்க ஏற்கவே கூடாது. உருமாற்ற உதவலாம் உறிஞ்சி அது வலுபெற நீ ஏமாற நிகழக்கூடாது.

400. ஸ்ரீஅன்னையின் ஒளி ஒன்றே அனைத்து ஒளிகளுக்காக உள்ளதை தனது சைத்திய புருஷனில் கண்ட சாதகன் உணர்வு சக்தியோடும், உண்மை உணர்வோடும் எல்லாமும் தனதுள் அமரத்துவத்தில் தன்னிறைவு, தன்ஞானத்திலே அதிமன அணிகலனாகிறான்.

401. ஸ்ரீஅன்னை அணிந்த ஆடையில் ஒரு சிறு துண்டைக் கொண்ட ஆசீர்வாத பாக்கெட் (Blessing Pocket)ஐ தொடும்போதோ, பார்க்கும் போதோ, அதை கையில் வைத்து தியானிக்கும் போதோ, ஏற்படும் ஸ்ரீஅன்னையின் பிரசன்னம் அவர் தூலத்தில் எங்கெங்கு சென்றார், என்ன செய்தார், என்பவை நிஜமாக பார்ப்பதைப்போல அறிய முடிகிறது. இவ்வனுபவம் அடைந்த சாதகருக்கு ஸ்ரீஅன்னையை நேரில் காணா காலமாயினும்

'அவருடன்' இருந்ததாகிறது. அணு அளவிலும் நிதர்ஷனமாக பிரசன்னம் கிட்டுவது பாக்கியமாம், ஸ்ரீஅரவிந்தரின் 'தத்சாவித்துருவரம் ரூபம் ஜ்யோதிஹி! பரஸ்ய தீமஹி யன்னஹ சத்யனே தீபயேத்' மந்திரத்தை உச்சரித்து, உச்சத்திற்கு உயர வேண்டியதே. அவள் உணர்வே நமக்கு உயர்வே ஆன்ம அனுபவமாவது அவள் அருளாளே.

402. ஸ்ரீஅரவிந்தர் நூற்றாண்டு 1972 ஸ்ரீஅன்னையின் நூற்றாண்டில் 1978 தந்த இருவரின் ஆடையின் சிறு துண்டு கிடைத்தது பெரும்பாக்கியமாம். இனிவரும் முக்கிய தரிசன நாளில் ஆசீர்வாதத்தை கிட்டலாம். இருவரின் பிரசன்னம் உணர்வாளோருக்கு தரிசனமாகலாம். பொருளோ, உலகோ ஈடாகா உன்னதமே உம்முள் எம்மை எல்லாம் ஏற்று அருள்வீர். அற்புத, ஆனந்த, ஆன்மீக உணர்வாகிட உமது பாதங்கள் என்றும் எமது நெஞ்சங்களில்.

403. அதிமன இயற்கை தனது இருக்கையிலிருந்து கீழ்நோக்கி அவனியின் அக உணர்வில் இறங்கிடவும் புவியினுள் அமிழ்ந்துள்ள அதிமன சக்தியை இணைக்க இனிய அன்னை அவதரித்து அமைத்த ஸ்ரீஅரவிந்த ஆசிரமமும், ஆரோவில்லும் இருகண்களன்றோ! அவளின் குழந்தைகளுக்கு! ஸ்ரீஅன்னையை நோக்கிய நாம் ஒரே குறியாக, ஒரே வழியில் உறுதியாக சென்று இலக்கை அடைவோமாக!

404. ஸ்ரீஅன்னையின் சாதகர் அதிபிரபஞ்சம் கடந்தவராயின் சுதந்திரத்தனித்துவம் பூரணத்துவமாம்.அக, ஆன்மீக சாதனையால் புறத்தில் சைத்தியம். அதிமனம், அக சிருஷ்டியால் வெளிப்பட்ட தெய்வீக வாழ்வாகியிருக்க வேண்டும். வாழ்வே யோகமாம். வையகமே வானுலக வைகறை விடியலாம். பொன்னுலகாகிடும் புவியே மலர்க! ஸ்ரீஅன்னைக்காக ஆகிடுக.

405. தற்கால உலகுள்ள நிலையை சீர்படுத்த தலைகீழாக உணர்வினை மாற்றி உண்மையின், சத்தியத்தின், பரமனின், சித்தத்தின் அடிப்படையில் அமைத்திடவே, ஸ்ரீஅரவிந்தர் அதிமன இறக்கத்திற்காக உழைத்தார். ஸ்ரீஅன்னையால் மட்டுமே அவனியை அதிஉலகாக்கிட முடியும் என்பதால் முதலும், முடிவும் ஸ்ரீஅன்னையே தெய்வம் என உலகிற்கு உணர்த்தினார். ஏற்பவை அமர ஆன்மாவாம். பிற பரிணமிக்க வேண்டியவையே!

406. ஸ்ரீஅன்னைக்காக பரிணமிக்கும் இருக்கைகளின் வாழ்வு இனிமையே, சைத்திய உணர்வு பரிணமிப்பே சச்சிதானந்தத்தை உணரவல்லது. தோல்வியால் துவழா வாழ்வும், அதிமன இறக்கமும் ஸ்ரீஅன்னையின் சைத்திய இருக்கையும் ஒரு ஜீவனின் மன, பிராண, உடலினை திருஉருமாற்றத்திற்கு உள்ளாக்கிடும் உன்னதமன்றோ.

407. ஒரு புள்ளியேனும் இருளில்லா இன்நிலை, இனிய அன்னையால் நமக்கு ஏற்பட்ட நன்நிலை, இறை நிலை இறவா இருக்கையாம்.

408. ஸ்ரீஅன்னையால் அடையும் அதிமன உணர்வு எல்லையில்லா ஒன்றிலேயே வாழ்ந்து, தனது இருக்கையில் ஸ்திர தனித்துவமாகி பிரபஞ்சத்திற்கே மையமாகி திருஉருமாற்றப் பணியாற்றுகிறதாம். எல்லாம் ஸ்ரீஅன்னையுள் லயித்ததின் விளைவேயாம்.

409. அக சுதந்திர ஸ்ரீஅன்னையின் சாதகர்கள், எல்லா தர்மங்களும், விதிகளும், அந்தஸ்துகளும் விடுபட்டு உண்மை இருக்கையில் அதிமன பாதுகாப்பில், ஞானத்தில் ஸ்ரீஅரவிந்தரின் அதிமனித சமுதாய அமைப்பாகி தொண்டாற்றுகிறார்களாம்.ததாஸ்து.

410. ஸ்ரீஅன்னையின் சாதகர்கள் இறைசித்தத்தை ஈடேற்றுபவர்கள். அமைதியான மனதோடும், அசையா தைரியத்தோடும், தெய்வ சக்தியை சார்ந்தும் வாழ்வு சோதனைகளை எதிர்கொள்வர். தன் ஞானமும், தரணி ஞானமும், அறியாமையற்றவரும், அதிமன வெளிப்பாட்டினை, சச்சிதானந்தத்தை கிரகிப்பவருமாக திகழ்கிறார்கள்.

411. ஓ ஸ்ரீஅன்னையே புவியை சொர்க்கத்தை தூய்மையாக்குபவளே, நித்தியனை காண நேர்மன பார்வையை தமது சாதகர்களுக்கு அருளியவளே! வாடிய மரமாகிடும் இவ்வுடலினுள் வாழும் தெய்வத்தை உருவாக்குபவளே! உண்மை, அழிவின்மையை உடையவரின் செயலால் இறைமையாக்குகிறவளே! அதிக உணர்வினை ஊட்டி உயர்ந்த வாழ்வளிப்பவளே! ஒழுங்கான உணர்வை, ஆன்மீக இருக்கையை அதிமனத்திற்கு ஆர்வமுற பரிணமிக்கும் இயற்கையுடன் நெருங்க வைப்பவளே இனிஎமக்கு சதாசர்வ காலமும் உமது உணர்வேயாம்.

412. அகப்புறம் ஆன்ம வலிவுற உடல், மன, பிராண ஜீவன்களை பிதுப்பிக்கும் ஸ்ரீஅன்னையே! அகவெளிப்பாட்டில்லா புறத்திற்கு ஏது மதிப்பு? தனி, கூட்டு வாழ்வாகினும் அதிமனமின்றி முழுமையுறா. ஒருமுனைப்பட்டு ஸ்ரீஅன்னைக்கு தன்னையே அர்ப்பணிப்பதே நேரிடை யோகமாம். பிறயாகம், குமபாபிஷேகம் இத்தன்மைவாய்ந்ததா? என்பது அனுபவத்தால் அறிந்து தெளியலாம். வார்த்தையாலோ, எழுத்தாலோ எட்டாதாம். ஓம் ஸ்ரீஅரவிந்தமிராய நமஹ!

413. ஸ்ரீஅன்னையின்வழிகாட்டுதல் பூரணமாக சாதகன் தன்னை தூய்மையிருத்தாவிடில், மனக்கற்பனை, தெய்வங்கள், இரத்தகாட்டேரிகள், குறை தெய்வங்கள், பிராண பேய்கள் அசுரர்கள், சூட்சுமத்தில் சூழ்ந்து கொள்வர். ஸ்ரீஅன்னையை நாடுவது உண்மை இறைவனின் அடிப்படையில் அவசியம் அமைவது நலமாம்.

414. எல்லையில்லா காலங்கடந்த உணர்வினை ஊட்டி ஆன்மீக ஒருமையை அருளி எல்லா இருக்கையில் தானும் தன் இருக்கையில் எல்லாமும் ஆக்கி ஆள்பவனே! ஞானத்தால் வலிமையும், சங்கற்பத்தால் உணர்வான வலிமையும், உணர்வான செயலால் ஜீவசக்தியையும் அருளி சாதகர்களின் அந்தராத்மாவை அதிமன கருவியாகிட தேவையான சக்தி, புத்துணர்வு, சூட்சும, தூல, அவசேதனம் அனைத்தும் பரந்து பரிணமித்து மிளிரச் செய்து பிரபஞ்சம் கடந்து தனித்துவத்துள் தனதுள் வளர்ப்பவனே! உமக்கே சரணம் அம்மா! உமது வெண்ணொளி வானிற்கும் புவிக்கும் ஒரு தூணைப்போல நிற்கிறதன்றோ!

415. புதிய ஞானம் நேர்மன உணர்விலிருந்து உடனடி செயலாக்குவிக்கும் சைத்திய அன்னையே! எட்டா நிலைகளை எளிதில் கிட்ட அருளி அதிமன இருக்கையுடன் உமது குழந்தைகளை தொடர்புறச்செய்பவளே! ஜீவனைபிற மன உடல் தூலத்துடனிசைவாக்கி நேரிடை காட்சியளித்து, அதிமன வாழ்விற்கு ஆதாரமாக திகழும் எம் ஸ்ரீஅன்னையே உம்முள் உறைய உலகே உம்மை நினைந்து உருகுகிறது. ஏற்று உமது உலகினுள் ஏற்றி சுடரொளி வீசச்செய்திடும் ஸ்ரீஅரவிந்தமிராவே! உமக்கே சகலமும் சரணம்! எம் ஜீவனும் அதன் கூறுகளும், ஒவ்வொரு அணுவும், உமக்கே அர்ப்பணம்.

416. சூட்சும அனுபவங்களால் அக நிலைகளை அடையாளங்காட்டிய ஸ்ரீஅன்னையே! மீண்டும் அககதவுகளை திறந்து விட்டு வழி நடத்துகிறவளே! அகநிலைகளை அறிய அந்தராத்ம வளர்ச்சியே உயர்உணர்விலாதவருடனல்ல. உன்னத அன்னை உள்ளிருந்து நம்மை உணர்வால் உயர்த்துவதாலே உதவாப்பேச்சு நச்சாம்.

417. ஸ்ரீஅன்னையின் கருணையால் விழிப்புற ஆன்மாவும், அநுபூதியான இருக்கையும், அகவிடுதலைக்குள்ளாகிறதாம். கூட்டு வெளிப்பாட்டிற்கு மன, பிராண, உடல் இருக்கைகள் இறைத்தன்மையாகி , பிரபஞ்சத்தில் தலைகீழ்மாற்றத்தால் தகுதி உயர்வுற உன்னதமாகி, புதிய ஆதாரமாகிட ஸ்ரீஅன்னையின் ஆதிக்கத்திற்குள்ளாகி உணர்வாகிட தளரா ஆர்வமுறுதல் அவசியமாம்.

418. ஸ்ரீஅன்னை சாதகர்களின், அக உடலிலும் வரும் ஞானத்தை, தனது விடுபட்ட இருக்கை, ஜீவனின் தெய்வ வழிபாடு எல்லாம் மென்மேலும் பரிணமித்து அதி இயற்கையாக பிரகாசிக்க அருளுகிறார். நமது சிறு ஆத்ம அர்ப்பணிப்பிற்கு ஸ்ரீஅன்னையின் கொடை ஈடாமோ?

419. வாழ்வும் அதன்செயலும் ஸ்ரீஅன்னையுடையதாகிட உணர்வுற்ற ஜீவன்கள் சைத்திய, அதிமன வெளிப்பாட்டின் கருவிகளன்றோ! எங்கு முழு நம்பிக்கையும், நிவேதனமும், ஸ்ரீஅன்னையின் சக்தியையும் ஏற்கிற திறனும் நிகழ்கிறதோ அங்கு ஆன்ம வெளிப்பாடு தெளிவாம். ஸ்ரீஅரவிந்தயோகமாம்.

420. அகந்தையற்ற ஆனந்தத்தொண்டு ஸ்ரீஅன்னைக்குரியது. அவள் மட்டுமே என்றானவருக்கு பிறதொண்டு சரணமாக, அகத்திறவு, தூய்மை, பூரணஅமைதி, ஆர்வம், பொறுமை, நேர்மை, வலுவான ஒருமுனைப்பு, அசையறு நிலை, இசைவு, இவற்றால் ஸ்ரீஅன்னையின் வலிமை செயலாற்ற அனுமதித்து ஸ்ரீஅரவிந்த யோகத்தை பயிலுவோம்.

421. தெய்வத் தன்மையை வளர்க. தெய்வத்தை தெய்வீகத்திற்காக நாடு தெய்வீகமாகிடு, ஸ்ரீஅன்னையின் குழந்தைக்கு எளிதாம்.

422. ஓ! ஆன்மாக்களே புவியை பரிணமித்து சைத்திய உலகாக்கிடும், ஸ்ரீஅன்னைக்கு தொண்டாற்றும் அந்தராத்மாவாக அதிமன சித்திக்குள்ளாகிட உதவிடுக.

423. ஆன்ம, அந்தராத்ம அருளால், ஜீவன் பரிணமித்து முழுமையான ஞானத்தால், உணர்வால் வலுவான ஆன்ம முனனேற்றத்தால் மறு, புதுப்பிறப்பெடுத்த சாதகருள் அவனியே ஸ்ரீஅன்னையின் ஆன்மீக தளமாகிடும்.

424. திரைகள் நீங்கிய ஜீவனைத் தாங்கும் ஆன்மாக்களால் சொர்க்கமே புவியுள் நிலைத்த ஸ்ரீஅன்னைக்கு தொண்டாற்றி சைத்திய இருக்கையால் தொடர்ந்து அருளாசி பெற்றிடும் சாதகர்களே அவனிக்குகந்தவர்கள்.

425. தூல உடலெடுக்கும் போதே சைத்திய ஆதிக்கத்திற்குள்ளான ஜீவன்களே, இனி நீங்கள் செய்வது, சிந்திப்பது, அனைத்தும் ஸ்ரீஅன்னையின் தொண்டன்றோ.

426. சைத்திய உடலாக பரிணமித்த ஸ்ரீஅன்னையின் குழந்தைகளே கருவிகளே, சீடர்களே, உமது தொண்டின் உயர்வால் ஸ்ரீஅன்னையின் மீதான பக்தியால், ஆர்வத்தால், அன்பால், சரணத்தால், உணர்வால், ஐக்கியத்தால், நெருக்கத்தால் உமது சூட்சும ஏழு அதிமன சூரியனை நிலை நிறுத்தி உமக்கு அதிமன உண்மை, ஒளி, செயலாற்றல், வாக்கு, அன்பு, அழகு, அருளாசி, சக்தி, சேகார சக்தி, வடிவமைக்கும் சக்தி, போன்றவைகளை அதிமன அன்னையே அருளி உய்விப்பதை நாம் எவ்வாறு புகழ்வதோ? துதிப்பதோ? பூஜிப்பதோ? புவியின் பூரணமே! உமக்குச் சரணம்.

427. யுக யுகமாக, பொறுமையுடன் பிரபஞ்ச ஆடலை அதனதன் தன்மையில், வழி நடத்தும் ஸ்ரீஅன்னையே எம்மையும் உமது பொறுமையால் நிரப்பி மைய உண்மையுமான இசைவின் படி அருள்வீர்களாக. பொன்னுலகில் வாழ பொறுமை அவசியமே.

428. மூவித சமாதி நிலையில் ஏற்படும் சித்தியும் முழுமையான மோனத்தால் பூரணத்துவம் எய்த இப்புவியில் ஸ்ரீஅன்னையின் சித்தத்திற்கு அமைதி,

இசைவு, அருள் சூழலை, உருவாக்கும் உன்னத இருக்கையாக ஈசத்துவம் ஸ்ரீஅன்னைத் தொண்டால் நிறைவுறுகிறது.

429. உண்மையை உண்மைக்காக உண்மையில் உரிய தருணத்தில், உரிய இடத்தில், ஸ்தாபிக்க பொய்யிடம் மெய்மையாகிடும் திடம் வேண்டும். ஜடாயு உயிரை உண்மை கூற வஞ்சப் பொய் அழித்தது, அஸ்வத்தாம வஞ்ச, தந்திர, மாய உண்மையால் பொய் அழிந்தது. ஆனால் ஜடாயு பொய்யோ, உண்மையோ ஸ்ரீஅன்னையின் வாக்குப்படி கூறாமலிருந்திருந்தால் எதிரியால் அழியாதிருந்திருக்கலாம். ஸ்ரீஅன்னை விளையாட்டிற்கும் பொய் கூடாது என்கிறார். உண்மை கூறினால் தீமையெனில் பேசாமலிருக்கலாம். வள்ளுவரின் நன்மைபயக்கும் பொய்யும் கூட தேவையற்றதே. தெளிவாக்கும் ஸ்ரீஅன்னைக்கு சரணம். உண்மை பொய்யால் காக்க முடியாது. ஆனால் உண்மையால் பொய்யை உண்மையாக திருத்திட இயலும்.

430. ஞான திருஷ்டியில் காண்பது, கணிப்பது, செயல்படுவது சரியானதே. ஆயினும் அந்த நிறைவான திருஷ்டியாலும் அறியப்படாத இன்னும் உயர்வான, பாதுகாப்பான, இசைவான வெளிப்பாட்டிற்கே அவதாரங்கள் அவனியில் பிறக்கிறார்கள் ஆயினும் எளிமையுடனிருக்கிறார்கள். ஸ்ரீஅன்னையின் சைத்திய வளர்ச்சிக்கு உதவுகிறார்கள்.

431. மேலிருந்து இறங்கும், வெளிப்படும் உயர் உலகங்களை, உணர்வுகளை, சக்திகளை, ஒளிகளை ஸ்ரீஅன்னையின் தியானக் கூடங்கள் ஏற்க, கிரகிக்க, உலகு உய்ய அவளின் குழந்தைகளாகிய நாம் உழைத்து உறுதிப்படுவோமாக.

432. தனது இதயத் துடிப்பினை ஸ்ரீஅன்னையின் உணர்வுக்கு நிவேதித்த பக்தனை ஸ்ரீஅன்னையே கூர்ந்து, ஈர்த்து பரவசமூட்டி, பெருமைக்குரிய, மதிக்கத்தக்க நிறைவினை அருளி தொண்டின்பத்தால் தொடர அருளும் ஸ்ரீஅன்னைக்கு என்றென்றும் கடமை படுகிறார்.

433. அக உலக அனுபவங்களை ஸ்ரீஅன்னையின் அக வளர்ச்சியுடைய அன்பர்கள் அறிவர். புற செய்கையில் உணர்வு வளர்ந்திட அக அர்ப்பணிப்பு ஸ்ரீஅன்னையிடம் நெருங்க வைக்கும்.

434. தன்னை விட அதிக தொண்டாற்றிடும் அன்பருக்கு தனக்கு கிடைக்கும் ஸ்ரீஅன்னையின் தரிசனத்தை அது கிட்டாத ஏக்கத்தோடு, தவிக்கும் நிலையில் உள்ள அவருக்கு அன்பர் உதவ, அவர் காலத்தில் கடமையாற்றிட் உதவி மேலும் உயர்வுக்குள்ளாகிறார். ஸ்ரீஅன்னை தூல பிரசன்னமாக இவ்வித தியாக சாதகருக்கு காட்சியருளி சாட்சியாகிறாள்.

435. இறைவன் எல்லோருக்கும் நன்மையே செய்கிறார். ஒருவன் எவ்வளவு தாழ்ந்தாலும், உணர்வால், அறிவால், நேர்மையால், நாணயத்தால், ஒழுக்கத்தால், மீண்டும், மீண்டும் தளராது முன்னேற உதவுகிறார். வாழ வாய்ப்பளிக்கிறார். மீண்டும் வீழ்ந்தால் என் செய்வது? அவ்விடத்தே ஸ்ரீஅன்னையின் அருள் மீண்டும் உயிர்பித்து புது மாந்தனாக புதிய வாய்ப்பை உருவாக்குகிறார். அதன் பின்பும் தன்னை தூய்மைபடுத்தி, முன்னேறும் ஆர்வம் இல்லாதவர்களை நாம் என்னென்பது? ஆயினும் ஸ்ரீஅன்னை கைவிடுவதே இல்லை, மீண்டும் வாய்ப்பளித்து *அரவணைக்கிறார். என்னே அவளின் கருணை, மகிமை.*

436. ஸ்ரீஅன்னைக்கு அர்ப்பணி, அர்ப்பணி அனைத்தையும் அர்ப்பணி. சகலத்தையும் அர்ப்பணி. நல்லதை, கெட்டதை, லாபத்தை, நஷ்டத்தை, இன்பத்தை, துன்பத்தை, நேரானதை, முரணானதை, இருளை, ஒளியை, இருநிலைகள் கடந்ததை, ஒன்றானதை, பிரிக்க முடியாததை, ஒருமையை, முக்காலத்தை, தேசத்தை, உலகை, உருவாகும் உணர்வை, ஓம் நமச்சிவாயத்தை, சிவாய நாமத்தை, ஓம் நமோ பகவதே விஷ்ணுவத்தை, பிரகிருதியை, பரத்தை, பஞ்பூதத்தை, உருவ, அருவத்தை, அதற்கப்பாலுள்ளதை, பிரபஞ்சத்தை, அக, புறத்தை, ஆற்றலை, அமைதி, ஆனந்த, அமரத்துவத்தை, அர்ப்பணி, அர்ப்பணி. இனிய அன்னைக்கே அர்ப்பணி, அவளின் குழந்தையாவதால் பெரும்பயனை, பலனை விளக்க இயலுமோ?

437. அருள், மகிமை, அற்புதம், நம்முள் செயல்படுவது எல்லாம் நம்பிக்கையைப் பொறுத்தது. எல்லா தெய்வங்களிடமும், யோகி, ஞானி,சுவாமி, சன்னியாசிகளிடமும், கடவுள் நம்பிக்கையற்றவர்களிடமும் கைக்கூடும். அந்த அடிப்படையில் மட்டும் ஸ்ரீஅன்னையை நாடுவதை விட அவளின்

இலட்சியத்திற்காக, அவளின் சித்தத்திற்காக, தொண்டிற்காக நாம் முனைவோமாக. நம் சொந்த பிரச்சனைகளைத் தீர்க்க நம்முள்ளே அவளை செயல்பட அனுமதியுங்கள். தேவை பூர்த்திக்காக ஆரம்பித்தாலும், ஆன்மீக வாழ்வமைக்க வளருங்கள். வளமான வாழ்வாங்கு வாழ்வாங்கு வாழ வையகத்தில் அவளுக்காக வாழ்வதே சுதந்தரம். மற்றவை உபத்திரம்.

438. ஓமனித மனமே! மனிதனுள் உள்ள சைத்திய புருஷனை(அந்தராத்மாவை) ஸ்ரீஅன்னையை வெளிவர, முன்னுக்குவர உதவியாகிடுய அங்கிருந்து இயங்கு. இறைமையாகிடு. இறவாமை எழட்டும், அதிமனம் வெளிப்படட்டும், அல்லலுறும் அகிலம் ஸ்ரீஅன்னையால் அமைதி?உறும் அகங்கார அவனி அருளாட்சிக்குள்ளாகிடும்.

439. உடல், மன, பிராண உலகமே ஸ்ரீஅன்னையால் தூய்மையடைவீர். துயர், துன்பம், துடைக்க துணிவுறுங்கள். கௌரவம், வெறி, அரக்க செய்கை, அகல ஸ்ரீஅன்னையிடம் சரணடைவோம். சாந்தி நிலவ சாநித்தியம் வளர ஆர்வமுறுவோம்.

440. புரியாத அறிவே! குழம்பிய நெஞ்சே! பயந்த பலவீனமே! நொந்த நோயே! திகையாதீர். திக்கின்றி திக்கு முக்காடாதீர். தீவிர ஸ்ரீஅன்னை பக்தி ஒன்றே உம்மை உய்விக்கும்.

441. ஓ உயர்ந்த உண்மையே! புவிக்கு உதவ சொல்லாய், எழுத்தாய், செழுமையாய், உணர்வாய், உற்சாகமாய், மகிழ்வாய், யோகமாய், தவமாய், தயவாய், தியாகமாய், திருவாய், வேதமாய், உபநிடதமாய், காவியமாய், கீதையாய், தத்துவமாய், சித்தாந்தமாய், பாகவதமாய், புராணபாடலாய், பொருளாய், அறிவாய், ஆற்றலாய், ஆனந்தமாய், உதவியாய், இன்னும் எண்ணற்ற வழிகளில் நன்மையாய் அமைந்தாலும் நிறைவிலா குறைவுக்குள்ளாகிறார். ஓ உண்மையே நீயும் உனது எண்ணற்றவைகளும் ஸ்ரீஅன்னையின் சைத்திய இருக்கையின் வாயிலாக வெளிவரும் போதே முழுமை, நிறைவு, ஒருங்கிணைந்து அழியா, அமர, அதிமன உண்மையாக நீயே பரிணமித்து, ஒளியாகி பெருமைக்கு, பெருமிதத்திற்கு, பெருமதிப்புக்கு உள்ளாகிறாய் அன்றோ. ஆர்வமுறுக ஸ்ரீஅன்னையின் அனைத்துமாகுக.

442. புருஷனுக்குட்பட்டா பிரகிருதி இயக்கம் இன்னலுக்குள்ளாகிறது. தான் உட்படவில்லையே என உணர்ந்து ஸ்ரீஅன்னையிடம் நிவேதித்தால் புருஷனுக்குள்ளாகி புனித செயலாற்றுகிறது. இழப்பின்றி எல்லாமே இனிதாகிறது.

443. ஸ்ரீஅன்னை ஊடுருவும் ஒவ்வொரு உலகினுள்ளும் அதனதன் உண்மையே உயரியதாய் பரிணமிக்கிறது. பிரிவானவை ஒருங்கிணைக்கப்படுகிறது. அனைத்துமே அதிமன சமுதாயத்திற்காக தயாராகிறது.

444. அர்ப்பணம் தூய்மையானதாகில் அந்தராத்மாவை சார்ந்தது. ஸ்ரீஅன்னைக்கே உரியது, ஸ்ரீஅன்னையின் இலட்சியத்தில் தொண்டாற்றி ஸ்ரீஅரவிந்தரின் அதிமன சக்தியை வெளிப்படச் செய்வது, உன்னதமானது, உயர்ந்தது, புனிதமானது.

445. ஓ! ஸ்ரீஅரவிந்த சாவித்திரியே! இருளகற்றி இருமையை இணைப்பு பாலமாய் ஒன்றாக்கி ஒளியுறுத்தி உலகை, உயர் லோகத்தை அதிஒளியாக்கி அதிமன உலகை, உயர் லோகத்தை அதிமன உலகமைக்கும் இனிய அன்னையே உமக்கு அர்ப்பணம், சரணம் செய்து தியானிக்கிறோம். இனி எம் வாழ்வு உம் வாழ்வேயாம்.

446. ஸ்ரீஅன்னையின் சாதகருக்கு உண்டான இடர்கள் தீர உதவுபவரின் பக்தி பணிவிடையால் களைப்பு, அசதி, உடல் நலக்குறைவு நீங்குகிறது. ஸ்ரீஅன்னையின் அருளாசி அவர்களுக்கு கிட்டுகிறது. தொண்டர்க்கு தொண்டாற்றுவ தும் பெரும் தொண்டே. ஆனால், உண்மை சாதகரை, தொண்டரை இருபாலரும் தேடுங்கள். வாய்ப்பது மிக அரிதே. தெளிக.

447. தூலத்தில் சரிசெய்யாததை ஞானத்தில் இசைவுபடுத்தி விடலாம். ஆனால் அது ஸ்ரீஅன்னையின் சைத்திய சக்தியாலேயே அனுபவமாகி சமாதானம், சீர்நிலை, ஒற்றுமை நன்மை சமுதாயக்கட்டுபாடு, அமைதி,மக்களின் உயர்வு நிலை, எல்லாம் ஏற்படுகிறது. எல்லா இன நாடும் இசைவுக்குள்ளாகிறது. அதனதன் தர்மம் பாதிப்பின்றி திருஉரு நோக்கும் பார்வை கிட்டுகிறது. இறைவன் வெளிப்பட ஏதுவாகிறது. உண்மை சுதந்திரமே நிரந்தரம். சத்திய உணர்வுக்குள்ளாகி பரிணமிக்கிறது.

448. எல்லாவற்றிற்கும் நல்லதையே செய்யும் இறைவன் தனது இறையன்பையே உண்மைக்கேற்ப பொழிகிறார். அகங்காரமோ அதனதன் நன்மை தீமைக்கேற்ப தானே தனக்கு வேண்டிய தகுதியை தேர்ந்தெடுப்பதால் இறைவனுக்கு எவ்வித பிரச்சினையும் எளிதாகிறது. ஒரு வேளை அனைத்தும் பூரண சரணத்தால் இறைவன் அடுத்து தான் தனது அன்பிற்கு அடிமையானவருக்கு அடிமையாகிடும் நிலை உருவாகிடுமோ? தான் வேறு இறைவன் வேறு எனும் நிலை அகன்றிடில் என் செய்வதோ? இனிய அன்னையின் புதிய படைப்பும், ஸ்ரீஅரவிந்தரின் அதிமன சமுதாயமும் உருவெடுக்கப்படலாம் அல்லவா? ததாஸ்து.

449. புற உலகால் அறியப்படாததை சூட்சும உலகறிகிறது. சூட்சுமமே அறியாத சூட்சுமத்தை ஸ்ரீஅன்னையின் சைத்திய ஒளி அறிகிறது. ஞானம் பெறலாம், ஸ்ரீஅன்னையினுள் குழந்தையாகிட.

450. இறைவன் பக்தனுக்கு இறை சித்தப்படி இசைவாய், அருளப்படுவதை தனது திரிக்கப்பட்ட தூய்மையுரு ஞானத்தின் அறிவால் இறை ஞானமின்றி முழுமையாக ஏற்க இயலாதவனாகிறான். அது தவிர்க்க, தனது தவத்தை, தியானத்தை, தொண்டை, ஞான ஒளியை, வழிகாட்டுதலை,.... இன்னும் உள்ளதை ஸ்ரீஅன்னைக்கு நிவேதித்து, அர்ப்பணித்து, ஒப்புவித்து சரணாகதம் செய்து இறைசித்தத்தை ஏற்கும் வல்லமை பெறும் சாதகனால் உலகு உய்விக்கும்.

451. சாதுவோ, சந்நியாசியோ, துறவியோ, ஆன்மீகவாதியோ, யோகியோ, ரிசியோ, தபசியோ, தான் ஒரு ஆன்மீக ஸ்தாபனத்தின் நிர்வாக பொறுப்புடையோறாகில், எங்கிருந்தோ வரும் மேற்கூரியவர்கள் எந்த இயக்கத்தவராகிலும் வந்தால் ஆன்ம உபசரிப்பு தனது இயக்க பாதிப்பின்றியும், தனது சொந்த கவனிப்பாலும் வாய்ப்பிருந்தால் உணவு, உணர்வு, ஓய்விடம் தந்து உதவலாம். உண்மை ஞானியே உண்மை ஞானியை அறிந்து செயல்படுவார். இவர்களின் அதி அகங்காரத்தை உணர்ந்து திருத்த ஸ்ரீஅன்னை அந்நிகழ்ச்சியிலேயே நிறைய ஆன்மத் தெளிவு, தெம்பு, திருஉருப்பெறவும் இடத்தை, காலத்தை, கனலேறும் தெய்வ வழியோர்களை உயர்விக்கிறார். என்னே! அவரின் கருணை!

452. ஸ்ரீஅன்னையை அவரவர் இதயத்தின் ஆழத்துள் கண்டவர்களுக்கு அவளின் அன்பு, சக்தி, பிரசன்னம், நிறைவு,.... போன்றவைகள் பக்தர்களின் ஆர்வம், முன்னேற்றம், நம்பிக்கைக்கு ஏற்ப விஷ்வமாகிறது.

453. ஸ்ரீஅன்னை எல்லா பிரார்த்தனைகளுக்கும் பதிலளிக்கிறார். ஆயினும் அன்பர்களின் ஆர்வம், தீவிரம், விடாமுயற்சி, ஐக்கியம், ஒருநிலைப்படுதல், பலவீனங்களை திருத்துதல், சந்தேகமின்மை, அவசரமின்மை, அமைதி, திடம், பிரார்த்தனைக்குரிய நம்பிக்கை, கவனம், ஈர்ப்புசக்தி, பதட்ட, கலக்க, நடுக்கமின்மை, அசையாநிலை, அலையாமை, நிலைகுலையாமை, குன்றாய், குறியாய், கோபுரமாய், சங்கற்பித்து முழுமையாக ஈடேற்றிடுவோமாக!

454. பலத்தை தரும் மகேஸ்வரி அன்னையே! பாதுகாப்பளிக்கும் மகாகாளி அன்னையே! திடத்தையருளும் மகாலட்சுமி அன்னையே! இணக்கத்தை உருவாக்கும் மகா சரஸ்வதி அன்னையே! உங்களின் நான்கு அம்சமும் எம்முள் வளர முறையே தெற்கு, வடக்கு, கிழக்கு, மேற்கு திசை நோக்கி உமதருள் வேண்டி மண்டியிட்டு தாழ் வணங்கி இறைஞ்சுகிறோம். சைத்திய அதிதி அன்னையின் அம்சங்களே! பக்தர்களை உமது பணி செய்யும் தொண்டர்களாகிட உய்விப்பீர்களாக!

455. ஓ, மகேஸ்வரி தாயே! அகத்தில் சக்தி, உயிர், ஒளியாகிட பலம் அருளுகிறீர். புறத்தில் ஏற்புடைமை, ஆர்வம், விடாமுயற்சி உருவாக்கும் சைத்திய அன்னையே! உமது சைத்திய பலம் எம்முள் நிலைபெற உம்முள் ஒன்றுகிறோம்.

456. ஓ! மகாகாளி தாயே! அகத்தின் பேரானந்தம், உணர்வு, இருப்பாகிட பாதுகாத்தருள்கிறீர்! புறத்தில் நன்றி, பணிவு, நேர்மை உருவாக்கிடும் சைத்திய அன்னையே! உமது சைத்திய பாதுகாப்பு எம்முள் நிலைபெற உம்முள்ளாகிறோம்.

457. ஓ! மகாலெட்சுமி தாயே! அகத்தில் முன்னேற்றம், உபயோகம், செழுமையாகிட திடத்தை அருள்கிறீர். புறத்தில் நற்குணம், துணிவு முன்னேற்றம் உருவாக்கிடும் சைத்திய அன்னையே! உமது சைத்திய திடகாத்தம் எம்முள் நிலைபெற உமது மலர் பாதங்களில் தஞ்சமடைகிறோம்.

458. ஓ! மகாசரஸ்வதி தாயே, அகத்தில் பூரணத்துவம், நெகிழ்வு இளமையாகிட இணக்கம் அருள்கிறீர். புறத்தில் அமைதி, சமத்துவம், உதாரகுணம் உருவாக்கும் சைத்திய அன்னையே! உமது சைத்திய இணக்கத்திற்குள்ளாகி நிலைத்திட உமது பூரண ஞானத்துள்ளாகிறோம்.

459. பூமியில் பரிணமிக்கும் அனைத்தும் ஸ்ரீஅன்னையின் சைத்திய தன்மையாக வளர்கிறது. சைத்திய அன்னையின் அன்பினை ஈர்க்கும் அளவிற்கேற்ப அதிமன வெளிப்பாட்டிற்குள்ளாகிறது.

460. ஸ்ரீஅன்னையின் மீது பூரண, முழு நம்பிக்கையுடையோரின் கண்களில் முப்பத்து முக்கோடி தேவர்களும், ரிசிகளும், ஞானியர்களும், சந்நியாசி, பிரம்மச்சாரிகளும், முனிவர்களும், சித்தர்களும், அவதார புருஷரும், மாந்தர்கள், பிராணிகள் தாவரங்கள் ஆகிய அனைத்துள்ளும் சைத்திய அன்னையையே காண்பர், தரிசிப்பர். பஞ்ச பூதத்துள்ளும், உருவ, அருவ, இரண்டு மற்றதிலும் அவளின் நிலையை நிலையாக நிறுத்தியவர். நன்கு அறிந்து ஆன்ம அனுபவம் அடைவர்.

461. ஸ்ரீஅன்னை சைத்திய இருக்கையை தன்னுள் காண அகத்தில் ஏற்படும் எதிர்ப்பு, மாறானவை எதுவாகினும், இருளை, அசுர சக்திகளை மாற்றிடும் அருளை, தெய்வ சக்திகளை கிரகிக்க ஸ்ரீஅன்னையிடம் நிவேதித்து, அர்ப்பணித்து, ஆர்வத்தீயாகிட சைத்திய பிரார்த்தனை செய்வோமாக!

462. இன்றோ, நாளையோ, என்றோ நமது கஷ்டம் கரையும், இன்னல் இடறும், துன்பம் துவண்டு விழும், நம்முள் இருக்கையுள், ஜீவனுள் அந்தராத்மாவினுள் உள்ள ஸ்ரீஅன்னை நமக்கு உதவி முன்னேற நமது இச்சாசக்தி, திறமை, திடசங்கற்பம், கூடிய வழக்கமான அவளுக்குரிய தொண்டால் நம்மை உயர்த்தி விடுகிறாள். நமது சாதனை தியானத்தினால் அடையும் முன்னேற்றத்தை விட பன்மடங்கு ஸ்ரீஅன்னையின் தொண்டின்பத்தால் நல்வழிகாட்டுதல் உறுதியான, சரியானதாகி ஸ்ரீஅரவிந்தரின் அதிமன சக்தி வெளிப்பட மென்மேலும் உதவி மானிடமே அதிமனிதமாவதற்கு மிகச் சிறந்த யோக முறையை அருளிய ஸ்ரீஅரவிந்த அன்னைக்கு நன்றியறிதலுடன் எக்காலத்தும் இருந்து சாதிப்போமாக!

463. நமக்குத் தேவையான முன்னேற்றம் பற்றோடு வேண்டுவதல்ல பொறுமையின் சகிப்பு தன்மையுடைய விடா முயற்சியாலும் எல்லா நல்ல திறன் மிகு தொண்டாலும் ஏற்படும் ஸ்ரீஅன்னையின் மீதான பற்றற்ற ஆர்வத்தாலும் பிரார்த்தனையின்றியே நமக்குத் தேவையான முன்னேற்றத்தை ஸ்ரீஅன்னையவள் தானே முன் வந்து அருளுவதை அனுபவமாக்க கண்டுகளிப்புறுவோமாக! யார் ஒருவர் தனதுள் உள்ள சைத்திய அன்னையுடன் தொடர்ந்து, விடாது, உணர்வோடு, தன்னலமற்று, தனது புத்துயிர், உடல், மனம், செயல், புற தொடர்பினை புதுப்பொலிவோடு வரும் பொன்னருளை புத்துலகை புதுயுகத்தை ஸ்ரீஅரவிந்த அதிமன தொண்டாளறாகியதை தனது ஆன்மாவை, சைத்திய அதிமன இருக்கையும் ஸ்ரீஅன்னைக்கு அர்ப்பணித்து அதிமனிதனாக பரிணமிக்கிறார்!

464. சைத்திய அன்னையின் அன்பு, ஆதிக்கம் தனது பிறப்பின் உண்மையில் ஒளியானவருக்கு தனது உடலின் ஆயுட்காலம் முழுமைக்கும் இருளேது? தனது உயிருக்கு அழிவேது? தனது மனத்திற்கு தடையோ, தாமதமோ இனி ஏது? இனி அக வாழ்வே அவர்களின் புற, புனித வாழ்வாம்!

465. ஸ்ரீஅன்னையே நமது வாழ்வின் முழுமையான முதன்மையான பாதுகாப்பாம். மற்றவை இயலா பிளவு, குறைவுடையதாம். இனிய அன்னையே உம்மிடமிருந்து நமக்கு எது தேவையோ அதையே அருளி பாதுகாக்கிறீர்கள். நமது நேர்மை, நல்லெண்ணம், விசுவாச திறனால் தடைகளைத் தகர்த்து அருளைப் பெறுவோமாக!

466. நமது இறைவன் ஸ்ரீஅரவிந்தரே! நமது தாய்க்கு எல்லாம் மூலத்தாயே! இனிய அன்னையே! அகபுற உலக உணர்வு, ஒளி, வலிமை, அருள், அனைத்தும் முப்பத்து முக்கோடி தேவசக்திகளும், அனைத்து அவதாரங்களும், இதுவரை புவியில் தெய்வீகத் தன்மையாகிய மகான், பெரியோர், யோகி, ரிசி, பக்தர் தொண்டர்கள் அனைவருள்ளும் எம் இனிய அன்னையின் உருவே நம்முள் வதிகிறது. என்னே! அவளின் காட்சி, மாட்சி, சாட்சியாக உலவும் இந்த எளிய வாழ்வில் எத்துணை மகத்துவம் காணச்செய்யும் இனிய அன்னைக்கு நம் நன்றி எக்காலத்துமாம்!

467. தெய்வ அன்னையே! ஒவ்வொரு நாளும் எமக்கும், இப்புவி வாழ்மக்களுக்கும் விடாமுயற்சியுடன் முன்னேற விழைவோருக்கும் தங்களின் சைத்திய வழி காட்டுதலில் தானே வளர்வதைக் கண்டு வரும் மகிழ்வினையும், நன்றியையும், தங்களுக்கே அர்ப்பணிக்கிறோம்.

468. ஓ! உண்மையே நமது இனிய அன்னையின் சைத்திய சக்தியால் உமது வலிமையும் உணர்வும் அழிவனவற்றிலும் ஆதிக்கம் செலுத்தி அமரத்துவத்தை ஏற்படுத்துவதை அனுபவிக்கும் போது ஆனந்தம் பொங்குகிறது. என்னே! உமது கருணை.

469. உண்பது உயிராகி பிராண வளர்ச்சிக்கு உழைப்பது உடலின் ஆரோக்கியத்திற்கு. எதையும் அறிய கற்பது அறிவு வளர்ச்சிக்கு. ஆன்மாவில் லயிப்பது தெய்வீக வளர்ச்சிக்கு. அனைத்துள்ளும் ஸ்ரீஅன்னையை நினைப்பது சைத்திய வளர்ச்சிக்கு, சைத்தியமே அனைத்திற்கும் பொதுவாக உண்மை, முழுமை நன்மை பயப்பது.

470. தன் தவறைத் திருத்தி, அறியாமை நீங்கி, தனதுண்மை உணர்த்துவதை செயல்படுத்தி தன்னுள்ளும் பிளவின்றி ஒன்றானால் எல்லாருள்ளும் ஒன்றுபடச் செய்வது எளிதாம். ஆனால் சைத்திய அன்னையை தன்னுள் நிரந்தரமாக நிலையாக்கியவர்களுக்கு மிக, மிக பல மடங்கு எளிதாம். கடினம் கனிந்து எளிதாகும் போதே ஸ்ரீஅன்னையின் அருள் செயல்பட துவங்கியது என்பதை சாதகர் அறிவர்.

471. ஸ்ரீஅன்னையின் பக்தர் தன்னடக்க சக்தியோடு அமைதியுற பழகி உண்மைத்தெளிவாக ஆக அனைத்தும் திரு உருமாற்றப் படுகிறது. என்னே! அவளின் மகிமை! உண்மை வலிமயை யுண்டாக்குகிறாள்.

472. ஸ்ரீஅன்னையின் அன்பால் அனைத்து உதவியும் கிட்ட உனது இதயம், மனம் சைத்திய அமைதியை பெறட்டும். சந்தேகமற்ற முழு நம்பிக்கையில் அவரின் வழி பற்றியவருக்கு அருளை தடை, தாமதமின்றி அருளுகிறார்!

473. அமர அன்னையே! இப்புவிவாழ் மாந்தர்கள் பிறப்பதும், இறப்பதும் மாறி, மாறி நிகழ்வதில் உழலும் நிலை நீங்கி அமர அழியா, பிறப்பு, இறப்பற்ற,

தூலத்தை, சூட்சுமத்தை உணர்வாக்கிடும் மகத்துவம் உடையவரே! உம்மைத் துதிக்கிறோம்.

474. எம் அன்னையே! அழிகின்ற உலக உடலில் ஊறும் அழியா உணர்வு சக்திகளை தாங்கள் உயர்த்துவதால் உலகு உய்வடைய விழிப்புற்று பரிணமிப்பது கண்டு மானிட சமுதாயமே மகிழ்கிறது. மாளா மகத்துவம் பெறுகிறது.

475. அகங்கார தேவைகள் ஈடேறா நிலையில் தடுமாறும் நெஞ்சு! நெகிழ்ந்து இனிய அன்னையின் அன்பில் மூழ்கி, ஆன்மீகப் பாதையைக் கண்டு, அகலும் அர்த்தமற்ற அகங்கார அல்லலுறும் (desire soul) ஆன்மாவினுள் ஒளியூடுருவி அருளால் ஆன்மிக விழிப்புற்று விதிகடந்த ஸ்ரீஅன்னையே கதியாகி தன்னிலையடைகிறது.

476. ஓ மகிழ்வின் பாத்திரமே! அறிவின் சுடரே! வலுவின் நம்பிக்கையே! தெளிவின் அமைதியே! ஆனந்தக் களிப்பே! சக்திய குரலே! அன்பின் கருணையே! சைத்திய அன்னையால் பரிணமிக்கும் உம்மைப் போல் இன்னும் எண்ணற்றவைகளை வருணிக்க இயலுமோ? இவ்வையகத்தில்.

477. ஓ! நாவே அந்தராத்ம அன்னையின் ஆணைக்கு மட்டும் சொற்களை பயன்படுத்தப். பழகு உனது இருக்கை இப்புவியுடல் கொண்டதை புனிதப்படுத்தி தெய்வ வாழ்வமைக்க உதவிடுக.

478. அச்சம் அகல தளர்வு அகலட்டும். சந்தேகம் அற நம்பிக்கை வலுப்பெறட்டும் எவ்வுயிரும் சீர் பெற ஸ்ரீஅன்னையின் அருளாசி பொழிய உலகு ஆர்வமுரட்டும்.

479. ஸ்ரீஅரவிந்த அன்னைக்கு ஜீவனை, ஆத்மனை, உடலை, மனதை, உயிரை, அடிமனதை, உள் இயல்பை, அவேசதனத்தை நிவேதித்து, அர்பணித்து, அவரை நினைவு கூறி ஐக்கியமாகி சைத்திய மாற்றம் முழுமை பெற முன்னேறுவோமாக!

480. சொல்லினாலும் கட்டுப்படா முரணான சக்திகளே! பலவீனங்களே! தீமைகளே! உமது செயலால் எத்தனை உண்மைவாதிகள் பலியாகி விரக்திக்குள்ளாகிறார்கள். ஆகவே நம் சைத்திய அன்னை No words

acts (நிறைய அர்த்தங்களையுடையது) சொல் கடந்த தெய்வச் செயலே சகலத்தையும் இசைவித்து, தூய்மைப்படுத்தி, ஸ்ரீஅரவிந்தரின் அதிமன வெளிப்பாட்டிற்குள்ளாகிடுமாம்.

481. ஸ்ரீஅன்னையின் கூட்டுத் தொண்டிற்கு சமயத்தில் நிறைய பக்தர்கள் பங்கேற்று உதவிடுவர். அதற்கும் இடனளிக்கும் ஞானம் விரிவாக்கம் கட்டுப்பாடு, மட்டுப்படுத்துதல், அதிக வாய்ப்பளித்தல் போன்ற திறன் மிக்க சாதகர், சமயத்தில் யாருமே, பங்கேற்கா பக்தர்கள் சூழ்நிலையால் உடலால் தொண்டாற்றத் தவறினாலும் அறுபடா தொடர் தொண்டினை மென்மேலும் விருத்தி செய்யும் சைத்திய செயல், பார்வை, யுக்தி, உத்வேகம் எல்லாம் ஒருங்கிணைந்து இறைவெற்றியடைவதே செயலாற்றல் மிகுத் தொண்டாம். ஆன்மீகசக்தி அதிசேதனமாக பரிணமிக்க ஸ்ரீஅன்னை பாதுகாப்பு, அருள், உதவி எல்லாம் உடலணுவில் ஒளியாய், உணர்வாய் ஊட்டி ஊக்குவிப்பதே பேரானந்தம் அன்றோ!

482. சில ஆற்றல்மிகு சாதகர்களை ஆற்று மணலிற்கு ஒப்பிடலாம். அது அள்ள, அள்ளக்குறையாது வெள்ளதால் வரும் மணலாலும் நிறையாது. காலங்கடந்த விஷ்வமானது. ஆராய்ந்தால் பயன்பாடு பலவிதம். நீரைப் போன்ற பக்தர்கள் மழைக் காலத்திலும், சிறிது கோடையிலும், தொண்டிற்கு வந்து போவோரை தாங்கும் வலிமை மிகு சாதகரே ஆன்மீக வளர்ச்சி தளமாவார்கள். ஸ்ரீஅன்னையின் யோக வாழ்விற்காக மட்டுமே நிலைத்து இயங்குபவர்கள். இறையாண்மையுடைவர்கள்!

483. சைத்திய ஒளியாகிய உயரிய வலுவான ஆற்றல் மிகு பிராணனே நீ எதாலும் பாதிக்கா மூலத்துள் ஒன்றானாய். எல்லா தர்ம விதி கடந்தாய் பிசகிலா பிரசன்னத்தை ஸ்ரீஅன்னையை தனது இருக்கையுள் இறக்கியதால் இன்னலற்ற இறவா தொடர்வாய் வந்துள்ளாய். இனியும், முக்காலத்தும் முடிவின்றி தொடர்வாய். உடலான மேனகையோ, உயிரான ஊர்வசியோ அடையா, சைத்திய மனப்பிராணனான ரம்பையாய், சைத்திய அழகு ஆன்மாவாகி, பேராபத்தினை கடந்த, பேரானந்த கனலானாய்யன்றோ! உனது ஆன்ம முன்னேற்றம், பிரம்மச்சரிய சாதகரையும் விஞ்சியதன்றோ! வஞ்சிக்கும் சக்திகளைக் கடந்த வைர ஒளியான ஸ்ரீ அன்னையின் கதிரே

உனது விவேகத்தால் வீறு கொண்டாய், துணிவால் சைத்திய தூய்மையானாய், இசைவால் இன்னலுற்ற இருமை கடந்தாய். ஒருமையான உன்னை ஒதுக்கிடும் உணர்வுண்டோ? கூட்டு சைத்திய பரிணமிப்பிற்காக தவிக்கும் தனித்துவத்திற்கு தாயானதை அறியும் அதி சைத்திய இருக்கையே வெளிப்படுக.

484. அருகம் பூவாய் பணிவு தாழ்மையுடைய சாதகரே கடலுக்கும் கீழ் ஆழத்தில் படுபாதாள கடையவனானதால் பொழியும் அருள்மழை முடிவில் உம்மிடமே நிலைப்பதை யுணர்ந்தவரே. திருஉருப்பெற உண்மையாய் ஸ்ரீஅன்னைக்காக பரிணமிக்கும் மேல் நோக்கி உயரும் சைத்தியமே உலகிலேயே மிக உயர்ந்த எவரெஸ்ட் சிகரமாகி உலகிற்காக உருகுவாயன்றோ. என்னே உனது பணிவு, அடக்கம், எளிமை, தாழ்மை, கடலுக்குக் கீழும், உயரிய மலைக்கு மேலும் ஏகிய சாதகரே உமது உண்மை முன்னேற்றம் இடைப்பட்ட அகங்கார உணர்வு தன்னை தானேயாக்க உதவட்டும்.

485. ஆன்மாவை சுற்றியிருந்து பரிணமிக்க உதவிடும் அந்தராத்மாவே உம்மைப் போற்றித் துதிக்கிறோம். ஏனெனில், ஆன்மாவை ஸ்ரீ அன்னையின் ஆதிக்கத்திற்குள்ளாக்கி மேலிருந்து வரும் ஜீவர்களையும் பரிணமிக்கச் செய்து இப்புவிக்கு உதவிட பிற கலப்பு உணர்வு, ஒளி, சக்திகளை ஸ்ரீஅன்னையின் அமைப்பாக்குவது நீயன்றோ!

486. பிறந்ததிலிருந்து இதுவரை நிகழ்ந்தவைகளை ஸ்ரீஅன்னைக்கு ஒப்புவித்து, நிவேதித்து, சரணடைந்துள்ளோமா? ஸ்ரீ அன்னையின் உணர்வாய் திகழ்கிறோமா? தீயவை, உறிஞ்சுபவை ஆன்மிக மாக்கப்பட்டதா? நிரந்தர ஸ்ரீஅன்னையின் பிரசன்னம், அனுபவம் முன்னேற்றம் ஏற்படுகிறதா? எல்லாம் ஸ்ரீஅன்னையால் கிடைக்கிறது என நிறைவோ, திருப்தியோ அடையா ஆன்மாவே! அந்தராத்ம அன்னையுள் நித்தியமாகி அவரின் எதிர்கால வெளிப்பாட்டிற்கு உதவிடும் கருவியாகும். புகழ் விரும்பியோ, சுய தேவை திருப்தியோ, பிற சக்திக்கு தூதுவனோ, இருளான, பலவீனமாய அறியாமை ஆன்மாவோ அல்ல. அது ஸ்ரீ அன்னையின் செயல்திறன் மிக்க ஒளிர் வெள்ளை ஒளியாகிய சைத்தியபுருஷன். ஏமாறாது, ஏமாற்றாது. உண்மையிலே உண்மையாக உறைவது.

487. ஓ! இழுக்கும் ஜீவனே! எதையும் சகித்து ஏற்கும் ஆற்றல் பெறுக! அதிலும் இழுக்கும் நோக்குடை சகிப்பின்றி ஏற்பதும் ஏமாற்றுவதே, ஏமாறுதலை விட ஏமாற்றுதல் கொடியது. இதில் தெளிவானால் இழுப்பதின்றி இயல்பாய் இறக்கம் (descent) உமது இருக்கையில் நிகழ்வதை உணர்வாயன்றோ! ஸ்ரீஅன்னையின் குழந்தைகள் உமது நோக்கின்படி ஏமாளியாயினும் நிச்சயம் நித்திய மானவர்களே! நீயோ ஒன்றைப் பிடித்ததால் உனது உண்மையை இழந்தாய். ஆனால் ஸ்ரீஅன்னையின் அன்புக் குழந்தைகளோ! தனது உண்மையும் உனது உண்மையையும் எல்லாம் வல்ல பேருண்மையையும் தனதுள்ளாகிட ஸ்ரீ அன்னையால், ஸ்ரீஅன்னையுள், ஸ்ரீஅன்னைக்காக ஆன அதிமன சைத்திய புருஷனன்றோ! நீயோ அயர்ந்தால் ஸ்ரீஅன்னையின் குழந்தைகளையும், முடிந்தால் ஸ்ரீஅன்னையையே தாண்டிட தயங்காய். அது நடவாது தடுமாறி, தவிடு பொடியாகி சாம்பலாவது, உனக்கு உதவா உணர்வே. உயர்வுறுவது சத்திய ஜீவனே. ஸ்ரீஅன்னையே எல்லாம். எல்லாவற்றுள்ளும் ஸ்ரீஅன்னையே எல்லாம் போல ஸ்ரீஅன்னையல்ல. ஸ்ரீஅன்னைக்காக எல்லாம். ஸ்ரீஅன்னையைப் போல மட்டுமல்ல. ஆழ்ந்திடுக, அடைந்திடுக, அறியாமை அகன்றிடுக. ஸ்ரீஅன்னையை கண்டிடுகவே.

488. ஓ! ஸ்ரீஅன்னையின் குழந்தைகளே நம்மை நாம் உணர்வோம். நம்முள் ஸ்ரீஅன்னையைக் காண்போம். அவளுள் நிலைப்பெறுவோம். ஆனந்த அற்புத பரவசமடைவோம். அருளில் திளைப்போம். ஆற்றலாய் ஆடல் புரிவோம். மாய ஏமாற்று சுயநல இருளை இனங்கண்டு உருமாற்றி ஆன்மசக்திப் பெறுவோம். இருள் ஒளி பெற உதவுவோம். ஆனால் ஒளியை இருளாக்கி இன்னல் விளைவிக்கும் சக்திகளை ஸ்ரீ அன்னையின் கவசமிட்டு அதனுள் உள்ள சைத்திய உடலும் அதிமனமாற்றமடைய துயர், இடர், தோல்வி போன்றவற்றை உருமாற்ற உத்வேகத்தோடு, சைத்திய யுக்தி ஞானத்தோடு வலுவாகி எதிர்த்து வென்றிட அதிமன ஸ்ரீஅரவிந்த அதிமனித இறைவனை நமது சைத்திய அன்னையுள் உருவாக்கி வளர்ப்போம். ஓ ஸ்ரீஅன்னையின் ஆன்ம ஆற்றலே எம்முள் பொங்கி எழுக. சீரும் பஞ்ச பூதங்களை சீராக்குக. உலகு சைத்திய இசைவுற செயலாற்றுக.

489. ஆரோவின் மாத்துரு மந்திரில் உள்ள பூமி போன்ற ஸ்படிக உருண்டையில் ஸ்ரீஅன்னையின் பிரசன்னைத்தை கண்டவர் தனது இருக்கையின் ஜீவனில்

உருவான தூய ஸ்படிகத்துள் ஒளிரும் வெண்ணிற அன்னையை நிரந்தரமாக்கியவராவர். தனது உண்மை உணர்வினை காண்போருக்கே இவ்விரு பிரசன்னமும், பிரகாசிக்கும், உண்மை வழி நடத்தும். அதிமன வாழ்வமைக்கும், வகையறிந்து, வழிபட்டு, வடிவமைத்து வையத்துள் வைர ஒளி ஜீவனாய் வாழ்வாங்கு வாழி வாழி.

490. பண்டை ரிசி, தபசி. யோகி, ஞானியர் தனதுண்மையை கண்டு ஸ்படிக ஜீவனாகி குகை, காடு, வனாந்திரமாக தனதுண்மையின் படி வாழ்ந்தனர். இவ்வித அமைதி அரிய, அகவாழ்வமைக்கவும் ஒட்டு மொத்த கூட்டு அக புற உலகே ஸ்படிக ஜீவனாகிட அவனி மக்களனைவருமே ஆர்வமுடன் ஸ்ரீஅன்னையுள் வாழ்வோமாக. புதுவை ஸ்ரீஅரவிந்த ஆசிரம, ஆரோவில்லின் தரிசன நாட்களிலும், அந்தராத்ம தேவைக்கேற்ப தரிசித்தோ, நிரந்தர வாழ்வை அங்கேயோ அல்லது உலகில் எங்கோ, ஸ்ரீஅரவிந்த அன்னையின் தியானக்கூடம் அமைத்தோ தனித்தோ, தனது ஸ்படிக ஜீவனில் ஒளிரும் ஸ்ரீஅன்னையால் பரிணமித்து அதிமன ஜீவனாகிட சைத்திய இருக்கை வளர்ந்து வலுப்பெற ஸ்ரீஅன்னைக்கு உண்மைத்தொண்டினை வெறும் பேச்சின்றி தெய்வீக செயலாக்குவோமாக.

491. ஒளியில்லா இடத்தை இருள் கவ்வுவது போல ஸ்ரீஅன்னையின் சைத்திய உணர்வற்ற உடலில் பிற கீழ்த்தர இருள் பலவீனமாய உணர்வுகள் மனிதனை கவ்வி அமைதி, நிறைவு, நிம்மதி, இசைவினை இழக்கச் செய்கிறது. மீண்டும் ஸ்ரீஅன்னையை நினைவுக்கூறியோ, அவளின் நூல்களை படித்தோ, தொண்டாற்றியோ, விட்டவைகளை ஸ்ரீஅன்னைக்கு அர்ப்பணித்தோ அருளில் மூழ்கி தன்னிலையறிந்து உண்மை உணர்வுக்குள் உயருகிறார்.

492. பழைய யோகங்கள் பரம்பொருளில், புருஷோத்தமனில் முடிகிறது. ஸ்ரீஅரவிந்த அன்னையின் யோகம் அங்கிருந்தே ஆரம்பிக்கிறது. எல்லையற்றதை சைத்திய எல்லைக்குள்ளாக்குகிறது. அங்குள்ளதே இங்குமாகிறது. ஆனால் சைத்திய புருஷனோ எங்குமாக வியாபித்ததுடன் எல்லாவற்றுடனும் அநாதியானதிடமும், அகப்புற, அருவ உருவ, அப்பாலுக்கும் அப்பாலுள்ள திடமும் தொடர்புறுத்தி புதிய படைப்பினை புவியில் பரிணமிக்க ஸ்ரீஅன்னையால் செய்விக்கப்படுகிறது. தெய்வீக

சித்தத்தையே உருவாக்குகிறது. ஸ்ரீஅன்னையை ஒவ்வொரு அணுவிலும், நுண் உடலிலும், சூட்சும உணர்விலும் உணர உணர தெளிவினை அருளுகிறது.

493. சிலர் ஸ்ரீஅன்னையின் யோகத்தை ஞானயோகம், கர்மயோகம் என்பர். அவர்கள் கண்ட அளவிற்கு சரியே. இது பூரண யோகம் முழுமையான யோகம், வாழ்வனைத்தும் யோகம், ஒருங்கிணைந்த யோகம், ஸ்ரீஅன்னையை நினைத்து, அவளுக்கு அனைத்தும் அர்ப்பணிப்பதிலே அந்த ஜீவன் சைத்திய இருக்கையாவதற்கு எந்தெந்த யோகம் எப்பெப்பொழுது தேவையோ அப்பப்பொழுது அவளே நம்முள் நம்முயற்சியின்றியே செய்விக்கிறாள். ஸ்ரீராமகிருஷ்ணர் குண்டலினி யோகப் பயிற்சியின்றியே காளியன்னை சுண்டு விரலால் தலை முதல்கால் வரை தொட்டவுடன் அந்த அனுபவம் பெறவில்லையா? அவ்வாறே ஸ்ரீஅன்னைக்குரியவருக்கு உரிய தருணத்தில் அகப்புற வளர்ச்சிக்கானதை ஸ்ரீஅன்னையே செய்விக்கிறார்.

494. மாறுபாடு இல்லா, இரு பொருளற்ற, எதிர் சக்தியிலா, பிரிக்க முடியா, ஒன்றாய், ஒருமையாய், ஒரே உண்மையாய் உள்ளதாக ஒருங்கிணைக்கும் இப்புவியில் மானிட உருவில் அவதிரித்த ஸ்ரீஅன்னையே! உலகை துறந்த சித்த புருஷர்களையும், தேவர்களையும், தெய்வ நிலை விரும்பா நாத்திகர்களையும், ஜடவாதிகளையும் அவரவர்களின் உண்மைப் படியே வழிநடத்தி அகப்புற உலகை சைத்திய உணர்வால் ஆன்மீக மாற்றமடையச் செய்து இருமாறுபட்ட உணர்வினை, ஒரே உண்மை உணர்வாக்கி தெளிவித்து, பரிணமிக்கச் செய்து அதிமன உலகிற்கு அவ்வனைத்தையும் அரவணைத்து திருஉரு பெற உழைக்கிறார். ஸ்ரீஅன்னையின் மகிமைதனை அறியும் ஞானமே அலாதியான ஆனந்தமே!

495. ஸ்ரீஅன்னைக்காக முடிவெடுத்த ஜீவனே! உமக்கு உதவி, பாதுகாப்பளித்து, அருளி, ஆசீர்வதித்து உயர்வித்த பின் ஸ்ரீஅன்னைக்காக வாக்களித்ததை மறந்து ஒதுங்குவது ஏனோ? எதிராவதும் ஏனோ? ஏமாற்றுவது உமது வழக்காகலாம் ஆனால் ஏமாருவது ஸ்ரீஅன்னையல்ல அவ்விரண்டும் உமக்கேயாம். அரவணைப்பது ஒன்றே அவள் செயலன்றோ. அழிப்பதல்ல. அன்பானவள்

496. எந்த நட்சத்திரத்தில் பிறந்தாலும் நேரத்தைப் பொறுத்து கிரக சூழ்நிலைகள் மாறுபடுகிறது. பாதிக்கிறது. விதி ஜாதகப்படி, எண்கணிதப்படி, கைரேகைப்படி நிலவுவது புறபாதிப்பாகலாம். ஆனால் இறைவனை இறுகப்பிடித்த மார்க்கண்டேயனையோ, ஓராண்டு ஆயுளையுடைய சத்தியவான்சாவித்திரியாலும், மரணமில்லாப் பெருவாழ்வு ஒளியுடலான அருட்பெருஞ்ஜோதி வள்ளலாரும் இன்னும் எண்ணற்ற தெய்வசாதகரும் விதியை வென்றனர். ஸ்ரீஅன்னையின் ஒளிர் வெண்ணிற ஒளியால் அழியும் நேரம் அழியாத் தன்மைக்குள்ளாகி அமர உணர்வால் ஆன்ம சக்தியால் ஸ்ரீஅன்னையின் விதிக்குட்படா நிலைக்கு உயர்வதால் கிரக கோளாறுகள் ஸ்ரீஅன்னையின் பக்தர்களை பாதிப்பதில்லை. சமய சாஸ்திரங்களும் கட்டுப்படுத்துவதில்லையாம். எல்லாத் தளைகளையும் தகர்த்தவர்கள்அன்றோ.

497. ஸ்ரீஅன்னையின் சைத்தியக்கல்வி நன்கு கற்ற அந்தராத்மா சைத்திய புருஷன் அமைதி காத்து, தனது குறிக்கோளை மறவாது, ஆர்வமுற்று, இரவும் பகலும், அகமும் புறமும் நிகழும் அனைத்தும் நிவேதித்து எவ்வித படபடப்பின்றி விதி, தளைகள் கடந்து சுதந்திர ஒளிப்பறவையாக தானே தனக்கு தலைவனாகி இத்தலைவனும் ஆன்ம தாயான ஸ்ரீஅன்னையிடம் சரணடைய சாதனை பல ஆற்றி ஸ்ரீஅரவிந்த அதிமன படைப்பிற்கு அஸ்திவாரமாக திகழுவோமாக.

498. ஸ்ரீஅன்னையின் யோகத்தை வாழ்வாக்கி செயல்படும் சாதகரின் ஒழுங்கினை, விரதத்தை, தன்னடக்கத்தை, முறையை, காலந்தவறா முறையான தொண்டினை, நெறியான நேர்மையை, கனிவான மலர் முகத்தை, அருளான பார்வையை, பொன்னொளி மிளிரும் தேகத்தை, சுடரான அறிவை, மென்மைக் குரலை, ஆர்பரிப்பற்ற அமைதியை, சைத்திய அன்பான இதயத்தை நோக்கிடும் பக்தர்களின் ஆனந்தக்களிப்பினை தாமும் ஆங்காங்கே ஸ்ரீஅன்னைக்காக ஆர்வமுறும் பாங்கினை என்னென்பதோ?

499. புறபிரபஞ்சத்தில் எண்ணற்ற நட்சத்திரங்களை உடல் பிரபஞ்சத்தில் எண்ணற்ற அணுக்களை சூரியன், சந்திரனை ஒவ்வொரு மனிதனும் நோக்குகிறான். தனிமனித உடலின் ஒவ்வொரு அணுவும் அதிமன

சூரியனையும், சந்திரனைப்போன்ற சைத்திய சூரியனையும் சந்திரனையும் நோக்கிட ஸ்ரீஅன்னை தீர்க்கமான அழிவிலா அதிமன வாழ்விற்கு பரிணமிக்க வாய்ப்பினை அளித்து வழிநடத்துகிறார். அப்போது ஒருவரது உடலிலுள்ள ஒரு அணுக்கூட எண்ணற்ற அணுவாலான கோடிக்கணக்கான மக்களுள்ளும் தானேயாகி, பூமியாகி எண்ணற்ற நட்சத்திரமாகி விஷ்வமான புறப்பிப்பஞ்சமாகவே பரந்து விரிந்து, பெரிதாகி, பேரமைதியுறும் தனிமனிதன் மீது ஸ்ரீஅன்னை காட்டும் கருணைக்கு நம்நன்றி எம்மாத்திரம். ஈடில்லா இனியவளின் இதயத்தில் ஒருதுளி நீரும் கடலில் கலந்து பேரானந்த சமுத்திரமாயிற்றோ!

500. கடலுக்குள் முத்தைப்போல இதய ஆழத்துள் ஸ்ரீஅன்னையை காண்போர் களிப்புறுவர். கனலாவர். கர்மமே கண்ணாவர். ஸ்ரீஅன்னை வழி நடத்தும் தெளிவான காட்சியை கருத்தில் கொண்டு கடமையாற்றுவர். கலங்கிடார்.

501. விலங்கு, மனித அழியும் அன்பு திருவுருப்பெற்று சைத்திய, தெய்வீக, ஆன்மீக, அதிமன அன்பாக ஆக ஸ்ரீஅன்னையின் அருளை நம்முள் கிரகிப்போமாக.

❀ ❀ ❀

# பிழை திருத்தம்

| பக்கம் | ஸ்துதி | பிழை | திருத்தம் |
|---|---|---|---|
| 7 | 39 | நாட்களில் | தரிசன நாட்களில் |
| 11 | 60 | ஸ்ரீஅன்யையின் | ஸ்ரீஅன்னையின் |
| 20 | 105 | இதகாசங்களும் | இதிகாசங்களும் |
| 32 | 164 | சக்கியுள்ளாகி | சக்தியுள்ளாகி |
| 34 | 168 | பசகற்ற | பிசகற்ற |
| 34 | 168 | அன்னை | அன்பை |
| 34 | 169 | கருவிகளாகி | கருவிகளாகிட |
| 35 | 177 | மகத்தும் | மகத்துவம் |
| 36 | 179 | மதத்துவமே | மகத்துவமே |
| 59 | 265 | அடைவெளியில் | இடைவெளியில் |
| 59 | 266 | ஸ்ரீஅரவிந்தரன் | ஸ்ரீஅரவிந்தரின் |
| 60 | 267 | தாமதிப்படை | தாமதிப்பதை |
| 61 | 270 | கருவியால் | கருணையால் |
| 61 | 270 | ஆன்மா | ஜீவன் |
| 61 | 271 | பிரப்பின் | பிறப்பின் |
| 61 | 271 | சித்திதிலே | சித்தத்திலே |
| 61 | 272 | நிலையையனவர் | நிலையானவர் |
| 63 | 280 | நீங்காருக்க | நீங்காதிருக்க |
| 63 | 282 | இருக்க | இருக்கை |
| 65 | 292 | பிரித்தனைகள் | பிரார்த்தனைகள் |
| 67 | 299, 300ஐ சேர்த்துப் படிக்கவும் | | |
| 67 | 300 | சாதகம் | சாதகர் |
| 67 | 300 | அம்மகள் | அம்மக்கள் |
| 67 | 301 | இவருள்ளும் | இருவருள்ளும் |

| பக்கம் | ஸ்துதி | பிழை | திருத்தம் |
|---|---|---|---|
| 67 | 302 | ஸ்ரீஅரவித்தரின் | ஸ்ரீஅரவிந்தரின் |
| 84 | 371 | களாப்பினை | களைப்பினை |
| 85 | 373 | சிதந்தது | சிறந்தது |
| 89 | 387 | உண்மையுள்ள | உண்மையுள் |
| 90 | 394 | பவி | புவி |
| 90 | 394 | சிந்திக்க | சித்திக்க |
| 91 | 396 | சாமனய | சாமான்ய |
| 93 | 402 | ஆசீர்வாததை | ஆசீர்வாத பை |
| 95 | 412 | பிதுபிக்கும் | புதுப்பிக்கும் |
| 96 | 421 | வளர்க | வளர் |
| 100 | 439 | குன்பம் | துன்பம் |
| 102 | 450 | தூய்யுறு | தூய்மையுறா |
| 104 | 461 | ஸ்ரீஅன்னை | ஸ்ரீஅன்னையை |
| 110 | 489 | ஆரோவின் | ஆரோவில்லின் |
| 113 | 496 | விதிக்குட்படா | (தவிர்த்துப் படிக்கவும்) |
| 116 | 4 | Rohima | Rohinima |
| 115 | 2 | Harikukar | Harikumar |
| 118 | 3 | தலைமை | முன்னாள் தலைமை |
| 119 | 5 | பூபாபாலா | பூபாலா |
| 119 | 5 | சீனாவாசன் | சீனுவாசன் |
| 119 | 5 | ஈஸ்வர் | ஈஸ்வரி |
| 119 | 5 | ராமாலக்ஷிமி | ரமாலக்ஷிமி |

...... ஆன்மா என்பது ஆன்மா குடிகொண்டுள்ள மனிதனைக் குறிக்கும்.

மலர்தொண்டு, ஊதுபத்தி, வைகறை சந்தா, கேசட், போட்டோ, ஆசிரம வெளியீடு, புத்தகங்கள், தரிசன நாட்களுக்கு செல்ல, சத்சங்கம், தியானிக்க ..... போன்றவற்றிற்கு விளக்கம் பெற

1. Smt. Thilaga, Chaithanya, Thiriveni, Kanagaraj
   Om! Sri Aurobindo Mira Spritual Fedaration :
   The Mother house,
   No.6, Annai Indira Nagar,
   Pettichettipet Main Road,
   Lawspet (P.O) Pondicherry - 605 008.
   Phone : (0413) 45300

2. Sri. Kasinath, Sri. Marikumar, Sri. Rajaratnam
   Boopala, Jayaram, Harikukar, Jothi
   SriAurobindo Mandir
   The Mother's Spiritual Federation
   Gunduthoppu Gaddalalli
   Sri Aurobindo Road, Kothanur (Post)
   Bangalore - 560 077.
   Phone : (080) 5477927

3. Sri. Jayaprakasam, Sri. Trirumurugan, Sri Mani
   SriAurobindo Meditation Hall
   'Vaikarai Service Society'
   Rasi Nagar, Opp. Mohan Nagar, Salem Steel Plant
   Salem - 636 030.
   Phone : (0427) 483094

4. Smt. Rohima Balasubramaniam
Smt. Jeeva (Madras) and devotees
Om! Sri Aurobindo Mira Spiritural Federation
18, Subramania Layout
Trichy Road, Coimbatore - 641 045
Phone : (0422) 312417

5. Sri. Babu Dhandapani, Smt. Thirumakkal,
Smt. Kabila Madhivellal, Smt. Rajathi
The Mother Mira Spritual Federation
8, Puliyadi Ramasamy Iyer Lane,
Manjana Kara Street, Madurai - 625 001.

6. Sri Aurabino Jothi Spiritual Federation
Sri. Rajamani, Smt. Nagajothi & Devotees
35, V.S.V. Temple Street
Mylapore, Madras - 600 004.
Phone : (044) 4981288

7. Sri. G.V. Krishnan, Smt.Lalitha
Mother's Devotees
Ashok Nagar & Ambatur
Chennai
Phone : (044) 4893997

8. Sri. Ravi, Smt. Ramalakshmi, Ahana,
Sri Aurobindo Bakthi Spiritual Federation
Sri Ganesh Agencies
12-A, North Street
Thiruthuraipoondi - 614 713.
Phone : (04369) 22153

9. Sri. Ganesan, Smt. Veerammal
Sri Aurobindo Pooja House
10, Ramalinga Nagar, (West Extension)
(Behind Sivasakthi Kalyana Mandapam)
Woraiyur, Trichy - 620 003.
Phone : (0431) 762881

10. Sri. V. Jayaprakash, Savithri, Smt. Latha, Aravind
Sri Aurobindo Savithri Spritual Federation
No. 15, Kanniamman Temple Street,
Opp. DSP Office,
Cheyyar
Phone : (04182) 22410

11. Sri. Sakthivel, Sri. Kandasamy, Sri.Ramachandran,
Sri. Rajaram, Mrs. Arthanari
SriAurobindo Sakthi Spiritual Federation
55, MLA Street,
Sithiyankottai (Post)
Authur (Via), Dindigul Dist.

12. Sri Srinivasan & Devotees
Sri Aurobindo Krishna Spiritual Federation
34, Sri Rangan New Street,
Thathakapatti, Salem - 636 006

13. Sri. Sathyamoorthy, Sri. Jaganath Rao, Sri. Divakar
'Om Mira' Spiritual Federation
21, East Bouliward Road,
Trichy - 620 002.

14. Sri. Chandran, Sri. Kamaraj, Smt. Saroja
Astrologer Beddanna Swamy
'Sri Audobindo Mirra Spiritual Federation
Mettupatty, Chinnallapatty (Post)
Dindigul District.

* * *

# ஸ்ரீ அரவிந்தரை ஸ்ரீஅன்னை சந்தித்த நாளின் 75வது ஆண்டு நிறைவு விழா

1914 மார்ச் 29 பாண்டிச்சேரியில் முதன் முறையாக ஸ்ரீஅரவிந்தரை ஸ்ரீஅன்னை சந்தித்த பொன்னாளாகும்.

அந்த நாளின் எழுபத்தைந்தாம் ஆண்டு நிறைவு விழாவை ஒட்டி பாண்டி நகரில் ஸ்ரீஅன்னை, ஸ்ரீஅரவிந்தரின் படங்களை காரில் வைத்து மாலையிட்டு பக்த ஆசிரம சாதகர்கள் ஊர்வலமாக வந்து கடற்கறை காந்தி சிலை எதிர் மைதானத்தில் ஸ்ரீ மாதவ் (M.P) பண்டிட்ஜி ஆன்மிக உரை நிகழ்த்தினார். ஸ்ரீஆசிரம சர்வதேச பள்ளியின் சாதகர் குழு இன்னிசை நிகழ்த்தியது.

ஆசிரம தலைமை டிரஸ்டி ஸ்ரீ துாமான்பாய் அவாகள் திருமூர்த்தி சத்தியம் தமிழில் தயாரித்த ஸ்ரீஅரவிந்த அனனையின் பக்தி பாடல்கள் கேசட்டை வெளியிட்டார். அதை பாண்டி ரேடியோஸ்டேஷன் சேர்மன் ஸ்ரீசந்திரமௌலியும் தலைமை நீதிபதி ஸ்ரீராமலிங்கம் அவர்களும்பெற்றனர். ஓம்! ஸ்ரீஅரவிந்தமிராய நமஹ

இதே விழாவிற்காக பெங்களூர் தமிழ் சங்கத்தில் இவரின் 'ஸ்ரீஅரவிந்தமாதே பக்தி கீதைகளு' என்ற கன்னட கேசட்டை முன்னாள் இந்திய குடியரசு தலைவர் மாண்மிகு நீலம் சஞ்சீவிரெட்டி அவர்கள் வெளியிட முன்னாள்